REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 மே 19 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்
1932 - 2022


வரு. 90 இல. 116 | Thursday 19, May, 2022 | 16பக்கங்கள் | 40/-




ஆளும், எதிர்க்கட்சி இரண்டையும்

## இரண்டு வாரத்தினுள் ஒரு வழிக்கு கொண்டு வருவேன் என பிரதமர் சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



இன்னும் இரண்டு வாரங்களில் அரசாங்க கட்சியை ஒரு நிலைப்பாட்டுக்கு கொண்டு வரமுடியும் என்று தெரிவித்துள்ள பிரதமர் ரணில் விக்ரமசிங்க, இந்த கால அவகாசத்துள் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி என்ற இரண்டு தரப்பையும் ஒரு வழிப்படுத்தமுடியும் என்றும் பிரதமர் நம்பிக்கை

06

எரிபொருள் மற்றும் Gas பெறுவதற்கு

## இரண்டு தினங்களுக்கு வரிசையில் நிற்காதீர்கள்

சபையில் அமைச்சர் கஞ்சன விஜேசேகர

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



இரண்டு தினங்களுக்கு எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயுவை பெற்றுக்கொள்வதற்காக வரிசையில் காத்திருக்க வேண்டாம் என்றும் எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் வழமைபோன்று அந்த விநியோகங்கள் நடைபெறும் என்றும் எரிசக்தி மின்சக்தி

06

## மஹிந்த மற்றும் நாமல் நேற்று பாராளுமன்றத்தில்



முன்வரிசை ஆசனத்தில் அமர்ந்திருந்தார் மஹிந்த

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று பாராளுமன்ற அமர்வுக்கு வருகை தந்திருந்தார்.

பிரதமர் பதவியை இராஜினாமா செய்த பின்னர் அவர் பாராளுமன்றத்திற்கு

06



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார, அரசியல் நெருக்கடியை காரணமாக பயன்படுத்தி

# தேசிய பாதுகாப்பில் அழுத்தங்களை பிரயோகிக்க சில சக்திகள் முயற்சி

ஒன்றுபட்டு முறியடிக்க தேசிய படைவீரர்கள் தினத்தில் ஜனாதிபதி சூளுரை

சுதந்திர நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த மற்றும் அங்கவீனமடைந்த வீர, வீராங்கனைகளுக்கும் மரியாதை செலுத்துவதாக ஜனாதிபதி தெரிவிப்பு

பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டு குழுக்களும் தனிநபர்களும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியை ஒரு காரணமாக பயன்படுத்தி, தேசிய பாதுகாப்பில் அழுத்தங்களைப் பிரயோகிக்க முயற்சிக்கின்றனர் என்பதில் சந்தேகமில்லை. நாம் அதனை ஒன்றுபட்டு முறியடிக்க வேண்டும். அப்போதுதான் துணிச்சலான போர் வீரனின் நாட்டிற்கான அர்ப்பணிப்பு பாதுகாக்கப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

தேசிய படை வீரர் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி விடுத்துள்ள செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து அச்செய்தியில் மேலும்

06

வரலாற்றில் முதற்தடவையாக நேற்று

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் காலிமுகத்திடலில் அனுஷ்டிப்பு



இலங்கை வரலாற்றில் முதல் முறையாக கொழும்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

கொழும்பு காலிமுகத்திடலில் போராட்டம் நடத்தி வரும் பகுதியில் அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளோரால் நேற்று இந்த நிகழ்வு நடத்தப்பட்டது. இதன்போது ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு யுத்தத்தில் உயிரிழந்தவர்களுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

யுத்தத்தில் உயிரிழந்தவர்கள், யுத்தத்தின்போது

06

எனது வீடு 04 மணி நேரமாக எரிந்தது;

## புத்தளம் நகர சபை தீயணைப்பு படை கண்டுகொள்ளவில்லை



எல்லாம் அரசியல் பின்னணி என அலிசப்ரி ரஹீம் MP கவலை

**ஷம்ஸ் பாஹிம், லோரன்ஸ் செல்வநாயகம்**

4 மணிநேரமாக வீடுகளும் சொத்துக்களும் தாக்கப்பட்டு தீவைக்கப்பட்ட போதும் புத்தளம் நகர சபை தீயணைப்புப் படை சம்பவ இடத்துக்கு வரவில்லை.

06

## ராஜீவ் காந்தி கொலை வழக்கிலிருந்து பேறிவாளன் நேற்று விடுதலை

இந்திய உச்ச நீதிமன்றத்தினால் தீர்ப்பு



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றவாளி என அறிவிக்கப்பட்டிருந்த பேறிவாளனை இந்திய உச்ச நீதிமன்றம் நேற்று விடுதலை செய்துள்ளது.

முன்னாள் பிரதமரின் கொலை தொடர்பான குற்றச்சாட்டில் இருந்து தன்னை

06



இலங்கையில் முதலீடு செய்ய வாருங்கள்;

## புலம் பெயர் தமிழருக்கு சஜித் உருக்கமான அழைப்பு

03




## இலங்கையின் நெருக்கடி பிரித்தானியா அவதானம்

தாரிக் அஹமட் பிரபு தெரிவிப்பு

03

எதனோலின் விலை அதிகரிப்பு;

## மதுபான வகைகளின் விலை அதிகரிக்கலாம்



மதுபான உற்பத்தி நிறுவனங்கள் மதுபான விலையை மீண்டும் அதிகரிக்க நடவடிக்கை எடுத்து வருவதாக தெரியவருகிறது.

மதுபான உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் எதனோலின் விலை

06

## மொறட்டுவை மேயர் CID இல் சரணடைவு

வாக்கு மூலம் பெற்ற பின் கைது



காலிமுகத்திடல் தாக்குதல் சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் சரணடைந்த மொறட்டுவை நகர முதல்வர் சமன் லால் கைது

06

## எமது சம்மதத்துடனே CWCயுடன் சஜித் பேச்சு

மனோ கணேசன் தெரிவிப்பு



ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாச, தமிழ் முற்போக்குகூட்டணியுடன் கலந்து பேசி எங்களது ஒப்புதலுடனேயே, இதொகா உடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார் என தமிழ் முற்போக்கு

06

உலக வங்கியிடமிருந்து

## 160 மில். டொலர்களை இலங்கை பெறுகிறது

THE WORLD BANK

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

உலக வங்கியிடமிருந்து இலங்கைக்கு நேற்று 160 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைத்துள்ளதாக பிரதமர் ரணில்

06

நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் உயர்வு;

## மின் வெட்டு நேரங்கள் குறைவடையும் வாய்ப்பு



மழையுடனான காலநிலை காரணமாக, தற்போது அமுலாக்கப்படும் மின் தடை நேரத்தை எதிர்காலத்தில் குறைக்க முடியும் என மின்சார சபையின் சிரேஷ்ட பொறியியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. மழையுடனான காலநிலையால்,

06

விக்கல் வீராச்சாமி



போராட்டங்கள் எண்டு கூறி கடைசியில பள்ளிக்கூட, பல்கலைக்கழக பிள்ளைகளிண்ட படிப்ப நாசமாக்கியதுதான் மிச்சம் போல கிடக்கு....

அதெண்டா உண்மைதான், எல்லாருக்கும் படிப்பின்ர அருமை தெரியாது, இனியாவது நாட்டோட பிள்ளைகளின்ர படிப்பையும் பற்றி சிந்திப்போம்...!!!

FUN BLASTER இடமிருந்து
மாதம் முழுவதும் Fun ஆக இருக்க மிகச்சிறந்த UNLIMITED பக்கேஜ்
Facebook WhatsApp மற்றும் YouTube
உடன் மேலதிக டேட்டா*



ரூ. 347/- மட்டுமே
மேலதிக வரிகள் இல்லை
செயற்படுத்தல் ரீலோட், MyDialog App அல்லது #678# மூலம்
*1GB Anytime Data மற்றும் 1GB Free Night Bonus உள்ளடக்கப்பட்டுள்ளது
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது
SD (360p) Video தரத்தினை வழங்குகின்றது
4G SIM அட்டையுடன் 4G ஒருஅவசியமாகும்
Dialog எதிர்காலம் இன்றே.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில்:

# தற்போதுள்ள 5 அமைச்சர்களுடனும் இன்று பேச்சுவார்த்தை நடத்த முடிவு

## உலக வங்கியிடமிருந்து கிடைத்த 160 மில்லியன் டொலர் எரிபொருள் கொள்வனவுக்கு செலவிடப்படும்

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் தற்போதுள்ள 5 அமைச்சர்களுடனும் இன்று விசேட பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார் .

அதே வேளை, ஆளும் கட்சி எதிர்க்கட்சி என்றில்லாமல் இணைந்து பயணிப்பது அவசியம் என தெரிவித்த பிரதமர், பொருளாதார நெருக்கடி தொடர்பான நடவடிக்கைகளில் எதிர்க்கட்சியினரும் பங்கேற்க முடியும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

அதேவேளை சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் நட்பு நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக தெரிவித்த அவர், உலக வங்கியிடமிருந்து தற்போது 160 மில்லியன் டொலர் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவற்றை எரிபொருள் கொள்வனவிற்காக பயன்படுத்த தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று கவனயீர்ப்பு கேள்வியொன்றுக்குப பதிலளிக்கும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

துறைமுகத்திற்கு எரிபொருள் கப்பல்கள் வந்திருந்தாலும் காலநிலை சூழ்நிலை காரணமாக எரிபொருளை விநியோகிப்பதற்கான செயற்பாடுகளில் பிரச்சினைகள் நிலவுகின்றன.

அதற்கு தீர்வு காணும் வகையில் லொறிகள் மூலம் எரிபொருளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட வுள்ளது. அதற்காக தேவையான லொறிகளை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



நிதி நெருக்கடியை நிவர்த்தி செய்யும் வகையில் உலக வங்கியிடமிருந்து எமக்கு தற்போது 160 மில்லியன் டொலர் நிதி கிடைக்கப்பெற்றுள்ளது. மேலும் நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அரசாங்க ஊழியர்களுக்கு பிரச்சினைகளை எதிர்நோக்க நேர்ந்தால் அவர்களுக்கு உதவிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் பெரும் பாதிப்புகளை எதிர் நோக்கி வருகின்றனர். அவர்கள் தமது தொழில்களை இழந்துள்ளனர். எரிபொருள் விநியோகத்தில் அவர்களுக்கு முன்னுரிமையளிக்கப் பட வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைக்காக ஆலோசனைக் குழு அமைப்பது தொடர்பில் முன்னாள் நிதியமைச்சர் அலி சப்ரி நடவடிக்கைகளை மேற் கொண்டிருந்தார். அந்த செயற்பாடுகள் தொடரப்படும்.

நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் தற்போதுள்ள அறிக்கைகள் தவறானதாக காணப்படுகின்றன. அவற்றை சரி செய்து அடுத்த வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் சபையில் மேலும் தெரிவித்தார்.(ஸ)





திருவாவடுதுறை ஆதீனம் சென்னையில் உள்ள இலங்கை துணை உயர் ஸ்தானிகராலயத்திற்கு வருகை தந்தார். அவரை துணை உயர் ஸ்தானிகர் டாக்டர் டி. வெங்கடேஷ்வரன் வரவேற்றார். ஆதீனம், இலங்கை மக்களுக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து, மிஷன் வளாகத்தில் ஒரு சிறப்பு பூஜையையும் நடத்தினார்.

# சாதாரண உணவை எமக்கும் தாருங்கள் அதற்கு பணம் செலுத்தவும் தயார்

## அனைவரதும் கையொப்பத்துடனான கடிதம் சபாநாயகருக்கு கையளிப்பு

### முன்னாள் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது சொகுசு வாழ்க்கைக்காக பாராளுமன்றத்தை பயன்படுத்துவதாக மக்கள் மத்தியில் ஒரு தவறான எண்ணம் காணப்படுவதாக முன்னாள் அமைச்சர் ரமேஷ் பத்திரன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அந்த தவறான எண்ணத்தை நிவர்த்தி செய்வதற்காக பாராளுமன்றத்தில் சாதாரண விலையில் சாதாரண உணவை எமக்கும் வழங்குமாறு அனைத்து உறுப்பினர்களும் கையொப்பமிட்டு நாம் சபாநாயகருக்கு கடிதம் ஒன்றை கையளித்துள்ளோம் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர்களது தமது குடும்பத்தினரையும் கூட்டி வந்து அவர்களுக்கு பாராளுமன்றத்தில் விருந்துபசாரம் நடத்துவதாக தப்பான எண்ணம் சமூகத்தில் பரப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர், மக்கள் உண்மை நிலையை தெரிந்து கொள்வதில்லை என்றும்சுட்டிக்காட்டினார். அது தொடர்பில் அவர் சபையில் நேற்று மேலும் தெரிவிக்கையில்:



பாராளுமன்றத்தின் 225 உறுப்பினர்கள் மீது மக்களுக்கு ஆத்திரம் உள்ளது.

மக்கள் கஷ்டப்படும் போது அவர்கள் பாராளுமன்றத்தில் விருந்து போன்று உணவருந்தி சொகுசாக வாழ்கிறார்கள் என்பதே அதற்குக் காரணம்.

அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது குடும்பத்தோடு பாராளுமன்றத்திற்கு வந்து உணவருந்தி செல்வதாகவும் அவர்கள் தப்பான அபிப்பிராயத்தை கொண்டுள்ளனர். அந்த எண்ணத்தை நிவர்த்தி செய்ய வேண்டும் என்றும் அவர் சபையில் மேலும் தெரிவித்தார்.

# சனத் நிஷாந்த, மிலன் ஜயதிலக்கவுக்கு 25 ஆம் திகதி வரை விளக்கமறியல்



படம்: சுலோச்சன கமகே

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களான சனத் நிஷாந்த மற்றும் மிலன் ஜயதிலக்க ஆகியோரை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

காலிமுகத்திடலில் ஈடுபட்ட மக்கள் மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் அமல் சில்வா மற்றும் மொரட்டுவ மாநகர சபை ஊழியர் ஒருவரும் எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# பிரதமர் அலுவலகத்தின் செலவீனங்களை குறைக்க தீர்மானம்

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனைக்கு அமைவாக பிரதமர் அலுவலகத்தின் செலவீனங்களை குறைப்பதற்கு பிரதமர் அலுவலகம் தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய பிரதமர் அலுவலகத்தின் செலவீனங்களை நூற்றுக்கு 50 வீதமாக குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், செலவீனங்களை குறைத்து ஏனைய அரச நிறுவனங்களுக்கு முன்மாதிரியாக செயற்பட வேண்டும் என பிரதமர் தனது அலுவலக பணியாளர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஏனைய அரச நிறுவனங்களிலிருந்து திருப்பி அனுப்பிவைக்கப்பட்ட 26 உத்தியோகத்தர்கள் தங்களது நிறுவனங்களுக்கே திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன், 16 வாகனங்களும் மீள அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நடந்து முடிந்த சம்பவங்கள் ஒரு முன்னோட்டம் மட்டுமே

### அமைச்சர் டலஸ் அழகப்பெரும சபையில் அறிவுறுத்து

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



நடந்து முடிந்த சம்பவங்கள் ஒரு முன்னோட்டம் மட்டுமே. எமது செயற்பாடுகளில் மாற்றம் ஏற்படாவிட்டால் அது முழு திரைப் படமாக அரங்கேறுவதை தவிர்க்க முடியாது என முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த அழிவுகளோடு நாம் ஒன்றிணையாவிட்டால் மோசமான நிலையை சந்திக்க நேரும். நாட்டின் எதிர்காலம் தொடர்பில் கவனம் செலுத்தி எமது எண்ணத்தை மாற்றிக் கொள்ள வேண்டும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

தீர்மானம் எமது கையிலே உள்ளது பாராளுமன்றத்தில் 225 பேரும் இதனைப் புரிந்து கொண்டு செயற்படுவது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

83 ல் நடைபெற்ற அழிவிற்குப் பின்னர் மிக மோசமான அழிவு இது வாகும்.அந்த நிலைக்கு நாட்டு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர் என்பதை நாம் உணர வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே முன்னாள் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

பாராளுமன்றத்திலும் வெளியிலும் எமது செயற்பாடுகள் இந்த ஆர்ப்பாட்டங்களின் பொதுவான அடிப்படையாக உள்ளது.

பிள்ளைகள் இல்லாத நாடு போன்று நாம் செயற்பட்டு வருகின்றோம்.சொத்துக்கள்போனால்அதனை பெற்றுக் கொள்ளலாம் ஆனால் எமது பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக் குறியாகி விடக்கூடாது. எமது செயற்பாடுகள் அவர்களின் எதிர்காலத்தை பாதித்து விடக்கூடாது.

எமது பிள்ளைகள் 6 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை எழுதவுள்ளனர் அவர்கள் சுதந்திரமாக அதனை மேற்கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுப்பதே எமது கடமையாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஆளும்கட்சி எதிர்க்கட்சி என்றில்லாமல் அனைவருக்கும் பொறுப்பு உள்ளது அந்த பொறுப்பை நாட்டில் உள்ள அனைவரும் எதிர்பார்த்து காத்துள்ளனர்.மக்கள் மாற்று ஏற்பாடுகளுக்கு செல்ல முடியும்.

கொழும்பின் பல பகுதிகளுக்கு

# வார இறுதியில் 10 மணிநேர நீர் வெட்டு

கொழும்பின் பல பகுதிகளில் வார இறுதியில் 10 மணிநேர நீர் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக நீர் வழங்கல் சபை தெரிவித்துள்ளது.

அந்த வகையில் சனிக்கிழமை (21) இரவு 10 மணி முதல் ஞாயிற்றுக்கிழமை (22) காலை 8 மணி வரை நீர் விநியோகம் தடைப்படும் என நீர் வழங்கல் சபை தெரிவித்துள்ளது.

கொழும்பு 12,13,14 மற்றும் 15 ஆகிய பகுதிகளில் நீர் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதுடன், கொழும்பு 1 மற்றும் 11 ஆகிய பகுதிகளுக்கு குறைந்த அழுத்தத்தில் நீர் விநியோகம் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பராமரிப்பு பணிகள் காரணமாக இந்த நீர் வெட்டு அமுல்படுத்தப்படுவதாக நீர்வள சபை மேலும் தெரிவித்துள்ளது.

# ஜூனில் 65,000 மெட்ரிக் தொன் யூரியா இறக்குமதி செய்யப்படும்!

இந்திய கடன் திட்டத்தின் கீழ் அடுத்த மாதம் முதல் வாரத்தில் 65,000 மெட்ரிக் தொன் யூரியாவை இறக்குமதி செய்ய திட்டமிட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் விவசாயிகளுக்கு சேதன உரங்களுக்கு மேலதிகமாக யூரியா உரமும் வழங்கப்படும் என விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், 80,000 மெட்ரிக் தொன் சேதன உரங்கள் உள்ளூர் விவசாய நிலங்களுக்கு சிறு போகத்திற்காக விநியோகிக்கப்பட்டுள்ளன.

4 மில்லியன் லீற்றர் உயிர் திரவ உரங்களும் 3 மில்லியன் லீற்றர் சேதன திரவ உரங்களும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக விவசாய திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த மக்களுக்காக:

# தமிழ் தேசிய கூட்டமைப்பு சபையில் மௌன அஞ்சலி

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த மக்களை நினைவு கூர்ந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று சபையில் ஒரு நிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தினர்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறை சம்பவங்கள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராத லிங்கம், முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த எமது மக்களை நினைவு கூர்ந்து எனக்குரிய நேரத்தில் ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்த அனுமதி தாருங்கள் என சபாபீடத்திற்கு தலை தாங்கியவரிடம் கோரிவிட்டு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினார்.

வினோநோகராதலிங்கம் எம்.பி.யுடன் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., கருணாகரன் எம்.பி. ஆகியோரும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தினர்.

அதனையடுத்து ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய ஆளும் தரப்பு புத்தளம் மாவட்ட எம்.பி. யான சிந்தக மாயாதுன்ன, அவர் தமிழ் மொழியில் பேசினார். அதன் மொழி பெயர்ப்பே எமக்கு விளங்கியது. அதன் மூலம் இவர்கள் நந்திக்கடலில் கொல்லப்பட்ட பயங்கரவாதிகளுக்கே மௌன அஞ்சலி செலுத்தியுள்ளனர் என்பது புரிகிறது. எனவே இவ்விடயத்தை ஹன்ஸாட்டிலிருந்து நீக்க வேண்டும் என்றார்.

அப்போது சபைக்கு தலைமை தாங்கிக்கொண்டிருந்த பிரேமலால் தொலவத்த எம்.பி. இவ்விடயம் தொடர்பில் நான் சபாநாயகரின் கவனத்துக்கு கொண்டு செல்வேன். அவர் அது தொடர்பில் கவனம் செலுத்துவார் என குறிப்பிட்டார்.

# இலங்கைக்கு ரூ.9 கோடி மதிப்புள்ள நிவாரண பொருட்கள்

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**

இலங்கைக்கு தமிழ்நாடு அரசு சார்பில் முதற்கட்டமாக ரூ.9 கோடி மதிப்புள்ள நிவாரண பொருட்கள் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப் பட்டது. சென்னை துறைமுகத்தில் புதன்கிழமை மாலை கப்பலை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து அனுப்பி வைத்தார்.

இலங்கை வரலாற்றில் இல்லாத அளவுக்கு பொருளாதார சிக்கலில் தவித்து வருகிறது. இதனையடுத்து தமிழக பேரவையில் இலங்கை தமிழர்களுக்கு உதவிடும் வகையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் ஒட்டுமொத்த இலங்கை மக்களுக்காக, ரூ.80 கோடியில் 40,000 தொன் அரிசியும், ரூ.28 கோடி மதிப்பில் உயிர் காக்கக்கூடிய 137 மருந்துப் பொருட்களும், 15 கோடி ரூபாய் மதிப்பிலான குழந்தைகளுக்கு வழங்க 500 தொன் பால்மாவும் வழங்க தமிழக அரசு முனைப்புடன் இருப்பதாக பேரவையில் முதல்வர் அறிவித்தார்.



திமுக உள்ளிட்ட பல்வேறு கட்சி நாடாளுமன்ற மற்றும் சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்கள் ஒரு மாத ஊதியத்தை இலங்கை மக்களுக்கு வழங்கினர். இதில் முதல்வர் மற்றும் எந்த தலைவர்களின் படமும் இடம் பெறவில்லை. ஒன்றிய மற்றும் மாநில அரசின் முத்திரை மட்டுமே இடம் பெற்றுள்ளது.

இதில் சிறப்பு நிகழ்வாக இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படும் அத்தியாவசியப் பொருட்களின் மாதிரித் தொகுப்பினை இலங்கை துணைத் தூதர் முனைவர் வெங்கடேசுவரனிடம் முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்.

# கொழும்பு விஹார மகாதேவி பூங்காவில் கொவிட் தடுப்பூசி

கொழும்பு விஹார மகாதேவி பூங்காவில் கொவிட் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் இன்று முதல் செயற்படுத்தப்படும் என்று இலங்கை இராணுவம் அறிவித்துள்ளது.

திங்கட்கிழமை முதல் சனிக்கிழமை வரையான ஆறு நாட்களிலும் காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை கொவிட் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் நிலந்த பிரேமரத்ன தெரிவித்தார்.

20 வயதுக்கு மேற்பட்டவர்களும் 4வது கொவிட் தடுப்பூசியைப் பெற விரும்புபவர்களுக்கும் இங்கு கொவிட் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 மே 19 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 04.34
லுஹர் - 12.08
அஸர் - 03.30
மஃரிப் - 06.20
இஷா - 07.34

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் வைகாசி 5
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



எம்.பிகள் வீடுகளுக்கு தீ வைத்தது தொடர்பில்

## கைதான 400 பேரில் 150 பேர் ஜே.வி.பி ஆதரவாளர்கள்

### அருந்திக்க பெர்னாண்டோ எம்.பி

**(லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்)**



எம்.பிகளின் வீடுகள் மீது நடத்திய தாக்குதல்களுடன் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஜே.வி.பிக்கு தொடர்புள்ளது. அதற்கான ஆதாரங்களும் எம்மிடம் உள்ளன.

இது தொடர்பில் அந்தக் கட்சிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னாள் ராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்ணாந்து நேற்று சபையில் கோரினார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் கிராம மட்டத்தில் இரு கட்சிகளுக்கும் தொடர்புள்ள தலைவர்கள் உள்ளனர். அவர்கள் தொடர்பில் நியாயமாக விசாரணை நடத்தி அவர்களை கட்சியில் இருந்து அகற்ற வேண்டும். அவர்கள் தொடர்பான ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன. ஜே.வி.பி தலைவர்களின் வழிகாட்டல்களுடனே இந்த தாக்குதல்கள் நடந்ததாக கருதுகிறோம்.

நான் அரசியலின் ஊடாக 5 சதம் கூட தவறாக சம்பாதித்துகிடையாது. ஆனால் எனது அனைத்து சொத்துக்களும் அழிக்கப்பட்டன.

எனவே தவறான முன்மாதிரியை காண்பிக்க வேண்டாம் என கோருகிறோம் 1988,89 போன்ற நிலையை ஏற்படுத்த முயலக் கூடாது என்றார்.

நான் பொலிஸ்மா அதிபருடன் பேசினேன். கைதுசெய்யப்பட்ட 400 பேரில் 150 பேர் ஜே.வி.பி ஆதரவாளர்கள் என அவர் குறிப்பிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

## பாராளுமன்ற அதிகாரத்தை அதிகரிப்பதே அரசின் நோக்கம்

### அமைச்சரவை நியமனத்தின் பின் ஏற்பாடு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



பாராளுமன்றத்திற்குள்ள அதிகாரத்தை அதிகரிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அந்த வகையில் பாராளுமன்றத்திற்குள்ள அதிகாரத்தை அதிகரித்து அனைத்து அமைச்சுக்களுக்கும் மேற்பார்வை குழுக்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று மாத்தறை மாவட்ட எம்.பி புத்திக பத்திரன எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கேள்விக்கு பதிலளித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, மேற்பார்வை குழுக்களை அமைப்பதற்கு முன் அமைச்சரவை தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டும் என கேட்டுக் கொண்டார். அதன் போது எழுந்த சபை முதல்வர் தினேஷ் குணவர்தன:

மேற்பார்வைக் குழுவை செயற்படுத்துவதற்கு ஜனாதிபதியும் பிரதமரும் அனுமதி வழங்கியுள்ளனர். அனைத்து அமைச்சுக்களுக்கும் மேற்பார்வை குழு அமைக்கப்பட்டுள்ளது.

அதற்கான நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும். சபாநாயகர் மற்றும் கட்சித் தலைவர்கள் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வர்.

எவ்வாறெனினும் அமைச்சரவை நியமிக்கப்பட்ட பின்னரே அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## யுத்த வெற்றி தினத்தில் வீரர்களுக்கு பதவி உயர்வு



யுத்த வெற்றி தினத்தை (மே 18) முன்னிட்டு அடுத்த நிலைக்கு தகுதியுடைய 396 அதிகாரிகள் மற்றும் 8,110 சிப்பாய்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

முப்படைகளின் தளபதியும் அதிமேதகு ஜனாதிபதியுமான கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் பாதுகாப்புப் பதவி நிலை பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வாவினால் இவ்வாறு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

நேற்று (18) முதல் அமுலுக்கு வரும் வகையில் இவ்வாறு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை கடற்படையின் 74 அதிகாரிகள் மற்றும் 2,010 சிப்பாய்களுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

தாக்குதலுடன் தொடர்புபடுத்தி காட்ட முயற்சி

## எந்த சுயாதீன விசாரணைக்கும் முகங்கொடுக்க ஜே.வி.பி தயார்

**(லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்)**



எம்.பிகளின் வீடுகள் மீதான தாக்குதலுக்கு ஜே.வி.பிக்கு தொடர்பு இருப்பதாக காண்பிக்க சிலர் முயல்கின்றனர். எந்த ஒருவிசாரணைக்கும் ஜே.வி.பி தயாராக உள்ளது என ஜே.வி.பி தலைவர் அநுர குமார திசாநாயக்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

1989 ஆம் ஆண்டின் பின்னர் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து அரசியலில் இணைந்து ஜனநாயக கட்டமைப்பை பலப்படுத்தி வருகிறோம். அன்று முதல் எமது கட்சி ஆதரவாளர்கள் பலரும் கொல்லப்பட்டார்கள்.ஆனால் நாம் ஒரு கல்லை கூட அடிப்பதற்காக எடுக்கவில்லை.

அமைதியாக நடந்த ஆர்ப்பாட்டகாரர்கள் மீது நடந்த தாக்குதலினால் தான் இந்த நிலை ஏற்பட்டது. அங்கு பல்வேறு கட்சிகளுடனும் தொடர்புள்ளோர் உள்ளனர். வன்முறைகளை நாம் ஒருபோதும் ஆதரிக்கவில்லை. எம்.பிகளின் வீடுகள் மீதான தாக்குதல் தொடர்பில் அநுராதபுரம், கேகாலை, உட்பட பல பகுதிகளில் கைது செய்யப்பட்டாலும் அதில் ஒரு ஜே.வி.பி உறுப்பினர் கூட கிடையாது. சுயாதீனமாக எந்த விசாரணைக்கும் முகங்கொடுக்க எமது கட்சி தயாராக உள்ளது.

9 பேர் மண்ணெண்ணெய் வரிசையில் உயிரிழந்தனர். பசளை பிரச்சினையால் விவசாயம் அழிந்தது. அதனால் மக்கள் வேதனையுடனும் கோபத்துடனும் இருந்தனர். 1988 இல் எனது வீடும் தீக்கிரையானது. அந்த வேதனையை நானும் உணர்வேன். நாம் எந்த விசாரணைக்கும் தயாராக இருக்கிறோம் என்றார்.

இலங்கையில் முதலீடு செய்ய வாருங்கள்

## புலம் பெயர் தமிழருக்கு சஜித் உருக்கமான அழைப்பு

### உண்டியல் முறையை தவிர்க்கவும் ஆலோசனை

**(லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்)**

தற்போதைய நெருக்கடி நிலையில் இருந்து மீள்வதற்காக இலங்கையில் முதலீடு செய்ய வருமாறு சகல டயஸ்போராக்களிடமும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் நேற்று கோரிக்கை விடுத்தார். அத்தோடு வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்கள் தமது பணத்தை உண்டியல் போன்ற முறைகளில் அல்லாமல் நேரடியாக அனுப்புமாறும் அவர் அழைப்பு விடுத்தார். மக்கள் நலன் சார்ந்த விடயங்களில் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட நாம் தயாராக இருப்பதாவும் எதிர்க்கட்சித்தலைவர் இதன்போது தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிடுகையில்,

புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்க முன்வருமாறும் அரசின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைக்குமாறும் பிரதமர் அழைப்பு விடுத்தார். மக்களின் நலனுடன் தொடர்புள்ள விடயங்களுக்கு ஒத்துழைக்க எமது தரப்பு தயாராக உள்ளது.

அவசர சிகிச்சை பிரிவுகள் மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. அவற்றுக்குத் தேவையான உபகரணங்களை வழங்க எமது கட்சி திட்டமிட்டுள்ளது. எதிர்க்கட்சியாக எமது ஒத்துழைப்பை வழங்க இருக்கிறோம். உயிர்காப்பு மருந்துகளின் தட்டுப்பாடு காணப்படுகிறது. அவற்றை முழுமையாக வழங்க எமக்கு வசதி இல்லை. முடிந்த உதவிகளை வழங்குவோம்.

தலைவர்களை மதிக்க எனது தந்தை கற்றுத் தந்துள்ளார். எனது முன்னாள் தலைவரான புதிய பிரதமருக்கு உதவ

06

## US டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

### மே 12 வரை 44.3%த்தால் வீழ்ச்சி



இவ்வாண்டு தொடக்கத்தில் இருந்து மே 12ஆம் திகதி வரை அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 44.3 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

குறிப்பாக, இந்த ஆண்டு மார்ச் மாத தொடக்கத்தில் இருந்து செலாவணி விகிதம் கணிசமாக குறைந்துள்ளதாக மத்திய வங்கி வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கை தெரிவிக்கிறது.

இதேவேளை, அந்நியச் செலாவணி பற்றாக்குறை காரணமாக கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக உணவு பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலையும் கடுமையாக அதிகரித்துள்ளது.

எரிபொருள் பற்றாக்குறை மற்றும் நீண்ட நேர மின்வெட்டும் தொடர்கின்றது. மருந்து பொருட்களுக்கும் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் மருத்துவ துறையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக ஒரு வருடத்திற்கு முன்பு இருந்ததை விட தற்போது 30 வீதம் அதிகமாக உணவுக்காக மக்கள் பணத்தை செலுத்த நேரிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான நிலையிலேயே, இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து மே 12ஆம் திகதி வரை அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 44.3 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## வீடுகளை இழந்த எம்.பிகளுக்கு வீடுகள் வழங்க முன்னுரிமை அளிக்கக் கூடாது

### தாக்குதலுடன் ஐ.ம.ச ஆதரவாளர்கள் தொடர்புபட்டிருந்தால் கடும் நடவடிக்கை

**(லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்)**

எம்.பிகளின் வீடுகளை தாக்கி அழித்த அனைவரையும் கைது செய்து கடுமையான தண்டனை வழங்க வேண்டும் எனவும் தனது கட்சி ஆதரவாளர்கள் இதனுடன் தொடர்புபட்டிருந்தால் தமது கட்சி உரிய நடவடிக்கை எடுக்கும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வீடுகளை இழந்த எம்.பிகளுக்கு வீடுகள் வழங்குவதற்கு முன்னுரிமை வழங்காமல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.



பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர்,

பிரதமர் பதவி விலகுவதை முன்னிட்டு நடந்த கூட்டத்தின் பின்னர் தான் வன்முறை வெடித்தது. எம்.பி ஒருவர் கொல்லப்பட்டார். 30 நாட்களுக்கு மேல் அமைதியாக நடந்த ஆர்ப்பாட்டத்தின் மீதான தாக்குதலின் பின்னரே வன்முறை வெடித்தது. 9 ஆம் திகதி நடைபெற்ற அசம்பாவி தங்களுடன் தொடர்புள்ள அனைவரையும் கைது செய்து கடுமையான தண்டனை வழங்க வேண்டும்.

எம்.பிகளுக்கு வீடுகள் வழங்க முன்னுரிமை வழங்குவதாக வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறியிருந்தார். ஆனால் கேஸ் வெடிப்பு, வயல் நிலங்கள் சேதம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவே அரசாங்கம் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

வீடுகள் அழிக்கப்பட்டதற்கு எதிராக சர்வதேச பாராளுமன்றத்திற்கு செல்ல வேண்டும் என பந்துல குணவர்தன கோரினார். மனித உரிமை ஆணைக்குழுவுக்கு செல்ல வேண்டும் என்றார். ஆனால் தமிழ் ஊடகவியலாளர்கள் காணமல் போனதற்கு எதிராகவும் லசந்த கொல்லப்பட்டதற்கு எதிராகவும் அங்கு சென்றவர்களை தேசத்துரோகிகள் என்றார்கள்.

காலிமுகத்திடலிலும் அலரிமாளிகைக்கு அருகிலும் நடந்த தாக்குதலின் பின்னரே வன்முறை வெடித்தது. அந்த தாக்குதலுக்காக மாலை நடந்து தாக்குதலை நியாயப்படுத்த முடியாது.

எமது கட்சியினர் தாக்குதல்களில் தொடர்புபட்டிருக்கவில்லை. அவ்வாறு யாராவது தொடர்பட்டிருந்தால் அவர்களுக்கு கட்சி அடிப்படையில் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுப்போம். எமது கட்சி வன்முறைகளுடன் தொடர்புபட்ட கட்சி அல்ல என்றார்.

## இலங்கையின் நெருக்கடி பிரித்தானியா அவதானம்

### தாரிக் அஹமட் பிரபு தெரிவிப்பு

இலங்கையில் உணவுப்பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரம் உட்பட அனைத்து நிலைமைகளையும் உன்னிப்பாக அவதானித்து வருவதாக பிரிட்டனின் வெளிவிவகார பொதுநலவாய அமைச்சர் தாரிக் அஹமட் பிரபு தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கையின் கடன் நிலை தொடர்ந்தும் தாங்கிக்கொள்ள முடியாத விடயம் என சர்வதேச நாணயநிதியம் மதிப்பிட்டுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் கடனை பேண்தகு நிலைக்கு மாற்றுவதற்கு அவசியமான சீர்திருத்தங்கள் நிதி உதவிகள் குறித்து சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்படும் பேச்சுவார்த்தைகளை வரவேற்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தற்போதைய நெருக்கடி திடீரென உருவாகவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற குழுக்களுக்கு

## ஹர்ச, இரான், கபீரை நியமிக்க பிரதமரிடம் சஜித் கோரிக்கை

### பிரதமர் சாதகமான பதில்

**(லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்)**

கோப்,கோபா உள்ளிட்ட முக்கிய பாராளுமன்ற குழுக்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தி பிரதான நிபுணர்களான ஹர்ச டி சில்வா, இரான் விக்ரமரத்ன மற்றும் கபீர் ஹாசிம் ஆகியோரை நியமிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பிரதமரிடம் கோரிக்கை விடுத்தார்.

06





இறையடி சேர்ந்த உலக ஷாதுலிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் சங்கைக்குறிய அஷ்ஷெய்ஹ் அஜ்வாத் அப்துல்லாஹ் அல் பாஸி அல் மக்கி அஷ் ஷாதுலி (ரஹ்) அலைஹி மற்றும் சீனன் கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசலில் அடங்கப்பட்டுள்ள அத்மீக ஞானி மௌலவி முஹம்மத் உதுமான் லெப்பை, ஆலிம் (ரஹ்) அலைஹி ஆகியோர் பெயரிலா கத்தமுல் குர்ஆன் மஜ்லிஸ் சீனன் கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசலில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலீபஷ் ஷாதுலி மௌலவி அஸ் ஸெய்யித், அலவி மௌலானா (முர்ஸி), அஷ் ஷெய்க் இஹ்ஸானுத்தீன், அபுல் ஹஸன் (நளீமி) ஆகியோர் உரையாற்றுவதையும் பங்குபற்றியோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: பேருவளை விசேட நிருபர்)

## லயன்ஸ் கழகத்தின் சர்வதேச, மாவட்ட மாநாடுகள் ஆரம்பம்



லயன்ஸ் கழகத்தின் சர்வதேச வருடாந்த மாநாடும், மாவட்ட மட்ட 17 ஆவது வருடாந்த ஒன்றுகூடலும் எதிர்வரும் (22) ஞாயிற்றுக்கிழமை கொழும்பு தாஜ்சமுத்ரா ஹோட்டலில் நடைபெறவுள்ளது. கழகத்தின் மாவட்டத் தலைவர் ரொஷான்யாப்பா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கௌரவ அதிதிகளாக லயன்ஸ் கழகத்தின் இஸ்மத் ஹமீட், கழகத்தின் முன்னாள் மாவட்ட ஆளுநர் லசந்த குணவர்தன ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

காலை எட்டு முப்பது மணிக்கு வர்த்தக சம்மேளனக் கூட்டம் ஆரம்பமாவதுடன்,மாலை மூன்று முப்பது மணிக்கு மாவட்ட மாநாடும் நடைபெறவுள்ளது.மேலும், இந்நிகழ்வில் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நடைபெறுவதுடன் இராப்போசன விருந்தும் வழங்கப்பட உள்ளது.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 251.46 | 267.85 |
| கனடியன் டொலர் | 279.08 | 291.91 |
| யூரோ | 385.89 | 401.40 |
| ஜப்பான் யென் | 2.7810 | 2.8886 |
| சிங்கப்பூர் டொலர் | 262.54 | 271.61 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 448.89 | 468.16 |
| சுவிஸ் பிராங்க் | 365.24 | 379.01 |
| அமெரிக்க டொலர் | 361.72 | 374.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 967.44 | கட்டார் ரியால் | 99.83 |
| குவைத் டினார் | 1,188.53 | சவூதி ரியால் | 97.24 |
| ஓமான் ரியால் | 947.41 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 99.30 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் வைகாசி மாதம் 05ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷவ்வால் பிறை 17



### குறள் தரும் சிந்தனை

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்

*ஊழ் என்பது வெல்ல முடியாத ஒன்று என்பார்கள். சோர்வில்லாமல் முயற்சி மேற்கொள்பவர்கள் அந்த ஊழையும் தோல்வி அடையச் செய்வார்கள்.*

## நாட்டை கட்டியெழுப்புவதற்கான ஆக்கபூர்வமான ஆலோசனைகள்

நாடு முகம்கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் அதன் விளைவாகத் தோற்றம் பெற்றுள்ள அரசியல் நெருக்கடி என்பன நாட்டின் ஸ்திரத்தன்மைக்கும் உறுதிப்பாட்டுக்கும் பெரும் சவாலாக அமைந்து விடக் கூடிய அச்சுறுத்தலைத் தோற்றுவித்துள்ளன. அதனால் இந்த இரண்டு நெருக்கடிகளுக்கும் விரைவாகவும் வேகமாகவும் தீர்வு காணப்பட வேண்டிய அவசியம் உணரப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அழைப்பை ஏற்று பிரதமர் பதவியை ஏற்றுக் கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இவ்விரண்டு நெருக்கடிகளதும் ஆழ அகலம் குறித்து கடந்த 16 ஆம் திகதி நாட்டு மக்களுக்கு உரையாற்றும் போது எடுத்துகூறினார். அத்தோடு அந்நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளையும் அவர் முன்னெடுத்துள்ளார். குறிப்பாக பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில் நேச நாடுகளதும் சர்வதேச அமைப்புகளதும் உதவி, ஒத்துழைப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகளை அவர் பதவி ஏற்றதைத் தொடர்ந்து ஆரம்பித்துள்ளார்.

இப்பேச்சுவார்த்தைகளின் போது நேசநாடுகள் இலங்கையை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுப்பதற்குத் தேவையான உதவி ஒத்துழைப்புகளை நல்குவதாக உறுதியளித்துள்ளன. அந்த வகையில் இந்தியா இப்பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கையை மீட்டெடுப்பதற்கு ஆரம்பம் முதல் எரிபொருள், மருந்துப் பொருட்கள் உள்ளிட்ட பல உதவி, ஒத்துழைப்புகளை நல்கி வருவதோடு தற்போது 60 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியாவையும் அனுப்பி வைத்துள்ளது. உலக வங்கி 160 மில்லியன் அமெரிக்க டொலர்களை நேற்று வழங்கியுள்ளது.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணவென முன்னெடுக்கப்படும் முயற்சிகளுக்கு சாதகமான பிரதிபலிப்புகள் கிடைக்கப் பெறத் தொடங்கியுள்ளன. என்றாலும் இப்பொருளாதார நெருக்கடிக்கு கட்சிகளாகப் பிரிந்து நின்று தீர்வு தேட முடியாது. இந்நெருக்கடியில் இருந்து மீட்சி பெற தற்போது முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளில் அற்ப அரசியல் இலாபம் தேடும் செயற்பாடுகளில் எவரும் ஈடுபடுவது நல்லதல்ல. நாடு முகம் கொடுத்திருப்பது தேசிய பொருளாதார நெருக்கடி அன்றி வேறில்லை. அதன் தாக்கங்களுக்கும் பாதிப்புகளுக்கும் இன, மத, பிரதேச பேதங்களுக்கு அப்பால் எல்லா மக்களுமே முகம் கொடுத்துள்ளனர்.

அதன் காரணத்தினால் இவ்வாறான பிரச்சினைக்கு கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டு தீர்வு தேடுவது அவசியம். அதுவே மக்களின் எதிர்பார்ப்பாகும், அவ்வாறான நடவடிக்கையின் ஊடாகவே நாடும் மக்களும் இந்நெருக்கடியில் இருந்து விரைவாகவும் உறுதியாகவும் மீட்சி பெற முடியும்.

இருந்த போதிலும், இந்நெருக்கடியான சூழலிலும் சிலர் அற்ப அரசியல் இலாபம் தேடும் செயற்பாடுகளில் ஈடுபடக் கூடியவர்களாக உள்ளனர். இது எவ்விதத்திலும் நியாயப்படுத்தக் கூடிய செயற்பாடு அல்ல.

இவ்விதமான செயற்பாடுகளின் விளைவாகவே பாராளுமன்றத்தையே குறைகூறும் அளவுக்கு நிலைமை உருவாகியுள்ளது. இவ்வாறான நிலைமை நீடிப்பதற்கு இடமளிக்கக் கூடாது. ஏனெனில் அது பாராளுமன்ற ஜனநாயகத்தில் மக்கள் நம்பிக்கை இழக்கும் நிலைமையைக் கூட ஏற்படுத்தி விடலாம். இது ஆரோக்கியமானதல்ல.

இப்பின்னணியில்தான் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, 'தற்போது நாட்டில் உருவாகியுள்ள சிக்கல் நிலைக்கு தீர்வு காணும் பொருட்டு அனைத்துக் கட்சிகளதும் பங்களிப்புடன் தேசிய சபை அல்லது அரசியல் சபை உடனடியாக அமைக்கப்பட வேண்டும்' என்று வலியுறுத்தினார். இதே கோரிக்கையை அவர் பாராளுமன்றத்திலும் நேற்றுமுன்தினம் முன்வைத்தார்.

இவ்வாறான சபையொன்றை அமைப்பதன் ஊடாக நாட்டில் நவீன யுகத்திற்கு பொருத்தமான அரசியல் கலாசாரத்தை உருவாக்கக் கூடியதாக இருக்கும். அக்கலாசாரமானது நாடு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் அனைத்துத் தரப்பினரும் ஒன்றுபட்டு செயற்படுவதற்கு வழிவகுப்பதாக அமையும். அவ்வாறான ஒன்றுபட்ட கலாசாரத்தையே மக்களும் எதிர்பார்க்கின்றனர். அதன் ஊடாக நாடும் மக்களும் நன்மைகள் பெற்றுக் கொள்ளுவர்.

ஆகவே நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளவும் பாராளுமன்றத்தை மக்கள் குறைகூறுவதைத் தவிர்த்து பாராளுமன்ற ஜனநாயகத்தை வலுப்படுத்திக் கொள்ளவும் புதிய பிரதமரின் யோசனை பெரிதும் வழிவகுக்க முடியும் என்பதில் ஐயமில்லை. அதனால் சகல கட்சிகளையும் உள்ளடக்கிய சபை நாட்டை அபிவிருத்திப் பாதையிலும் இட்டுச் செல்ல முடியும். அதுவே நாட்டின் தேவையும் எதிர்பார்ப்பும் ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# நாட்டின் இறையாண்மைக்காக தமதுயிரை தியாகம் செய்தோருக்காக தேசிய போர்வீரர் தினம் அனுஷ்டிப்பு

தனிநாடு கோரி சுமார் மூன்று தசாப்தங்களாக போராடி வந்த விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை வெற்றி பெற்றதையடுத்து, மூன்று தசாப்த கால மோதலின் முடிவை ஒட்டுமொத்த தேசமும் மே 18, 2009 அன்று கொண்டாடியது.

நாட்டின் இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் சுதந்திரத்திற்காக தமது பொன்னான உயிர்களை தியாகம் செய்த இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் தேசபக்தியுள்ள போர்வீரர்களின் நேசத்துக்குரிய நினைவுகளை மரியாதையுடன் நினைவுகூரும் தினமே தேசிய போர்வீரர் தினமாகும் (வெற்றி தினம்).

2009 மே மாதத்திற்கு முன்னர் இராணுவத்தின் வீரமிக்க போர்வீரர்கள் (23,962), கடற்படை (1160), விமானப்படை (443), 2598 பொலிசார் மற்றும் 456 சிவில் பாதுகாப்பு திணைக்களப் பணியாளர்கள் என மொத்தம் 28,619 பேர் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் உயிர்த் தியாகம் செய்துள்ளனர். அவர்களின் வீரம், விலைமதிப்பற்ற தியாகம் மற்றும் தன்னலமற்ற அர்ப்பணிப்புக்காக அன்றைய தினம் ஒவ்வொரு ஆண்டும் மரியாதையுடன் நினைவு கூரப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தோல்விக்கு வழிவகுத்தது இலங்கை ஆயுதப் படைகள் என்பது மறுக்க முடியாத, மறுக்க முடியாத உண்மை. படையினரின் அர்ப்பணிப்பு காரணமாக, இலங்கை பிரஜைகளாகிய சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர்கள் மற்றும் ஏனைய அனைவரும் இப்போது நிம்மதியான வாழ்க்கையை அனுபவித்து வருகின்றனர்.





மேலும் வடமாகாணத்தில் உள்ள பல பெற்றோர் விடுதலைப் புலிகளால் பலவந்தமாக கட்டாயப்படுத்தப்பட்ட வயதுக்குட்பட்ட பிள்ளைகள் உட்பட தமது பிள்ளைகளை பற்றி பயப்பட வேண்டியதில்லை என்பதையும் மறந்து விட முடியாது. இவ்வாறானதொரு சூழலில் வெற்றி தினம் புரிந்து கொள்ளப்பட வேண்டியதுடன் பாராட்டப்பட வேண்டியதும், கொண்டாடப்பட வேண்டியதுமாகும். இது நாட்டிலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய சமூகங்களுக்கு கிடைத்த பாரிய வெற்றியாகும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இவ்வாறு நாட்டின் இறையாண்மைக்காக மனிதாபிமானமான இறுதி யுத்தத்தில் சிறப்பாகச் செயல்பட்ட படைப்பிரிவுகளில் 58 வது படைப்பிரிவு மிக முக்கியமாக திகழ்வதுடன் அன்று அப்படைப்பிரிவின் தளபதியான தற்போதைய பாதுகாப்பு பதவிநிலை பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா அவர்கள் தனது படையினரை சிறப்பாக வழிநடத்தி பிரிவினைவாத செயல்பாடுகளில் இருந்து நாட்டினை விடுவிப்பதில் மிகமுக்கிய பங்கினை வகித்தார்.

பயங்கரவாதிகளின் கொடூரமான பிடியில் இருந்து ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களை விடுவிப்பதன் மூலம் புதுமாத்தளனில் மிகப் பெரிய பணயக்கைதிகள் மீட்பு பணியையும் அவரது பிரிவு நடத்தியது.

இவ்வாறு இனம், மதம், அரசியல் பேதமின்றி நாட்டின் இறையாண்மை, பிரதேச ஒருமைப்பாடு மற்றும் சுதந்திரத்திற்காக தியாகம் செய்தவர்களை இலங்கையர்கள் இந்த வெற்றி தினத்தன்று பெருமிதத்துடன் கௌரவிக்கின்றனர்.

**எம்.எஸ்.எம் நஜாத்...**
*இராணுவ ஊடக பணிப்பகம், இராணுவத் தலைமையகம்*

# ஐம்பது ஆண்டு கால இலக்கியப் பயணம்: இதுவரை நாற்பதுக்கு மேற்பட்ட நூல்கள்

உழைக்கும் வர்க்கத்தின் பெருமை பேசும் மே மாதம் 12 ஆம் திகதியுடன் 83 வயதைப் பூர்த்தி செய்துள்ளார் இலக்கிய உலகின் ஈடிணையற்ற உழைப்பாளியான ஆ.மு.சி.வேலழகன். ஒப்பற்ற சாதனைகளுக்குச் சொந்தக்காரராய் திகழ்பவர் அவர். மட்டக்களப்பு மாவட்டத்தின் திருப்பழுகாமம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயியான அவர், திருக்குறள் பெருமை போற்றுவதில் தன் வாழ்நாள் முழுவதும் எழுத்துப் பணி செய்து வருகின்றார்.

பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களால் 'சாரதி அல்ல பாரதி' எனப் போற்றப்பட்டவர். பேராசிரியர் சிவத்தம்பி முதல் பல படைப்பாளிகளும் வியந்து பாராட்டி அணிந்துரைகள் எழுதிச் சிறப்பித்த படைப்பாளி என எண்ணற்ற பெருமைகளுக்குச் சொந்தக்காரர்.

1939.05.12 இல் சின்னத்தம்பி, வள்ளியம்மை தம்பதியரின் மகனாகப் பிறந்த இவரது இயற்பெயர் வேல்முருகு. தமிழின் மேல் கொண்ட பற்று காரணமாக வேலழகன் ஆனார். 1952 முதல் திராவிட இயக்க சிந்தனைகளின் பால் ஈர்க்கப்பட்டு, சாதியற்ற சமத்துவ சமுதாய மறுமலர்ச்சியில் ஆர்வம் கொண்டு, 1963இல் தனது பிறந்த ஊரை விட்டு வெளியேறினார்.

இ.போ.சவில் சாரதியாக இணைந்து கொண்டு, 32 வருடங்களுக்கு மேல் தனது தொழிலில் பல்வேறு இன்னல்கள் மத்தியில் சாதனைகள் பல புரிந்து சாரதி பயிற்றுனராய் ஓய்வு பெற்றார். தான் பணிபுரிந்த மட்டக்களப்பு சாலையில் 1985 காலப்பகுதியில் உயரதிகாரிகளின் ஒத்துழைப்புடன் படிப்பகம் ஒன்றினை ஆரம்பித்தார். 'செண்பகம்' எனும் பெயரில் கையெழுத்து சஞ்சிகையும் வெளியிட்டார். பல்வேறு விழாக்களை முன்னின்று நடத்தினார்.

1972 இல் இவரது முதல் நூலான 'தீயும் தென்றலும்" வெளிவந்தது. இந்த வருடம் அவரது வெளியீட்டு பயணத்தில் பொன்விழா வருடமாகும். இதுவரை 07 கவிதைத் தொகுப்புக்கள், 06 சிறுகதைத் தொகுப்புக்கள், 10 நாவல்கள், 03 குறுநாவல்கள், 05 உரைநூல்கள், 05 வரலாற்று நூல்கள், 05 ஆய்வுநூல்கள் என 40க்கு மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.



## 83 வயதிலும் சாதனைகள் படைத்து வரும் ஆ.மு.சி.வேலழகன்

இவருடைய வாழ்க்கை வரலாற்றினை 'மானிடநேயன் ஆ.மு.சி.வேலழகன்' எனும் பெயரில் க.பிரபாகரன் (அதிபர்) எழுதியுள்ளார். 2014 இல் இவரது பவளவிழாவினை முன்னிட்டு பல்வேறு கவிஞர்கள் எழுதிய கவிதைகள் தொகுக்கப்பட்டு 'சந்தனக்காடு' எனும் பெயரில் வெளியிடப்பட்டது.

செல்லும் இடமெல்லாம் திருக்குறளை முதன்மைப்படுத்துவதோடு 'திருக்குறள் முன்னணிக் கழகம்' எனும் பெயரில் மன்றங்களை நிறுவி அந்தந்த ஊரில் கலை, இலக்கிய நாட்டமுள்ள இளைஞர்களை ஒன்றிணைத்து அவர்களை ஊக்குவிப்பார். அதுமட்டுமன்றி மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத்தின் மீளுருவாக்கம், மட்டக்களப்புத் தமிழ் எழுத்தாளர் பேரவை, வாழைச்சேனை தமிழ் கலை இலக்கிய மன்றம் எனப் பல இலக்கிய அமைப்புக்களின் உருவாக்கத்தில் பாரிய பங்களிப்பினை வழங்கியுள்ளார்.

கவிஞன், தென்றல், செங்கதிர், ஞானம், ஜீவநதி போன்ற சஞ்சிகைகளில் அன்புக்காக சில படைப்புக்களை எழுதியுள்ளாரே தவிர, அதற்கு முன்பும் பின்பும் வேறெந்தப் பத்திரிகைகளிலும் அவர் எழுதியதில்லை.

தனக்கென ஒரு பாணியினை வகுத்துக் கொண்டு தான் பிறந்து வளர்ந்த பிரதேசத்திலும் அதனை அண்டியுள்ள சூழலிலும் வாழ்ந்த, வாழ்கின்ற மக்களின் வாழ்வியல், விவசாயத் தொழில் சார்ந்த சமுதாயத்தின் கட்டமைப்பு வளர்ச்சிப்படிநிலைகளை பிரதேச மொழிநடையிலேயே எழுதி படிப்போரை வியக்கவும் நயக்கவும் செய்வதில் வல்லவர் அவர்.

கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் தேசிய அளவில் சிறந்த நாவல்களுக்கு பரிசு வழங்கி வருகின்ற 'பெயார்வே' நிறுவனத்தினால் 2018 இல் நடத்தப்பட்ட விழாவில் வேலழகனின் 'பனிச்சையடி முன்மாரியும் சட்டக்கிணறும்' எனும் நாவலும் தேர்வு செய்யப்பட்டு ஒரு இலட்சம் பரிசு பெற்றது. அதுபோன்று இலங்கை அரசின் கலாபூஷண விருது, சாஹித்திய விருது மாகாணமட்டத்திலான முதலமைச்சர் விருது, ஆளுநர் விருது மற்றும் பல்வேறு இலக்கிய அமைப்புக்கள் இவரது படைப்புக்களை பாராட்டி பல விருதுகளை வழங்கியுள்ளன.

இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் பல மாணவர்கள் இவரது படைப்புகளை ஆய்வு செய்து பட்டங்கள் பெற்றுள்ளனர். இளைஞர்களை ஊக்குவிப்பதில் என்றும் தளராமல் இயங்கிவரும் ஆ.மு.சி. இன்னும் பல ஆண்டுகள் நலமுடன் வாழ்ந்து இலங்கைத் தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்க்க வேண்டும் என வாழ்த்துவோம்.

**எஸ்.ஏ.ஸ்ரீதர்...**
*(வாழைச்சேனை)*

# எனது நன்றிக்குரியவர்களின் பட்டியல் மிகவும் நீண்டது

எனது சட்டப் போராட்டத்திற்கு உதவிக்கரமாக இருந்த அனைத்து ஊடக நண்பர்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் உட்பட அனைவரையும் நேரில் சந்தித்து நன்றி தெரிவிப்பேன். எனக்கு ஆதரவாக இருந்த அனைவருக்கும் நன்றி.

இவ்வாறு நேற்று விடுதலையான பேரறிவாளன் தெரிவித்தார்.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பேரறிவாளனை விடுதலை செய்து உச்சநீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்கியது. இதனையடுத்து பேரறிவாளன் கருத்துத் தெரிவித்ததாவது:

'அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்'

அதாவது கெட்டவர்கள் மகிழ்ச்சியாக வாழ்வது; நல்லவர்கள் துன்பத்தில் இருப்பது ஆகிய இரண்டையும் இந்த உலகம் நினைத்துப் பார்க்கும். ஏன் என்றால் இது இயற்கை நீதி கிடையாது. நல்லவர்கள் வாழ வேண்டும். கெட்டவர்கள் வீழ வேண்டும் என்பதைதான் இந்தக் குறளில் வள்ளுவர் கூறுகிறார்.

31 ஆண்டு கால சிறை வாழ்க்கையில் தமிழ்நாட்டு மக்கள் மற்றும் உலகத் தமிழர்கள் அனைவரும் என்னை ஆதரித்தார்கள்.



**'ஒரு சாமானியன் உள்ளே மாட்டிக் கொண்டால், அது மிகப் பெரிய துன்பமான சட்டப் போராட்டமாக இருக்கும் என்பதற்கு நான்தான் எடுத்துக்காட்டு' என்கிறார் விடுதலை பெற்ற பேரறிவாளன்**

அன்பு செலுத்தினார்கள். தங்களின் வீட்டு பிள்ளையாக என்னை நினைத்தார்கள்.

இதற்கு முக்கிய காரணம் எனது அம்மா. அம்மாவின் தியாகம், போராட்டம். ஆரம்ப காலங்களில் அம்மா நிறைய அவமானங்களைச் சந்தித்துள்ளார். நிறைய புறக்கணிப்புகளை சந்தித்துள்ளார். இதை எல்லாம் மீறித்தான் 31 ஆண்டு காலம் இடைவிடாமல் போராடினார். எங்களின் பக்கம் உள்ள உண்மை எங்களுக்கு வலிமையைக் கொடுத்தது.

'தாய்' நாவலை 4 முறை வாழ்க்கையில் படித்துள்ளேன். 18 வயது, சிறைக்குச் சென்ற பிறகு, தூக்கு கிடைத்த பிறகு என்று ஒவ்வொரு காலகட்டத்திலும் இந்த நாவலைப் படித்துள்ளேன். ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு உணர்வை அந்த நாவல் கொடுத்துள்ளது. அதன் பிறகு இந்த நாவலுடன் எனது அம்மாவை ஒப்பிடத் தொடங்கினேன். எனது குடும்பத்தின் போராட்டம் இல்லாமல் இந்த வெற்றியை பெற்றிருக்க முடியாது.

இது என் அம்மா, எனது குடும்பத்தின் போராட்டம் மட்டும் இல்லை. எல்லா காலகட்டங்களில் பலர் எங்களுக்காக உழைத்துள்ளார்கள். ஆதரவு தெரிவித்துள்ளார்கள். அரசின் ஆதரவு மற்றும் மக்களின் ஆதரவை உருவாக்கியது எனது தங்கை செங்கொடியின் தியாகம்தான்.

தியாகரஜன் ஐ.பி.எஸ், நீதிபதி கே.டி. தோமஸ் ஆகியோரின் தீர்ப்புகள்தான் என்னை இங்கு கொண்டு வந்து நிறுத்தியுள்னே. நீதிபதி கிருஷ்ண ஐயர் எனக்காக பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார். நினைத்துக் கூட பார்க்க முடியாத வழக்கறிஞர்களை எல்லாம் எனக்காக அமர்த்திக் கொடுத்துள்ளார். மூத்த வழக்கறிஞர் கோபால் சங்கர நாரயாணன் 6 ஆண்டுகள் எந்தத் தொகையும் வாங்காமல் எனக்காக வாதாடியுள்ளார். தமிழக அரசு, ராகேஷ் திரிவேதி உள்ளிட்ட அரசியல் அமைப்பு சட்ட வல்லுநர்களை வைத்து வாதாடி, இந்தத் தீர்ப்பை பெற்றுத் தர காரணமாக இருந்தார்.

இப்படி நான் நன்றி சொல்ல வேண்டியவர்களின் பட்டியல் நீண்டது. வாய்ப்பு கிடைக்கும் போது அனைவருக்கும் நேரில் நன்றி சொல்வேன். இந்த நீதியமைப்பு முறையில் திறம்பட சட்டப் போராட்டத்தை நிகழ்த்தினால் நாம் ஏதோ ஒரு கட்டத்தில் வெற்றியடைய முடியும். ஒரு சாமானியன் இதுபோன்ற வழக்கில் உள்ளே மாட்டிக் கொண்டால், அது மிகப் பெரிய துன்பமான சட்டப் போராட்டமாக இருக்கும் என்பதற்கு நான்தான் எடுத்துக்காட்டு.

இப்போதுதான் வெளியே வந்து உள்ளேன். இப்போதுதான் மீண்டு வந்துள்ளேன். கொஞ்சம் மூச்சு விட வேண்டும்.


இவ்வாறு பேரறிவாளன் தெரிவித்தார்.

(திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)

# 31 வருடங்களுக்கு பின்னர் வெற்றி பெற்ற ஒரு பரிதாபத் தாயின் பாசப் போராட்டம்!

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பேரறிவாளனை விடுதலை செய்து உச்சநீதிமன்றம் நேற்று அதிரடித் தீர்ப்பு வழங்கி உள்ளது. உச்சநீதிமன்றம் தனக்கு உள்ள அதிகாரத்தை பயன்படுத்தி, வழக்கில் 142வது பிரிவைச் செயல்படுத்தி பேரறிவாளனை விடுதலை செய்துள்ளது. உச்சநீதிமன்ற நீதிபதிகள் எல் நாகேஸ்வர ராவ், போபண்ணா மற்றும் பிஆர் கவாய் ஆகியோர் தீர்ப்பு வழங்கி உள்ளனர்.





முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்த பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரின் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டிருந்தது.

இவர்களின் கருணை மனு அப்போது நிலுவையில் இருந்தது. நீண்ட காலம் கருணை மனு நிலுவையில் இருப்பது அநீதிக்கு சமமானது. தன்னை விடுவிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து பேரறிவாளன் 2016 இல் மனுதாக்கல் செய்து, அதன்பின் உச்ச நீதி மன்றத்தில் மேன்முறையீடு செய்து இருந்தார்.

தமிழ்நாடு அரசு இயற்றிய தீர்மானத்திற்கு ஆளுநர் ஒப்புதல் அளித்து தன்னை விடுவிக்க வேண்டும் என்று அவர் மனுவில் குறிப்பிட்டார். தமிழ்நாடு அமைச்சரவையின் தீர்மானத்தை தமிழ்நாடு ஆளுநர் ஏற்காமல் காலம் தாழ்த்தி வந்த நிலையில், பேரறிவாளன் மனுதாக்கல் செய்தார். உச்ச நீதிமன்றத்தில் கடந்த சில வாரங்களாக வழக்கில் விசாரணை நடந்து வந்த நிலையில் கடந்த 11 ஆம் திகதி விசாரணை முடிந்தது.

இந்த வழக்கில் தமிழ்நாடு அரசு வைத்த வாதத்தில், 'தண்டனை கைதி ஆயுள்தண்டனை பெற்று இருக்கிறார். சட்டப்படி ஆயுள்தண்டனை பெற்ற கைதிகளை விடுவிக்கும் சக்தி குடியரசுத் தலைவருக்குக் கிடையாது. அது மாநில அரசுக்கு மட்டுமே உள்ளது. ஆளுநர் அமைச்சரவை முடிவிற்கு கட்டுப்பட்டவர். அவர் அதில் முடிவு எடுக்க வேண்டும். மாறாக 3 வருடமாக ஒரு முடிவை கிடப்பில் போடக் கூடாது. விடுதலை செய்யும் அமைச்சரவை தீர்மானத்தை ஆளுநர் குடியரசுத் தலைவருக்கு அனுப்ப முடியாது. இந்த விவகாரத்தில் அவர்கள் அரசியல் சாசனத்தின் அடிப்படையை அழித்து விட்டனர். கருணை மனு மீது முடிவெடுக்கும் அதிகாரம் மத்திய அரசுக்குத் தான் உள்ளது என எங்கும் குறிப்பிடப்படவில்லை' என்று குறிப்பிட்டிருந்தது.

அதேவேளை மத்திய அரசு வைத்த வாதத்தில், 'பேரறிவாளன் வழக்கில் தண்டனை குறைக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு மட்டுமே உள்ளது. ஏற்கனவே அவரின் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டு விட்டது. அவருக்கு ஏற்கனவே ஒரு நீதி சலுகை வழங்கப்பட்டு விட்டது. இதனால் மீண்டும் அவரின் தண்டனையை குறைக்கக் கூடாது. இந்த வழக்கு மத்திய புலனாய்வு அமைப்பு விசாரித்த வழக்கு. இதன் காரணமாக அதில் குடியரசுத் தலைவர் முடிவு எடுக்கவே அதிகாரம் உள்ளது. ஆளுநர் ஏற்கனவே குடியரசுத் தலைவருக்கு இந்த மனுவை அனுப்பி விட்டார். இதனால் அவர்தான் இதில் முடிவு எடுக்க வேண்டும்' என்று குறிப்பிட்டது.

இதில் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் வைத்த வாதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டனர்.

"ஆளுநர் எப்படி மாநில அமைச்சரவை எடுக்கும் முடிவை குடியரசுத் தலைவருக்கு அனுப்பலாம்? பேரறிவாளன் ஆயுள் தண்டனை கைதி என்பதால் அவரின் விடுதலையில் ஆளுநர்தான் ஒப்புதல் அளிக்க வேண்டும். அவர் குடியரசுத் தலைவருக்கு அனுப்பியது தவறு. இந்திய கூட்டாச்சி தத்துவத்திற்கே இது எதிரானது. பேறிவாளனை யார் விடுதலை செய்வது என்ற அதிகார மோதலுக்கு இடையில் பேரறிவாளன் ஏன் சிக்கித் தவிக்க வேண்டும்? அவரை ஏன் நாங்களே விடுதலை செய்யக் கூடாது? அமைச்சரவை முடிவு எடுத்த விவகாரத்தில், ஆளுநர் முடிவெடுக்க வேண்டிய அவசியமே இல்லை. இந்த விவகாரத்தில் ஆளுநரின் அதிகாரம் குறித்து முடிவெடுக்கப் போகிறோம்".

## இந்திய சட்டத்தையே அசைக்க வைத்த உச்சநீதிமன்றத் தீர்ப்பு

இவ்வாறு உச்சநீதிமன்றம் கூறியது.

"பேரறிவாளன் ஏற்கனவே சிறையில் 30 வருடம் இருந்து விட்டார். அவர் அங்கேயே படித்தும் விட்டார். அவரின் நடத்தையில் எந்தப் பிரச்சனையும் இல்லை. நீங்கள் விடுதலை செய்யும் வரை காத்திருக்காமல் நாங்களே ஏன் விடுதலை செய்யக் கூடாது?" என்று உச்ச நீதிமன்றம் மத்திய அரசுக்கும், தமிழ்நாடு ஆளுநருக்கும் கடுமையான கேள்விகளை எழுப்பியது.

இந்த நிலையில் உச்சநீதிமன்ற நீதிபதிகள் பேரறிவாளனை விடுதலை செய்வதாக தீர்ப்பு வழங்கினர். இந்திய வரலாற்றில் உச்ச நீதிமன்றம் இது போன்ற தீர்ப்பை வழங்குவது மிகவும் அரிதாகும். நீதிபதிகள் வழங்கிய தீர்ப்பில், "பேரறிவாளன் வழக்கில் ஆளுநர் செய்த தாமதம் நீதிமன்ற பரிசீலனைக்கு உட்பட்டது. அவரின் விடுதலை மீது ஆளுநர் முடிவு எடுக்காமல் காலம் தாழ்த்தியது. 28 மாதங்கள் இதில் முடிவு எடுக்காமல் இருந்தது தவறு. அவர் காலதாமதம் செய்தது தவறு. இதனால் அவரை விடுதலை செய்கிறோம்" என்று கூறியுள்ளது.



இது ஒருபுறமிருக்க 31 ஆண்டு காலம் மகனைக் காக்க நீதிமன்ற படியேறி போராடிய தாயின் போராட்டம் வென்றுள்ளது. எமனிடம் இருந்து கணவன் சத்யவான் உயிரை மீட்டார் சாவித்திரி என்று புராணக் கதைகளில் படித்திருப்போம். கடந்த 31 ஆண்டுகாலமாக சிறைவாசம் அனுபவித்து வந்த மகனை போராடி மீட்டிருக்கிறார் அற்புதம்அம்மாள்.

களைத்துப் போன முகம், கால்களில் இறப்பர் செருப்பு, கண்ணாடி, வெள்ளை முடி, தோளில் ஒரு பை... இதுதான் அற்புதம்மாள் குறித்த அடையாளமாக இருக்கும். தனது மகனின் உயிரைக் காக்கவும், சிறையில் இருந்து விடுவிக்கவும் அவர் பயணித்த பாதைகள் கல்லும் முள்ளும் நிறைந்தவை. ராஜிவ் காந்தி கொலை வழக்கில் தன் மகன் கைது செய்யப்பட்டான் என்ற செய்தி கேட்டு 32 ஆண்டுகள் ஆகி விட்டது. இதோ, முதல்முறையாக தன் மகனுக்கு விடுதலை கிடைத்து விட்டது என்ற தீர்ப்பை கேட்டு மகிழ்ச்சியில் இருக்கிறார் அந்தப் பெண்.

அவரது 32 ஆண்டுகால போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது.

கணவர் குயில்தாசனுடன் அன்பு, அறிவு, அருள் என மூன்று குழந்தைகளுடன் வசித்து வந்தார் அற்புதம்மாள். சென்னை பெரியார் திடலில் தங்கி, பட்டயப் படிப்பு படித்துவந்தார் பேரறிவாளன். அப்போதைய பிரதமர் ராஜிவ் காந்தி கொல்லப்பட்டதும், பேரறிவாளனை சி.பி.ஐ விசாரணைக்கு அழைத்தது. விசாரணைக்குப் பிறகு பூந்தமல்லி சிறையில் அடைக்கப்பட்டார் பேரறிவாளன்.

பேரறிவாளன் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட பிறகு, தன் வாழ்க்கையே மாறியதாக குறிப்பிட்டுள்ளார் அற்புதம் அம்மாள். சிறையில் அடைக்கப்பட்டிருந்த மகனைப் பார்க்க வேண்டும் என்றால், ஜோலார்பேட்டையில் இருந்து சென்னைக்கு வந்து, சி.பி.ஐ அதிகாரிகளிடம் அனுமதி வாங்கி, மீண்டும் பூந்தமல்லி சென்று அங்கு காத்திருந்து பார்க்க வேண்டும். பல நாட்கள் பேரறிவாளனைப் பார்க்காமலேயே திரும்பியிருக்கிறார் அற்புதம்மாள்.

அதன் பிறகு தொடங்கியது அற்புதம்மாளின் நீதிப் போராட்டம். அவர் ஏறாத நீதிமன்றம் இல்லை, போகாத ஊரே இல்லை. அந்த அளவுக்கு சட்டத்தை நம்பி தன்னுடைய போராட்டத்தை தொடர்ந்தார் அற்புதம்மாள். பேரறிவாளனுக்கான பாசப்போராட்டத்தில், முதல் வெற்றி பெற்ற இடம் முன்னாள் சி.பி.ஐ அதிகாரி தியாகராஜனின் மனமாற்றம்தான். ஒரு தாயின் போராட்டம் என்ன செய்யும் என்றால், குற்ற உணர்ச்சியில் இருந்த அதிகாரியின் மனசாட்சியை தட்டி எழுப்பி, உண்மையை வெளிக்கொண்டு வரும்.

அற்புதம்மாளின் போராட்டம் அதைத்தான் செய்தது. சி.பி.ஐ அதிகாரி பேரறிவாளனிடம் நடத்திய விசாரணையில், 'எனக்கு எதுவும் தெரியாது' என பேரறிவாளன் கூறியதை வாக்குமூலத்தில் தவிர்த்ததை சி.பி.ஐ அதிகாரி தியாகராஜனே ஒப்புக் கொண்டார்.

"இது என் தவறுதான் என தியாகராஜன் வாக்குமூலம் தந்தார். ராஜிவ் காந்தி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட மகன் பேரறிவாளனுக்காக அமைச்சர்கள், தமிழக முதல்வர்களை சந்தித்தார் அற்புதம்மாள். எப்படியாவது மகன் வீடு வர வேண்டும் என்ற போராட்டம் தொடர்ந்து கொண்டே இருந்தது. தூக்குத் தண்டனை ரத்து செய்யப்பட்டது.

அற்புதம் அம்மாளின் தொடர் போராட்டத்தால், பேரறிவாளன் உட்பட இந்த வழக்கில் சிறையில் இருக்கும் 7 பேரையும் விடுதலை செய்ய வேண்டும் என தமிழக அரசு மத்திய அரசுக்கு கடிதம் எழுதியது. இந்த வழக்கில் தமிழக ஆளுநர் முடிவெடுப்பார் என்று மத்திய அரசு தெரிவித்தது. தமிழக அரசு ஆளுநருக்கு மீண்டும் இதை பரிந்துரைத்தது. அதற்காக முதல்வரை நேரில் சந்தித்து நன்றி சொன்னார் அற்புதம்மாள்.

சிறுநீரகப் பிரச்சனை ஏற்பட்டதால், பேரறிவாளனுக்கு முதன்முறையாக பரோல் வழங்கப்பட்டது. அப்போது தனக்குப் பிடித்ததை, மகனுக்குப் பிடித்ததை ஆசை ஆசையாய் செய்து கொடுத்து பாசமாய் பார்த்துக் கொண்டார். 10ஆவது முறையாக பேரறிவாளனுக்கு பரோல் நீடிக்கப்பட்டது. தன்னை விடுதலை செய்யக் கோரி பேரறிவாளன் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையில் மார்ச் 9 ஆம் திகதி அவருக்கு பிணை வழங்கி தீர்ப்பளித்தது. 31 ஆண்டுகளுக்குப் பிறகு பேரறிவாளனுக்கு பிணை கிடைத்தது. நேற்றைய தினம் வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பாக பேரறிவாளனை விடுதலை செய்து உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தீர்ப்பளித்துள்ளனர். மகனின் விடுதலைக்காக 31 ஆண்டுகளாக போராடிய இந்தத் தாயின் போராட்டத்துக்கு வெற்றி கிடைத்துள்ளது. 31 ஆண்டுகாலம் உறக்கம் மறந்து போராடிய அற்புதம்மாள் நேற்றைய இரவுதான் நிம்மதியாக உறங்கினார்.

இதேவேளை பேரறிவாளனுடன் கைதாகி 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைத் தண்டனை அனுபவித்து வரும் மற்றைய 6 பேருக்கும் இந்தத் தீர்ப்பு பொருந்தும் என்பதால் அவர்களும் விரைவில் விடுதலை செய்யப்படலாம் எனக் கூறப்படுகிறது.

## சிறைவாசம் அனுபவிக்கும் ஏனைய ஆறு பேரும் விரைவில் விடுதலையாகும் வாய்ப்பு!

---

# அநாவசிய மின்னொளி அலங்காரங்களை தவிர்த்து மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்த உதவுங்கள்!

தேசிய வலையமைப்பால் வழங்கப்படும் மின்சாரத்தைப் பயன்படுத்தி பெயர்ப்பலகைகளை ஒளியூட்டுவதையும், அச்சிடப்பட்ட மற்றும் டிஜிட்டல் விளம்பரப் பலகைகளை பேரொளி ஏற்படுத்தும் மின்விளக்குகளால் ஒளியூட்டுவதையும் தவிர்த்துக் கொள்ளுமாறும் இலங்கை நிலைபெறு சக்தி அதிகாரசபையின் தலைவர் என்.ஜி.ரஞ்சித் சேபால பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாதுகாப்பு விளக்குகள் தவிர இதர அனைத்து வகையான அழகியல் செயற்பாடுகள் மற்றும் கட்டட முகப்புகளை அழகியல் தேவைகளுக்காக ஒளிரச் செய்தல் போன்றவற்றை கட்டுப்படுத்திக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

அவர் அனுப்பியுள்ள விசேட ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

## இலங்கை நிலைபெறு சக்தி அதிகாரசபையின் தலைவர் விடுக்கும் வேண்டுகோள்

அந்நிய செலாவணி தட்டுப்பாட்டால் ஏற்பட்ட எரிபொருள் விநியோகப் பிரச்சினைகளால் நாட்டில் மின்சார விநியோகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு மாதங்களாக தொடர்ச்சியான மின்சார விநியோகத்தைப் பேணுவது ஒரு சவாலாக மாறியிருந்தது. இதன் காரணமாக மக்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்கியதுடன், உற்பத்தி தொழில்கள் மற்றும் சேவைத் துறைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக நாட்டின் பொருளாதார நிலைமை மேலும் மோசமாகியுள்ளது.



இந்த விடயங்களைப் பொருட்படுத்தாமல், உச்சகட்ட மின்சாரத் தேவை நிலவும் பி.ப. 6.00 முதல் இரவு 9.00 வரையான காலத்திலும் கூட வணிக நிறுவனங்களால் விளம்பர நோக்கங்களுக்காகவும் அழகியல் நோக்கங்களுக்காகவும் மின்சாரம் பயன்படுத்தப்படுகிறது. பெயர்ப்பலகைகளை ஒளியூட்டுதல், அச்சிடப்பட்ட மற்றும் டிஜிட்டல் விளம்பரப் பலகைகளை பேரொளி ஏற்படுத்தும் மின் விளக்குகளால் ஒளியூட்டுதல், கட்டட முகப்புகளை அழகியல் தேவைகளுக்காக ஒளியூட்டுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

மின்விளக்குகளையும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களையும் விற்பனை செய்பவர்கள் தங்கள் காட்சியறைகளில் வாடிக்கையாளர்களை கவர்வதற்காக அதிக எண்ணிக்கையிலான மின்விளக்குகளைக் கொண்ட சாதனங்களை தொடர்ச்சியாக ஒளிரச் செய்கின்றனர். பல சமய வழிபாட்டுத் தலங்களும் அதிக எண்ணிக்கையிலான மின்விளக்குகளைப் பயன்படுத்தி கட்டடங்கள் மற்றும் சுற்றுச் சுவர் கட்டமைப்புகளை தொடர்ந்து ஒளிரச் செய்வதையும் அவதானிக்க முடிகிறது. சில சந்தர்ப்பங்களில் இரவு முழுவதும் ஒளிரச் செய்துள்ளமையை காணக் கூடியதாக இருக்கிறது.

மின்சார விநியோகத்தில் கணிசமான முன்னேற்றம் ஏற்படும் வரை இந்த சக்தி விரயத்தைக் கட்டுப்படுத்துவது அவசியமாகிறது. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் மின்சாரத் தடையைக் குறைக்கவும் பெறுமதிமிக்க மின்சாரத்தை எதிர்கால விநியோகத்திற்காக சேமிக்கவும் உதவும்.

இவ்வாறு இலங்கை நிலைபெறு சக்தி அதிகாரசபையின் தவிசாளர் என்.ஜி.ரஞ்சித் சேபால தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

# கலை, இலக்கிய, ஊடக, சமூகப் பணியில் அரை நூற்றாண்டு நிறைவைக் கொண்டாடும் ஆர்.என்.லோகேந்திரலிங்கம்




கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் ஆரம்பகால, ஆயுட்கால அங்கத்தவரும் முன்னாள் தலைவரும், தற்போதைய செயலாளருமான நண்பர் ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களின் 50 ஆண்டு கால கலை, இலக்கிய, ஊடக, சமூக சேவையைப் பாராட்டி கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் சார்பாகவும், எனது குடும்பத்தின் சார்பாகவும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

புலம்பெயர்ந்த மண்ணில் ஒரு வாரப்பத்திரிகையை 26 ஆண்டுகள் தொடர்ந்து நடத்துவது என்பது இலகுவான காரியமல்ல, எத்தனையோ விதமான சவால்களை எதிர்கொண்டு ஊடகத்துறையில் தொடர்ந்தும் பயணிப்பது என்பது மிகவும் கடினமானது. தொடக்க காலத்தில் பத்திரிகையை அச்சேற்றுவதற்கான கணனி மென்பொருட்கள் போதிய அளவு இருக்கவில்லை. எனவே ஒரு செய்தியை முதலில் 'ரைப்' செய்து, பின்னர் அதை வெட்டி ஒட்டித் தான் பிரதிகள் எடுக்க வேண்டியிருந்தது. ஆனாலும் வாராவாரம் தவறாமல் பத்திரிகை இன்றுவரை வெளிவந்து கொண்டே இருக்கிறது.

கனடாவுக்குப் புலம் பெயர்ந்த புதிதில் எனது சிறுகதைகள், தொடர் நாவல்கள், பயணக் கட்டுரைகள் என்று கனடிய வாசகர்களை எனக்குத் தேடித்தந்தது உதயன் பத்திரிகைதான். தங்கப் பதக்கம் தந்து என்னைக் கௌரவித்த பெருமையும், அதன் பின்னர் நடந்த உதயன் சிறுகதைப் போட்டிகளுக்கு என்னை நடுவராகத் தெரிவு செய்த பெருமையும் உதயன் பத்திரிகை ஆசிரியரான அவருக்கே உரியது. 1000 ஆவது இதழில் 'குமுதினி' என்ற எனது குறுநாவலையும் வெளியிட்டு என்னைக் கௌரவப்படுத்தி இருந்தார்.



சமீபத்தில் இலங்கையில் இருந்து வெளிவரும் 'ஞானம்' இதழ் நடத்திய சர்வதேச இலக்கியப் போட்டியில் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தைச் சேர்ந்த உதயன் ஆசிரியர் ஆர். என்.லோகேந்திரலிங்கம்(எதுவரை), சிந்தனைப்பூக்கள் எஸ். பத்மநாதன்( சிந்தனைப்பூக்கள்), எழுத்தாளர் குரு அரவிந்தன் (அம்மாவின் பிள்ளைகள்) ஆகிய மூவருக்கும் சிறப்புப் பரிசுகள் கிடைத்திருந்தன. சர்வதேசப் போட்டியில் எமது இணையத்தைச் சேர்ந்த மூவர் பரிசு பெற்றதை ஒரு சாதனையாகவே கருதுகின்றேன்.

சிறந்த கவிஞரும், எழுத்தாளருமான நண்பர் லோகேந்திரலிங்கம், 'மலையன்பன்' என்ற பெயரிலும் எழுதி வருகின்றார். விழாக் காணும் இச்சந்தர்ப்பத்தில் அவரது கலை, இலக்கிய, ஊடக, சமூக சேவைகளைப் பாராட்டி, எனது குடும்பத்தின் சார்பாகவும், கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் சார்பாகவும் அவரையும், அவரது குடும்பத்தினரையும் வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

**குரு அரவிந்தன்...**
*(தலைவர், கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்)*

உரத் தட்டுப்பாட்டுக்கு விரைவில் தீர்வு:

# இந்தியா, அமெரிக்கா உட்பட சர்வதேச தூதுவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் நிலவும் உர பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்வரும் பெரும் போகத்திற்கான உரத்தை விவசாயிகளுக்கு முறையாகப் பெற்றுக் கொடுக்க முடியும் என சபையில் நம்பிக்கை வெளியிட்ட பிரதமர், இந்தியா அமெரிக்கா உட்பட வெளி நாடுகளிலுள்ள இலங்கைத் தூதுவர்களுடன் அது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் நேற்று பொலன்னறுவை மாவட்ட எம்.பி கிங்ஸ் நெல்சன் உரம் சம்பந்தமாக எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் ரணில் விக்ரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் சபையில் மேலும் தெரிவித்த அவர் ;

உரம் நெருக்கடி தொடர்பில் விவசாயிகள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளுக்கு விரைவில் தீர்வு காண்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உக்ரைன் யுத்தம் காரணமாக சர்வதேச சந்தையில் உரத்தின் விலை வெகுவாக அதிகரித்துக் காணப்படுகிறது.

அது தொடர்பில் இந்தியாவிலுள்ள எமது தூதுவர் மிலிந்த மொரகொட, வாஷிங்டனில் உள்ள எமது தூதுவர் மகிந்த சமரசிங்க, பீஜிங்கில் உள்ள எமது தூதுவர் பாலித கொஹன்ன ஆகியோருடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றோம்.

விரைவில் அதற்கான தீர்வு முன்னெடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்த வேண்டிய எந்த அவசியமும் ஜனாதிபதிக்கு கிடையாது

## சபையில் முன்னாள் அமைச்சர் ரமேஷ் பத்திரண

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

ஆர்ப்பாட்டக்காரர்களின் மீது தாக்குதல் நடத்த வேண்டிய எந்த அவசியமும் ஜனாதிபதிக்கோ (முன்னாள்) பிரதமருக்கோ கிடையாது என முன்னாள் அமைச்சர் ரமேஷ் பத்திரன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஒரு மாதத்திற்கு மேல் அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் மீது ஒரு கல்லைக்கூட எரிவதற்கு நடவடிக்கை எடுக்காக அவர்களுக்கு அவ்வாறு தாக்குதல்களை நடத்த வேண்டிய அவசியம் கிடையாது என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

அதேவேளை பாராளுமன்றத்தின் 225 எம்பிக்களில் 25 பேர் மேற்கொள்ளும் மோசமான செயற்பாடுகளினால் ஏனைய 200 எம்பிக்களும் பாதிக்கப்படுகின்றனர். அவ்வாறானவர்கள் இனங்காணப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதல்களைத் தடுப்பதற்கு தேவையான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளபோதும் ஒரு சில பொலிஸ் உயர் அதிகாரிகளின் செயற்பாடே இந்த தாக்குதலுக்கு காரணமாகியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே முன்னாள் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின்:

# வீடுகள், சொத்துக்களின் பாதுகாப்பு அரசியலமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்



பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் வீடுகள் சொத்துகளுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தும் சட்டம் அரசியலமைப்பின் மூலம் உறுதிப் படுத்தப்பட வேண்டும் என முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இடம் பெற்றுள்ள தாக்குதல்கள் பேரழிவுகள் தொடர்பில் சர்வதேச பாராளுமன்றத்திற்கு அறிவிக்குமாறும் அவர் சபாநாயகரைக் கேட்டுக் கொண்டார்.

நிராயுதபாணிகளான முன்னாள் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளின் மீது தாக்குதல் மேற்கொண்டு அவர்களின் குடும்பத்தினரை அச்சுறுத்தி மனிதாபிமானமற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்தகைய நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் அரசியல் அமைப்பின் மூலம் சட்டங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் சபையில் கேட்டுக் கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறை சம்பவங்கள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே முன்னாள் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த 9ஆம் திகதி நடைபெற்ற வன்முறை சம்பவங்களின்போது பெருமளவிலான பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் தாக்கப்பட்டும் தீக்கிரையாக்கப்பட்டுமுள்ளன. அவர்களது பிள்ளைகளும் உறவினர்களும் பெரும் அச்சத்துடனேயே இன்றும் உள்ளனர்.

வீடுகள் தீக்கிரையாவதைப் பார்த்து சந்தோசப்படுபவர்கள் உள்ளனர்.

நாம் மக்கள் மனதை பண்படுத்துவதற்காக பாடுபட்டவர்கள் அதற்காக உச்ச அளவில் நடவடிக்கைகளை மேற்கொண்டவர்கள்

என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### மதுபான வகைகளின் விலை...

அதிகரிக்கப்பட்டுள்ளது.

பெல்வத்தை சீனி நிறுவனம் உற்பத்தி செய்யும் எதனோலின் விலை 700 ரூபாயில் இருந்து 1000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இன்னுமொரு நிறுவனமும் இதன் விலையை அதிகரித்திருக்கிறது.

எதனோல் உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் இயந்திரங்களுக்கு தேவையான எரிபொருளின் விலை 200 வீதத்தினால் அதிகரித்து இருப்பதனால் எதனோலின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

### எமது சம்மதத்துடனே CWCயுடன்...

கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில், அரசாங்கத்தில் அல்லது ஒரு தேசிய கூட்டணியில் இருந்த, கட்சிகள் நடந்து கொண்ட முறையில் இருந்து மாறுபட்டு பெருந்தன்மையுடனும், அரசியல் நாகரீகத்துடனும், தமிழ் முற்போக்கு கூட்டணி (தமுகூ) இந்த விடயத்தை சமூக நோக்கில் கையாள்கிறது என்பதை அனைவரும் அறிந்துக்கொள்ள வேண்டும்.

இதொகாவுடன் நடைபெற்ற பேச்சுக்களின் பெறுபேறு பற்றி, எமக்கு சஜித் பிரேமதாச விளக்கி கூறியுள்ளார்.

உரிய வேளையில் தமுகூ இதில் கலந்துக் கொண்டு கூட்டாக முடிவுகளை எடுக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

### முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்...

காணாமலாக்கப்பட்டவர்கள், கைது செய்யப்பட்டவர்கள் உள்ளிட்டவர்களை நினைவுகூரும் முகமாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டதாக ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றுள்ளதுடன், தமிழர்களுடன் சிங்கள மக்களும் பங்கேற்றுள்ளனர்.

அத்துடன், சிங்கள, கிறிஸ்தவ மதத் தலைவர்களும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு தடைவிதிக்கப்பட்டிருந்த நிலையில், இன்று இலங்கையின் தலைநகர் கொழும்பிலேயே இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

### இரண்டு தினங்களுக்கு வரிசையில்...

அமைச்சர் காஞ்சன விஜேசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக எதிர்வரும் ஜூன் மாதத்திற்கு மாத்திரம் 350 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாக சபையில் தெரிவித்த அவர், முன்னர் 150 மில்லியன் டொலராக இருந்த அந்த தொகை தற்போது 530 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே 730 மில்லியன் டொலர் கடன் வழங்க வேண்டியுள்ள நிலையில் எரிபொருளை கொள்வனவு செய்வதற்காக ஆக்கபூர்வமான யோசனைகள் இருந்தால் எதிர்க்கட்சி அதை சபையில் முன்வைக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று கவனயீர்ப்பு கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்:

எரி பொருள் கொள்வனவு மற்றும் விநியோகம் தொடர்பில் இதுவரை 67 யோசனைகளை எமக்கு கிடைத்துள்ளன. அதில் ஆக்கப்பூர்வமான 39 யோசனைகள் இனங்காணப்பட்டுள்ளன. எனினும் எத்தகைய யோசனைகள் முன்வைக்கப்பட்டாலும் கடன் பற்றுப் பத்திரம் வங்கிகளினால் வினியோகிக்கப்படாவிட்டால் எந்த நன்மையும் கிடையாது.

இரண்டு அரச வங்கிகளால் அது முடியாமல் போயுள்ள நிலையில் வர்த்தக வங்கிகளுடனேயே அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

நாட்டில் தற்போது எரிபொருளுக்கான தட்டுப்பாட்டுக்கான மற்றொரு காரணம் எரிபொருள் வர்த்தகம் மற்றும் எரிபொருளை சேகரித்து வைக்கும் நடவடிக்கைகளாகும். அந்த நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டால் மாத்திரமே எரிபொருள் விநியோகத்தை முறையாக முன்னெடுக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### 160 மில். டொலர்களை இலங்கை...

விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து இலங்கை விரைவில் மானியம் பெற உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய பெற்றோல் மற்றும் உர நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கும் நிதியைப் பெறுவதற்கும் பல்வேறு பிராந்தியங்களில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் இலங்கைத் தூதுவர்களுடன் கலந்துரையாடி வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### மொறட்டுவ மேயர் CID இல் சரணடைவு...

செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, காலிமுகத்திடல் மற்றும் கொள்ளுப்பிட்டி பகுதிகளில் கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறை சம்பங்கள் தொடர்பில் நவ சிங்களே அமைப்பின் தலைவர் டான் பிரியசாதும் கைது செய்யப்பட்டுள்ளார்.வாக்குமூலம் வழங்குவதற்காக நேற்று முற்பகல் அவர் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு வருகை தந்திருந்தார். இதன்போது, வாக்குமூலம் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

### ராஜீவ் காந்தி கொலை வழக்கிலிருந்து...

விடுதலை செய்யுமாறு கோரி பேரறிவாளன் இந்திய உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு தொடர்பாக தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டுள்ளது.

பேரறிவாளன் தொடா்ந்த வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றத்தில், இந்திய மத்திய, மாநில அரசுகள் எழுத்துபூா்வமான வாதங்களைத் தாக்கல் செய்திருந்தன. அவரை விடுவிக்கும் அதிகாரம் யாருக்கு என்பது தொடா்பாக இந்திய மத்திய மற்றும் தமிழ் நாடு மாநில அரசுகள் சார்பில் வாதங்களும் நடைபெற்றன.

முன்னதாக, இந்த வழக்கு கடந்த 11ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டதுடன், தீர்ப்பை திகதி குறிப்பிடாமல் உச்ச நீதிமன்றம் ஒத்திவைத்தது.

இந்த நிலையில், இந்த வழக்கில் நீதியரசர்கள் எல். நாகேஸ்வர ராவ் தலைமையில் நீதியரசர்கள் பி.ஆர். கவாய், ஏ.எஸ்.போபண்ணா அடங்கிய நீதியரசர்களினாலே இவ்வழக்கு விசாரிக்கப்பட்டது.

இந்த விடயத்தை முழுமையாக ஆராய்ந்த பின்னரே தமிழக அமைச்சரவை தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. ஆளுநர் முடிவெடுக்காமல் இந்திய குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தமை சட்டப்படி தவறு.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 161வது பிரிவின் படி முடிவுகளை எடுக்க தமிழக ஆளுநர் தாமதப்படுத்தியதால், அரசியலமைப்புச் சட்டத்தின் 142 பிரிவை பயன்படுத்தி இந்திய உச்ச நீதிமன்றமே பேரறிவாளனை விடுதலை செய்வதாக நீதியரசர்கள் தீர்ப்பளித்துள்ளனர்.

30 ஆண்டு காலம் சிறையிலிருந்த பேரறிவாளனை விடுதலை செய்து இந்திய உச்ச நீதிமன்றத்தின் மூன்று நீதியரசர்கள் அமர்வு இந்த வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியுள்ளது.

இந்திய உச்ச நீதிமன்றம் ஏற்கனவே கடந்த மார்ச் மாதம் பேறறிவாளனை பிணையில் விடுதலை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### மின் வெட்டு நேரங்கள் குறைவடையும்...

நீர்மின் உற்பத்தி நிலையங்களை அண்டியுள்ள நீர்த்தேக்கங்களில், நீர்மட்டம் குறிப்பிடத்தக்க அளவு உயர்வடைந்துள்ளமையே இதற்குக் காரணமாகும் என அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இன்றைய தினமும், 3 மணித்தியாலமும் 40 நிமிடங்களும் மின்சாரம் துண்டிக்கப்படுகிறது.

நீர்மின் உற்பத்தி நிலையங்களை அண்டிய பகுதிகளில் உள்ள நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம், தற்போது 50 சதவீதமளவில் உயர்வடைந்துள்ளதாக மின்சார சபையின் சிரேஷ்ட பொறியியலாளர் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நந்திக பத்திரண தெரிவித்துள்ளார்.

நீர்மின் உற்பத்தி மூலம் கடந்த வாரம் 210 ஜிகாவொட் மின்சாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் மேலும் அதிகரித்தால், மின்னுற்பத்தியை மேலும் அதிகரிக்க முடியும் என மின்சார சபையின் சிரேஷ்ட பொறியியலாளர் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நந்திக பத்திரண தெரிவித்துள்ளார்.

இதேவேளை, புதுப்பிக்கப்பட்ட சக்தியை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்து சுமார் 3 மாதங்கள் கடந்துள்ள நிலையில், அந்தப் பணிகள் தொடர்பில் தம்மால் திருப்தியடைய முடியாதுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### தேசிய பாதுகாப்பில் அழுத்தங்களை...

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தாய் நாட்டின் சுதந்திரத்தையும் நாட்டின் ஒருமைப்பாட்டையும் பாதுகாத்த, வீரமிக்க படை வீரர்களை நாம் என்றும் மறக்க மாட்டோம்.

அவர்களின் தியாகத்தின் உயிர்ச்சக்தியை நாங்கள் எப்போதும் மதிக்கிறோம் என்பதே அதற்குக் காரணம்.

எனவே, இந்த ஆண்டும் தேசிய நோக்கத்திற்காக படைவீரர்கள் ஆற்றிய மகத்தான தியாகங்களை நினைவுகூர்ந்து தேசிய படைவீரர் தினத்தைக் கொண்டாடுகிறோம்.

இன்று நாம் எதிர்நோக்கும் நெருக்கடியான நிலை நம்மில் எவரும் எதிர்பார்த்தது அல்ல. பொருளாதார நெருக்கடியானது, அரசியல் மற்றும் சமூக சிக்கலான நிலை வரை வியாபித்தது.

எவ்வாறாயினும், இந்த நாட்டின் இறையாண்மை மற்றும் சுதந்திரத்துக்கான கொள்கையை நாங்கள் குறைத்து மதிப்பிட மாட்டோம்.

ஏனென்றால் எல்லாவற்றிற்கும் மேலாக தாய் நாட்டைக் காக்க வேண்டும் என்ற அபிலாஷை இருப்பதனால் ஆகும்.

மனிதாபிமான நடவடிக்கைகளின் மூலம் யுத்தத்தின் சாபத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, நாட்டில் அமைதியை ஏற்படுத்தியவர்கள் எமது வீர வீராங்கனைகள்.

வெறுப்பும், கோபமும், பழிவாங்கலும் அதில் இருக்கவில்லை. எனவே, அமைதியான தாய் நாட்டில் இனவாதத்திற்கோ வேறு எந்த தீவிரவாதத்திற்கோ இடமில்லை.

இலங்கை சமூகத்தில் ஒரு தனித்துவமான பெறுமதியாக நாங்கள் இதனைக் கருதுகிறோம்.

வரலாற்றில் பல சவாலான கால கட்டங்களையும் சந்தர்ப்பங்களையும் நாம் கடந்து வந்திருக்கிறோம்.

அந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசாபிமானிகள் எப்போதும் முன்னிலை வகித்தனர் என்பதை மறந்துவிடக் கூடாது.

இந்த குழு நாட்டின் ஒட்டுமொத்த படை வீரரையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

எனவே, தற்போதைய சவாலை இன்னும் உன்னிப்பாகப் பார்க்கும் பொறுப்பை வரலாறு உங்களுக்கு வழங்கியுள்ளது என்பதை நினைவில் கொள்வது அவசியம்.

தேசிய படைவீரர் தினத்தை முன்னிட்டு, சுதந்திர நாட்டிற்காக உயிர் தியாகம் செய்த மற்றும் அங்கவீனமடைந்த வீர வீராங்கனைகளுக்கு எனது கௌரவமான மரியாதையை செலுத்துவதாகவும் ஜனாதிபதி விடுத்துள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மஹிந்த மற்றும் நாமல் நேற்று...

வருகை தந்தது இதுவே முதல்முறையாகும்.

மேலும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆளும் கட்சியில் 4ஆவது முன்னணி ஆசனம் வழங்கப்பட்டுள்ளது.

இதேநேரம் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

நாட்டில் கடந்த 9ஆம் திகதி ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து, பதவியை இராஜினாமா செய்த மஹிந்த ராஜபக்ஷ அலரிமாளிகையில் இருந்து பாதுகாப்பாக திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தார்.

இதனையடுத்து, அவர் திருகோணமலை கடற்படை தளத்தில் பாதுகாப்பாக தங்கவைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருந்தது.எனினும் அவர் நாட்டைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், அவர் நேற்று பாராளுமன்றத்திற்கு வருகை தந்திருந்தார்.

### இரண்டு வாரத்தினுள் ஒரு வழிக்கு...

தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே பிரதமர் இ்தனை தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்கவின் சர்வ கட்சி அரசாங்கத்துக்கு ஆளும் கட்சி ஆதரவு வழங்குவதாக கூறியபோதும், ஆளும் கட்சி இன்னும் தமது கட்டுப்பாட்டில் இருப்பதாக பசில் ராஜபக்ச நேற்று காட்டிவிட்டதாக மரிக்கார் சுட்டிக்காட்டினார்.

எனவே ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்சர்களை பாதுகாப்பதற்கே பிரதமராகியுள்ளார் என்று மரிக்கார் குற்றம் சுமத்தினார்

எனினும் இதற்கு பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க, தாம் நாட்டுக்கு சேவை செய்யவே வந்துள்ளதாகவும் ராஜபக்சர்களை காப்பாற்ற வரவில்லை என்றும் குறிப்பிட்டார்.

விரைவில் நாட்டுக்கான பொருளாதார வேலைத்திட்டத்தை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அவர் உறுதியளித்தார்.

தாம் கூறிய பின்னரே காலிமுகத்திடல் தாக்குதல் தொடர்பில் நேற்று இருவர் கைதுசெய்யப்பட்டதாக பிரதமர் இதன்போது தெரிவித்தார்.

தாம் சிறைக்கு செல்லும் வகையில் நித்திரைக்கு செல்லப்போவதில்லை என்று மகிந்தானந்த அளுத்கமகே கூறியிருப்பாராக இருந்தால், தற்போது அவர் நித்திரையில்லாமல் 24 மணித்தியாலங்களும் சேவை செய்ய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

### புத்தளம் நகர சபை தீயணைப்பு...

இந்த தாக்குதலின் பின்னணியில் அரசியல் நோக்கமே இருந்தது என புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தெரிவித்தார்.

வன்முறையில் எம்.பிக்கள் உட்பட அரசியல் பிரதிநிதிகளின் வீடுகள் மற்றும் சொத்துக்கள் சேதமாக்கப்பட்டது தொடர்பான ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

மே 9 ஆம் திகதி யாரோ செய்த தவறுக்கு யாருக்கோ தண்டனை வழங்கப்பட்டது. 200300 பேர் எனது வீட்டுக்கு வந்தார்கள். அரசியல்வாதிகளால் கோட்டாகோஹோம் ஆர்ப்பாட்டம் புத்தளத்தில் ஆரம்பிக்கப்பட்டது. நாம் மௌனமாக இருந்தோம். கேஸ் மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. புத்தளத்தில் அரசியல் அடக்குமுறைகள் இருந்த நிலையில் நானும் அரசியலுக்கு வந்தோம். எமது காலத்தில் அடக்குமுறை நடக்கவில்லை.

எனது வீட்டை தாக்க சிலர் எனது அலுவலகம் ,எனது வீடு என்பவற்றை தாக்கிய பின்னர் எனது மகளின் வீட்டையும் தாக்கினார்கள். பொருட்களை கொள்ளையடித்தார்கள்.4 மணிநேரம் இது நீடித்தது. 4000 பாடசாலை புத்தகங்கள் பகிர வைத்திருந்தோம். அவை திருடப்பட்டன. சில அழிக்கப்பட்டன. நான் வசதியாக வாழ்ந்தவன். அரசியல் ஊடாக உழைக்கவில்லை. ஆனால் அனைத்து உடைமைகளும் அழிக்கப்பட்டன. நான் அணிந்துள்ள உடை கூட புதிதாக தைத்து எடுத்ததாகும்.

தீயை அணைப்பதற்கு புத்தளம் நகர சபையின் உதவி நாடப்பட்ட போதும் தீயணைக்கும் படை அனுப்பப்படவில்லை. அரசியலின் ஊடாக சம்பாதிக்கும் 1988 முதல் பால்பொடி விற்று சிறிது சிறிதாக முன்னேறினேன். எமது சொத்தில் 40 வீதம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. 3 கம்பனிகள் அழிக்கப்பட்டன. இந்த அநியாயம்

31 வருடங்களாக புத்தளத்தில் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இருக்கவில்லை. புத்தளத்தின் ஊடாக சிறுபான்மை பிரதிநிதித்துவம் பெற உழைத்தும் எதுவும் கிடைக்கவில்லை.

இளம் வயதினர் தான் தாக்குதல் நடத்தினார்கள். எதிர்காலத்தில் அரசியலுக்கு வர இருப்பவர்கள் தான் அவர்களை தூண்டிவிட்டார்கள். பிரதமர் மாறுவதால் பிரச்சினை தீராது. 225 பேரும் இணைந்து செயற்பட்டாலே தீர்வு வரும் என்றார்.

### புலம் பெயர் தமிழருக்கு... 03ஆம் பக்கத் தொடர்

தயாராக இருக்கிறோம். எமது நாட்டி ல் முதலிட வருமாறு சர்வதேச சமூகத்திடமும் கோருகிறோம்.

சகல புலம் பெயர் அமைப்புகளுக்கும் இங்கு பல்வேறு துறைகளில் முதலீட செய்ய வருமாறு கோருகிறோம் என்றார்.

### ஹர்ச, இரான், கபீரை... 03ஆம் பக்கத் தொடர்

இதற்கு பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தனக்கு ஹர்ச டி சில்வாவுடன் இணைந்து பணியாற்ற முடியும் எனவும் குழுக்களுக்கு அவர்களை நியமிப்பது குறித்து ஏனைய கட்சிகளுடன் இணைந்து முடிவு செய்ய முடியும் எனவும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர், புதிய அரசியல் கலாசாரம் உருவாக்குதற்கு உடன்படுவதாக இருந்தால் பொருளாதார நிபுணர்களான ஹர்ச டி சில்வா,இரான் விக்ரமரத்ன மற்றும் கபீர் ஹாசிம் ஆகியோரை நியமிக்குமாறு கோருகிறேன் என்றார்.

# சர்வதேச செய்திகள்

## நாணய நிதியத்துடன் பாக். பேச்சு ஆரம்பம்



பொருளாதார நெருக்கடியில் உள்ள பாகிஸ்தான் தீர்க்கமான நிதியை பெறுவதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் நேற்று பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தது.

தேசிய கடன் நெருக்கடி, பணவீக்கம் மற்றும் ரூபாய் மதிப்பு வீழ்ச்சியால் பாதிக்கப்பட்டிருக்கும் பாகிஸ்தான் தனது பொருளாதாரத்திற்கு சர்வதேச உதவியை எதிர்பார்த்துள்ளது.

கட்டார் தலைநகர் டோஹாவில் நேற்று ஆரம்பமான இந்தப் பேச்சுவார்த்தை அடுத்த வாரமும் நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக எரிபொருள் மற்றும் மின்சாரம் போன்ற செலவுமிக்க மானியங்களுக்கான நிவாரணங்களை எதிர்பார்ப்பதாக நிதி அமைச்சர் முப்தா இஸ்மைல் தெரிவித்தார்.

## அம்பேத்கர் அவையை நிறுவ மோடி அறிவிப்பு



லும்பினி புத்த பல்கலைக்கழகத்தில் கலாநிதி பீம்ராவ் அம்பேத்கர் அவையை நிறுவுவதற்கு இந்தியா மற்றும் நேபாளம் இடையே தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஒருநாள் பயணமாக நேபாளம் சென்ற பிரதமர் மோடி புத்த பூர்ணிமா கொண்டாட்டத்தின்போது காத்மண்டுவில் அந்நாட்டு பிரதமர் முன்னிலையில் இதனைத் தெரிவித்தார்.

பௌத்த கலாசார மற்றும் பாரம்பரிய மையத்தின் அடிக்கல்லை நட்டிய பிரதமர் மோடி, சர்வதேச பௌத்த கூட்டமைப்பு மூலம் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

## சுவீடன் மற்றும் பின்லாந்து நாடுகள் நேட்டோவில் இணைய விண்ணப்பம்



உலகின் மிகப்பெரிய இராணுவ கூட்டணியான நேட்டோ அமைப்பில் இணைவதற்கு பின்லாந்து மற்றும் சுவீடன் நாடுகள் நேற்று உத்தியோகபூர்வமாக விண்ணப்பித்துள்ளன.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பை அடுத்து ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தலை அடுத்தே இரு நாடுகளும் இந்த முடிவை எடுத்துள்ளன.

“நேட்டோவில் இணைவதற்கான பின்லாந்து மற்றும் சுவீடனின் கோரிக்கையை நான் வரவேற்கிறேன். நீங்கள் எமது நெருங்கிய கூட்டாளிகள்” என்று நேட்டோ செயலாளர் நாயகம் ஜேன்ஸ் ஸ்டொல்டன்பேர்க் தெரிவித்துள்ளார்.

“இது ஒரு வரலாற்றுத் தருணம். இதனை நாம் கைப்பற்ற வேண்டும்” என்று பிரசல்ஸில் இருக்கும் நேட்டோ தலைமையகத்தில் நேற்று உரையாற்றும்போது ஸ்டொல்டன்பேர்க் தெரிவித்தார்.

பனிப்போர் காலம் முழுவதும் நடுநிலையான கொள்கையை பின்பற்றி வந்த இந்த இரு நாடுகளும் நேட்டோவில் இணைய முடிவெடுத்திருப்பது ஐரோப்பிய பாதுகாப்பு கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றமாக பார்க்கப்படுகிறது.

இந்த விண்ணப்பங்கள் நேட்டோவின் 30 அங்கத்துவ நாடுகளால் பரிசீலனைக்கு உட்படுத்தப்படவுள்ளன. இந்த நடைமுறைக்கு சுமார் இரண்டு வாரங்கள் எடுத்துக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் பின்லாந்து மற்றும் சுவீடன் இணைவது குறித்து துருக்கி ஜனாதிபதி ரிசப் தையிப் எர்துவான் எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்.

அவரது ஆட்சேபனையை சமாளித்து, எதிர்பார்த்தபடி பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றால் இந்த இரு நாடுகளும் சில மாதங்களுக்குள் நேட்டோ அங்கத்துவத்தை பெற்றுவிடும். இந்த நடைமுறைக்கு வழக்கமாக எட்டுத் தொடக்கம் 12 மாதங்கள் எடுத்துக்கொள்கின்றபோதும், ரஷ்யாவின் அச்சுறுத்தல் இருக்கும் சூழலில் இதனை விரைவுபடுத்த திட்டமிடப்படுகிறது.

சில நாட்களுக்குள் இந்த நாடுகளை சேர்க்கும் நெறிமுறையை உறுதிப்படுத்த எதிர்பார்ப்பதாக கனடா கூறியுள்ளது.

இந்த விண்ணப்பக் காலத்தில் பின்லாந்து மற்றும் சுவீடனின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு குறிப்பாக இங்கிலாந்து உட்பட பல நேட்டோ நாடுகளும் முன்வந்துள்ளன.

கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்ததை அடுத்தே நேட்டோ அங்கத்துவத்தை பெறும் திட்டத்திற்கு பின்லாந்து மற்றும் சுவீடன் தள்ளப்பட்டதாக கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன.

எனினும் இந்த நாடுகள் அங்கத்துவத்தை பெறுவதற்கு எர்துவானின் கடுமையான நிலைப்பாடு பெரும் முட்டுக்கட்டையாக மாறியுள்ளது.

துருக்கியின் நிலைப்பாட்டை மற்ற சுவீடன் அந்நாட்டுக்கு தூதுக் குழு ஒன்றை அனுப்பவிருப்பதாக அறிவிப்பு வெளியான நிலையில், சுவீடன் மற்றும் பின்லாந்து பிரதிநிதிகள் துருக்கி வந்து “தொந்தரவு செய்யக் கூடாது” என்று எர்துவான் கடந்த திங்கட்கிழமை கூறியிருந்தார்.

துருக்கியால் பங்கரவாதிகள் என்று கூறப்படும் குழுக்களுக்கு பின்லாந்து மற்றும் சுவீடன் ஆதரவு அளிப்பதாக துருக்கி குற்றம்சாட்டுகிறது. 2019 ஆம் ஆண்டு துருக்கி, சிரியாவில் இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்ததை அடுத்து துருக்கி மீது சுவீடன் தடைகளை விதித்தமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா தலைமையிலான நேட்டோ கூட்டணியின் விரிவாக்கத்திற்குப் பதிலடி கொடுக்கப்படும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் எச்சரித்துள்ளார்.

## பாக். சீக்கியர் ஆர்ப்பாட்டம்



பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் இரு சீக்கியர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து சீக்கிய சமூகத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இரு சீக்கிய கடை உரிமையாளர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை அடையாளம் தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்நிலையில் கிராண்ட் டிரங்க் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்கள் “எமக்கு நீதி வேண்டும்” மற்றும் “மதச் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு வழங்கு” என்று கூறும் பதாகைகளை ஏந்தி இருந்தனர்.

தப்பிச்சென்ற தாக்குதல்தாரிகளை தேடி தொடர்ந்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

## சீன விமானம் வேண்டுமென்று வீழ்த்தப்பட்டதாகச் சந்தேகம்



தெற்கு சீனாவில் கடந்த மார்ச் மாதம் திடீரென்று தரையை நோக்கி விழுந்து விபத்துக்கு உள்ளான சைனா ஈஸ்டர்ன் விமானம், வேண்டும் என்று வீழ்த்தப்பட்டிருப்பதாக அமெரிக்க விசாரணையாளர்கள் நம்புகின்றனர்.

இந்த விமானத்தில் எந்த இயந்திர அல்லது தொழில்நுட்ப கோளாறையும் விசாரணையாளர்கள் கண்டுபிடிக்கவில்லை என்று அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தெற்கு சீன நகரங்களான குன்மிங் மற்றும் குவான்சுக்கு இடையே பயணித்துக் கொண்டிருந்த இந்த விமானம் விபத்துக்குள்ளானதில் அதில் இருந்த 132 பேர் கொல்லப்பட்டனர்.

“விமானி அறையில் இருக்கும் யாரேனும் செய்யச் சொல்லியே இந்த விமானம் இதனை செய்திருக்கும்” என்று விசாரணையாளர்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

விமானத்தின் கட்டுப்பாடுகளுக்கான அமைப்பு மூலம் விமானம் செங்குத்தாக வீழ்வதற்கு தள்ளப்பட்டிருக்கிறது என்று விபத்து இடம்பெற்ற பகுதியில் இருந்து மீட்கப்பட்ட கறுப்புப் பெட்டியில் இருந்து பெறப்பட்ட தரவுகள் காட்டுவதாக இது பற்றி வெளியான ஆரம்பக்கட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிகாரிகளை மேற்கோள்காட்டி ஏ.பி.சி செய்தி நிறுவனம் வெளியிட்ட செய்தியிலும், இந்த விபத்து வேண்டுமென்று மேற்கொள்ளப்பட்ட ஒன்று என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

29 ஆயிரம் அடி உயரத்தில் இருந்து 90 டிகிரி கோணத்தில் அந்த விமானம் சில நிமிடங்களில் தரையில் விழுந்தது. விமானத்தில் தீப்பிடித்த நிலையில் அது மலைப்பகுதியில் விழுந்துவிட்டது. யாராவது பலவந்தமாக விமானியின் அறைக்குள் நுழைந்து விமானத்தை விழச் செய்திருக்கலாம் என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. முன்னதாக, விபத்து நேரிட்ட உடனேயே விமானம் செங்குத்தாக விழுந்து விபத்திற்குள்ளானது நிபுணர்களை குழப்பத்தில் ஆழ்த்தியது. விமானம் ஒரு உயரத்தில் நிலையாக சென்று கொண்டிருக்கும் போது, அது செங்குத்தாக விழாது என்றும், அதற்கு மிதக்கும் திறன் உண்டு எனவும் நிபுணர்கள் தெரிவித்தனர்.

கடந்த 28 ஆண்டுகளில் சீனாவில் ஏற்பட்ட மிக மோசமான விமான விபத்து இதுவாகும். வேகமாக தரையிறங்கும் போது, விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் அருகிலுள்ள விமானங்களிலிருந்து பலமுறை அழைப்பு விடுத்தும் விமானிகள் பதிலளிக்கவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

2015 மார்ச் மாதத்தில், ஜெர்மன் விங்சின் இணை விமானி ஏர்பஸ் ஏ320 விமானத்தை வேண்டுமென்று பிரான்ஸின் மலைப்பகுதியில் மோதவிட்டு விபத்துக்குள்ளாக்கியதில் விமானத்தில் இருந்த 150 பேரும் கொல்லப்பட்டனர்.

## 1,000 உக்ரைனிய படையினர் சரண்



உக்ரைனின் மரியுபோல் நகரில் உள்ள உருக்காலையை தக்க வைத்திருந்த சுமார் 1,000 உக்ரைனிய படையினர் சரணடைந்துள்ளதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

உக்ரைனிய இராணுவத்தின் 694 படையினர் மற்றும் அசோவ் படைப்பிரிவைச் சேர்ந்தவர்கள் கடந்த 24 மணி நேரத்திற்குள் சரணடைந்ததாக அது குறிப்பிட்டது. இதன்படி மொத்தம் 959 படையினர் சரணடைந்துள்ளனர்.

இந்த உருக்காலையில் இருந்து வெளியேறுவோர் ரஷ்ய கட்டுப்பாட்டு பகுதிக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். இதன்படி மரியுபோல் நகர் ரஷ்யாவின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது.

## மர்மப் பொருள் தொடர்பில் அமெரிக்காவில் விசாரணை



அமெரிக்காவில் கடந்த ஐம்பது ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட அடையாளம் காணப்படாத பறக்கும் பொருட்கள் பற்றிய முதலாவது பகிரங்க கொங்கிரஸ் விசாரணையில் சொற்பமான விளக்கங்களே கிடைத்துள்ளன.

பாராளுமன்ற புலனாய்வு உப குழு முன் கடந்த செவ்வாய்க்கிழமை தோன்றிய, பென்டகன் அதிகாரிகள், இதுபற்றி தற்போது இடம்பெற்று வரும் விசாரணையின் மேலதிக தகவல்களை வெளியிடவில்லை.

எனினும் இந்த வானில் தோன்றும் மர்மப் பொருள் பற்றி தரவு சேகரிக்கும் முயற்சிகளை ஒருங்கிணைக்கக்கும் புதிய செயலணி ஒன்றுக்கான பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

வானில் அடையாளம் காணமுடியாத பொருள்களின் எண்ணிக்கை கடந்த 20 ஆண்டில் அதிகரித்துள்ளதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

தொழில்நுட்ப முன்னேற்றம், மர்மப் பொருள் குறித்து தகவல் அளிக்கும் போக்கை வழக்கமாக்குவதற்கு இராணுவம் மேற்கொண்ட முயற்சி ஆகியவற்றால் கூடுதல் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக அமைச்சு குறிப்பிட்டது.

கடந்த ஆண்டு வெளியான அறிக்கையின்படி அடையாளங்காண முடியாத பொருட்கள் தொடர்பில் 2004ஆம் ஆண்டிலிருந்து 140க்கும் அதிகமான சம்பவங்கள் பதிவாயின.

பலவற்றுக்குக் காரணத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று அமைச்சு கூறியிருந்தது. வேற்றுலக மனிதர்களின் சாத்தியத்தை நிராகரிக்க முடியாது. இருப்பினும் அவர்கள் குறித்து இதுவரை உறுதியான ஆதாரம் ஏதுமில்லை என்று அதிகாரிகள் கூறினர்.

எனினும் இராணுவ விமானங்கள் வானில் மர்மப் பொருட்களை காணும் போக்கு தொடர்ந்து இருந்து வருகிறது. இதில் சில அமெரிக்க இராணுவ ராடார் அமைப்புகளில் ஆளில்லா விமானங்கள் அல்லது பறவைகளால் ஏற்பட்ட குழப்பங்களாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

## லெபனான் பொதுத் தேர்தலில் ஹிஸ்புல்லா கூட்டணி தோல்வி



லெபனான் பொதுத் தேர்தலில் ஈரான் ஆதரவு ஷியா முஸ்லிம் ஹிஸ்புல்லா அமைப்பு மற்றும் அதன் கூட்டணி பெரும்பான்மையை இழந்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த தேர்தலில் 128 ஆசனங்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் அந்தக் கூட்டணி 62 இடங்களை வென்றதோடு பெரும்பான்மைக்கு மூன்று ஆசனங்களை குறைவாக பெற்றுள்ளது.

ஹிஸ்புல்லா தனது சொந்த இடங்களை வென்றபோதும் ஜனாதிபதி மைகெல் அவுனின் கிறிஸ்தவ சுதந்திர தேசப்பற்று இயக்கம் தோல்வி அடைந்துள்ளது.

சவூதி அரேபியாவுடன் நெருக்கம் கொண்ட கிறிஸ்தவ போட்டிக் கட்சி ஒன்றான லெபனானிய சக்தி 13 ஆசனங்களை வென்றுள்ளது.

கடந்த பல தசாப்தங்களில் முதல் முறையாக நாட்டின் மிகப்பெரிய சுன்னி கட்சியான எதிர்கால இயக்கம் இன்றியே இம்முறை தேர்தல் இடம்பெற்றது.

இந்தக் கட்சியின் தலைவரான முன்னாள் பிரதமர் சாத் ஹரிரி இந்த ஆண்டு ஆரம்பத்தில் அரசியலில் இருந்து விலகியமை குறிப்பிடத்தக்கது.

எனினும் முழு வெற்றியாளர் ஒருவர் இல்லாமை மற்றும் நாட்டின் அதிகாரப்பகிர்வு அரசியல் கட்டமைப்புக்கு மத்தியில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்வதற்கான வாய்ப்பு குறைவாகவே உள்ளது.

லெபனானில் அரசியல் எழுச்சி ஒன்று ஏற்பட்ட 2019க்கு பின்னர் இடம்பெறும் முதலாவது தேர்தலாக இது இருந்தது.

லெபனானில் பாரிய பொருளாதார நெருக்கடி ஒன்று ஏற்பட்டதே அங்கு ஆர்ப்பாட்டங்கள் வெடிக்கக் காரணமானது. லெபனானில் உணவு, எரிபொருள் மற்றும் மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு இருப்பதோடு, மக்கள் தொகையில் 80 வீதமானவர்கள் வறுமைக்கோட்டில் இருப்பதாக கணிக்கப்பட்டுள்ளது.

தினகரன்
# வடக்கின் உதயம்
Vadakkin Uthayam

# கண்ணீரில் நனைந்தது முள்ளிவாய்க்கால்
# உயிரிழந்த உறவுகளுக்கு சுடரேற்றி அஞ்சலி



**மாங்குளம் குறூப், மன்னார் குறூப், கரவெட்டி தினகரன், வவுனியா குறூப், ஓமந்தை விசேட, சாவகச்சேரி, யாழ். விசேட, கோப்பாய் தினகரன் நிருபர்கள்**


இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற தமிழின படுகொலையின் 13 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன.

வடக்கு கிழக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பின் ஏற்பாட்டில் இந்நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன. இந்நிகழ்வில் இறுதியுத்தத்தில் பாதிக்கப்பட்ட ஒருவர் பொதுச்சுடர் ஏற்றியதை தொடர்ந்து ஏனையவர்களும் உயிரிழந்த தம்முடைய உறவுகளுக்கு சுடரேற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை முள்ளிவாய்க்கால் பிரகடனமும் வெளியிடப்பட்டுள்ளதோடு கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதிக்கட்ட யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்று கூடியிருந்தனர். மக்கள் பாரிய உணவு நெருக்கடிக்கு முகம் கொடுத்தனர். மக்கள் உணவுத் தேவைக்காக பல்வேறு இன்னல்களை சந்தித்தனர். அதை நினைவுகூரும் விதமாக முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது.

இதேவேளை முள்ளிவாய்க்காலில் மரணித்த உறவுகளின் ஆத்ம சாந்தி பூஜையும், நெய்தீபம் ஏற்றி வழிபடும் நிகழ்வும், நேற்று (18.05) புதன்கிழமை காலை 08.30 மணிக்கு வவுனியா குருமன்காடு ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்றது. வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் செ. மயூரன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர். செ.சந்திரகுமார், அந்தணர் ஒன்றிய நிர்வாகத்தினர், ஆலய பரிபாலனசபையினர் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். கிளிநொச்சியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் 2022 நிகழ்வு சமத்துவக் கட்சி அலுவலகத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.



## கோப்பாய் பொலிஸ் பிரிவு; இருவேறு விபத்து சம்பவங்களில் நால்வர் பலி

**யாழ்.விசேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்**

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற இருவேறு விபத்து சம்பவங்களில் நால்வர் உயிரிழந்துள்ளனர்.

திருநெல்வேலி, இராமலிங்கம் வீதியில் பூங்கனிச்சோலைக்கு அருகில் செவ்வாய்க்கிழமை இரவு , இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் மூன்று இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

கோப்பாய் பூதர் மடத்தடியை சேர்ந்த மகேந்திரன் மகிந்தன் (வயது 25), கச்சேரி கிழக்கை சேர்ந்த றொபின்சன் சார்ள்ஸ் (வயது 23) மற்றும் சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகத்தை சேர்ந்த யோகநாதன் மேர்வின் டேனுஜன் (வயது 17) ஆகிய மூவரே உயிரிழந்துள்ளனர்.



மோட்டார் சைக்கிளில் இருவரும் மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் மூவரும் பயணித்த வேளை பூங்கனிச்சோலைக்கு அருகில் இரு மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளனர். படுகாயமடைந்த மூவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். ஏனைய இருவரும் தொடர்ந்தும் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உரும்பிராயிலும் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். கோப்பாய் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் பகுதியில் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கோப்பாய் தெற்கை சேர்ந்த துரைராசா மயூரன் (வயது 27) என்பவரே உயிரிழந்துள்ளார்.

சந்தேகநபர் மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளை, மோட்டார் சைக்கிள் வேக கட்டுப்பாட்டை இழந்து வீதி அருகே இருந்த மின் கம்பத்துடன் மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இருவேறு விபத்து சம்பவங்கள் தொடர்பிலும் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## பேரினவாத அரசியலின் விளைவே தற்போதைய பொருளாதாரச் சீர்குலைவு

**மாங்குளம் குருப் நிருப**



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வடக்கு கிழக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பினால் முள்ளிவாய்க்கால் பிரகடனம் வெளியிடப்பட்டது. இந்த முள்ளிவாய்க்கால் பிரகடனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஈழத் தமிழர்களின் வரலாற்றில் துயர்மிகு நாட்களில் ஒன்றாகிய முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவு நாளான மே 18ல் மீண்டும் ஒரு தடவை நாம் கூடியுள்ளோம். இனவழிப்பின் பாரதூரத் தன்மையையும், அச்ச மூட்டும் அதன் பரிமாணத்தையும், அவற்றால் எங்களுக்கு ஏற்பட்ட இழப்புகளையும் நினைவு கூர்வதற்கான ஒரு நாள் மட்டுமல்ல.

எத்தனை துயரங்கள் வந்தாலும் அழுத்தங்கள் தரப்பட்டாலும் நாங்கள் தோற்றுப் போக மாட்டோம்; முள்ளிவாய்க்கால் எமது எழுச்சியின் முடிவல்ல எனப் பிரகடனம் செய்கின்ற ஒரு நாளுமாகும். முள்ளிவாய்க்காலைத் தொடர்ந்தும் அதனை ஒட்டிய நாட்களிலும் தாயகமெங்கும் பலவந்தமாகக் காணாமலாக்கப்பட்ட எங்கள் உறவுகளையும் நாங்கள் இந்த நேரத்தில் நினைவு கூருகின்றோம்.

ஏனைய இனங்கள் நன்மை பெற்றுவிடக்கூடாது என்பதற்காகப் பொருளாதார இலக்குகள் மாற்றியமைக்கப்பட்டன. 70 ஆண்டு கால பேரினவாத அரசியலின் விளைவை தற்போது பொருளாதாரச் சீர்குலைவாக நாடு அனுபவிக்கின்றது. இன்று ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பேரழிவின் தாக்கங்கள் அனைத்து மக்களையும் தேசம், இனம் என்ற வேறுபாடு இன்றி பாதித்துள்ளது. ஏழைகள் மட்டுமன்றி நடுத்தர வர்க்கத்தினர், முதலாளிகள், தொழிலாளிகள் என அனைவரையும் பாதித்துள்ளது.

## சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவன் தெரிவு



**கிளிநொச்சி குறூப் நிருபர்**

63 அவது சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டிக்கு இலங்கை சார்பாக வடமாகாணத்திலிருந்து தமிழ் மாணவன் ஒருவன் தெரிவாகியுள்ளார். கிளிநொச்சி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த தெய்வேந்திரம் திருக்குமரனே இவ்வாறு தெரிவாகியுள்ளார். இதனையடுத்து கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் அதிபர் ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் மாணவன் கௌரவிக்கப்பட்டார். எதிர்வரும் ஜூலை மாதம் நோர்வேயின் ஒஸ்லோ நகரத்தில் போட்டி நடைபெறவுள்ள நிலையில் இலங்கையிலிருந்து ஆறு மாணவர்கள் தெரிவாகியுள்ளனர். அவர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பஸ் பனை மரத்தில் மோதி விபத்து, இருவர் காயம்

**ஓமந்தை விசேட நிருபர்**



யாழ்ப்பாணம் கண்டி பிரதான வீதியில் மதவாச்சி சியம்பலகஸ்வெவ பிரதேசத்திற்கு அருகில் நேற்று (17) மாலை பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி பனை மரத்தில் மோதியதில் இருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். வவுனியாவிலிருந்து அநுராதபுரம் நோக்கி பயணித்த தனியார் பஸ் இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

பஸ் வீதிக்கு அருகிலிருந்த பனை மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் பனைமரம் முறிந்து வீழ்ந்துள்ளது. விபத்தில் பஸ் சாரதி உட்பட மற்றுமொருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அதிவேகமாக வாகனத்தை செலுத்தியமையினால் இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பூனாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நந்திக்கடலில் மலர்தூவி அஞ்சலி



**மாங்குளம் குருப் நிருபர்**

முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்கு, முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று நந்திக்கடலில் மலர்தூவி அஞ்சலி செலுத்தியுள்ளார்.

எங்கள் பெருமைமிகு வரலாறின் சோகமான இறுதிக் காட்சிகளின் மௌனமான சாட்சியே இந்த நந்திக்கடல். ஏராளமான எங்கள் உறவுகளின் கண்ணீரும், செந்நீரும் கலந்துள்ள இந்தக் கடலன்னையை வணங்கி, உயிர்நீத்த எங்கள் உறவுகளுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தியதாக அவர் தெரிவித்தார். மேலும் அஞ்சலி நிகழ்வுகளில் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கின் குரல்



## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் தலைமையில்

# அக்கரைப்பற்று பிள்ளையார் ஆலயம் முன்பாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு





**வாச்சிக்குடா விஷேட நிருபர்**

அக்கரைப்பற்று ஆலையடிவேம்பிலு ம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வும், முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வும் செவ்வாய்க்கிழமை (17) மாலை நடைபெற்றது.

அக்கரைப்பற்று ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலய முன்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில், கல்முனை மாநகர சபை உறுப்பினர் மு.சந்திரசேகரம், ஆலையடிவேம்பு பிரதேச தமிழரசுக் கட்சியின் தலைவர் ஆர்.ஜெகநாதன், ஆலையடிவேம்பு பிரதேச தமிழ் இலக்கிய பேரவை தலைவர் க.கிருஸ்ணமூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் முள்ளிவாய்க்கால் உள்ளிட்ட பல்வேறு சம்பகவங்களின் போது உயிர் நீத்த உறவுகளை நினைவு கூர்ந்து நினைவுச்சுடர் ஏற்றப்பட்டது. இதன்போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளிட்டவர்கள் நினைவுச்சுடர்களை ஏற்றி வைத்தனர்.

பின்பு உயிர்நீத்த உறவுகளின் ஆத்மாசாந்தி வேண்டி இரு நிமிட பிரார்த்தனையும் இடம்பெற்றது. தொடர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இங்கு உரையாற்றிய கல்முனை மநாகர சபை உறுப்பினர் மு.சந்திரசேகரம், தற்போதைய பிரதமர் இறந்தவர்களை நினைவு கூர தடையில்லை என்றார். ஆனால் முள்ளிவாய்க்காலில் நினைவேந்தலை நடத்த முடியாது இராணுவத்தினர் பல்வேறு நடவடிக்கையினை முன்னெடுத்து வருகின்றனர் .

இங்கு உரையாற்றிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், யுத்தம் முடிவடைந்த பின்னர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருக்கும்போது 13 ஆவது திருத்த சட்டத்திற்கு மேல் சென்று வடகிழக்கு தமிழ் மக்களுக்கு தீர்வை பெற்றுத்தருவேன் என உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் கூறினார். ஆனாலும் இதுவரையில் 13 பிளஸ் தொடர்பாக யுத்தம் முடிவடைந்து மக்களை பலிகொண்டு 13 வருடங்கள் நிறைவடைந்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் சிங்கள மக்களே அவரை துரத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. மக்கள் அன்று தமிழ் மக்கள் பட்டதுயரை அவர் இன்று அனுபவிக்கின்றார். அன்று அவர் வடகிழக்கிலே வாழ்ந்த மக்களை துரத்தி அடித்தார். ஆனால் இன்று வடகிழக்கின் தாயகமான திருகோணமலையிலே அவர் தஞ்சம் புகுந்துள்ளார் என்றார்.

## ஊடகவியலாளர் முஸ்தபாவின் தந்தை காலமானார்



**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

ஓய்வு பெற்ற அதிபரும், பிரபல எழுத்தாளரும், ஸலவாத்து மாலை நூலாசிரியரும்,கிழக்கிலங்கை இஸ்லாமிய வலது குறைந்தோர் பாடசாலை ஸ்தாபகரும், இலக்கியவாதியும், அஹதியா இயக்கத்தின் ஆயுட்கால செயற்பாட்டாளருமான கலாபூசணம் அல்ஹாஜ் எம்.ஏ.செய்யிது முஹம்மது புதன்கிழமை (18) அதிகாலை காலமானார்.

அன்னாரது ஜனாஸா நல்லடக்கம் காத்தான்குடி முகைதீன் மெத்தை பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் மையவாடியில் நேற்று இடம்பெற்றது.

இவர் சிரேஷ்ட ஊடகவியலாளரும், சிறீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தேசிய அமைப்பாளருமான மௌலவி எஸ்.எம்.எம்.முஸ்தபாவின் அன்பு தந்தையாவார்.

## பொத்துவில் வைத்தியசாலையில் வெசாக் தின நிகழ்வுகள்



**(பாலமுனை விசேட நிருபர்)**

வெசாக் பண்டிகையையொட்டி அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களும் ஞாயிற்றுக்கிழமை (15) வெசாக் கூடுகளினால் அலங்கரிக்கப்பட்டு மத வழிபாடுகள் மற்றும் பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

பொத்துவில் ஆதார வைத்தியசாலையிலும் வெசாக் தின நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. வைத்தியசாலை வளாகம் வெசாக் கூடுகளினால் அலங்கரிக்கப்பட்டு பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

வைத்தியசாலையில் உள்ள நோயாளர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு (தன்சல்) பகல் போசனம் வழங்கப்பட்டதுடன், அன்றைய தினம் இரவு பக்திப்பாடல் மற்றும் பல்வேறு போட்டி நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. அதனைத்தொடர்ந்து சகலருக்கும் உணவு மற்றும் பானம் என்பன வழங்கப்பட்டது.

குறித்த போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பொத்துவில் ஆதார வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்தினால் பரிசில்களும் வழங்கப்பட்டது.

வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.ரஜாப், நலன்புரிச் சங்கத்தின் தலைவர் டொக்டர் ஏ.எம்.எம்.இஸ்ஸடீன், செயலாளர் டொக்டர் எஸ்.எச்.யஸீர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு குறித்த பரிசில்களை வழங்கி வைத்தனர்.

## மூதூரில் மீன்பிடி தொழில் பாதிப்பு

**(மூதூர் தினகரன் நிருபர்)**

தற்போது மூதூர் கொட்டியாரக்குடாக் கடலில் ஏற்பட்டுள்ள கடல் கொந்தளிப்பு மற்றும் வீசும் பலமான காற்றினாலும் தக்வாநகர், ஹபீப்நகர், சம்பூர், கடற்கரைச்சேனை, இறால் குழி, பஹ்ரியாநகர் போன்ற கிராம கரையோர மீனவர்கள் கடந்த சில தினங்களாக கடலுக்கு செல்ல முடியாத நிலையில் பெரும் முடக்கத்திற்கு உள்ளாகி உள்ளனர்.

அன்றாட ஜீவனோபாய தொழிலாக பெருமளவிலான கரையோர மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் மாத்திரம் ஈடுபடுபவர்கள். இந்நிலையில் ஆழ்கடல் மீன்பிடி, தூண்டில் தொழில் மற்றும் வலைத்தொழில் என தொழில் புரியும் பல நூற்றுக்கணக்கானோர் மீன்பிடித் தொழிலுக்கு செல்ல முடியாது பெரிதும் கஸ்டப்படுகின்றனர்.

## சாய்ந்தமருது துர்நாற்ற விவகாரம்; சுகாதார தரப்பினரின் உயர்மட்ட கலந்துரையாடல்

**நற்பிட்டிமுனை விசேட நிருபர்**



சாய்ந்தமருதில் சில நாட்களாக பிந்திய மாலை பொழுது முதல் அதிகாலை நேரம் வரை துர்நாற்றம் வீசிவருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் நிர்வாகிகள், பிரதேச வாசிகள், பொது அமைப்புக்கள் இந்த தூர்நாற்றம் தொடர்பில் கல்முனை பிராந்திய சுகாதார அதிகாரிகள், கல்முனை மாநகர சபையினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கேட்டுக்கொண்டனர்.

இது தொடர்பில் நடவடிக்கை எடுத்து சாய்ந்தமருது விலங்கறுமனை அடங்களாக பல்வேறு இடங்களில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட சுகாதாரத்துறையினர், பல உண்மைகளை இதன்போது கண்டறிந்தனர். இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை பெற்றுக்கொடுக்கும் சுகாதார அதிகாரிகள் மற்றும் பிரதேச முக்கியஸ்தர்களுடனான உயர்மட்ட கலந்துரையாடல் ஒன்று சாய்ந்தமருது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி யூ.எல்.எம். நியாஸ் தலைமையில் செவ்வாய்க்கிழமை (17) இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் கல்முனை மாநகர ஆணையாளர் எம். சி. அன்ஸார், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ், கல்முனை மாநகர பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம். ஜே.கே.எம். அர்சத் காரியப்பர், மாநகர பொறியியலாளர் எம்.ஜே. எம். ஜெளசி, சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ஐ.எம். சம்சுதீன், சாய்ந்தமருது ஜும்ஆ பள்ளிவாசல் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## வாழைச்சேனை விவசாயிகளின் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது

**கல்குடா நிருபர்**

வாழைச்சேனை கமநல சேவை திணைக்களத்தினால் உரம் வினியோகம் மற்றும் நஷ்டஈட்டுக்கு பதிவதற்கு கட்டாயம் திணைக்களத்தில் பொருட்கள் கொள்வனவு செய்ய வேண்டும் என கூறியமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, வாழைச்சேனை கமநல சேவை திணைக்களத்திற்கு முன்பாக விவசாயிகள் சிலர் செவ்வாய்க்கிழமை (17) மேற்கொள்ளயிருந்த போராட்டம் கைவிடப்பட்டது.

வாழைச்சேனை கமநல சேவை திணைக்களத்தின் கீழ் இருபத்தொன்பது விவசாய அமைப்புக்கள் உள்ளன. இதில் விவசாயிகளுக்கு வழங்குவதற்காக மைலம்பாவெளி பாமில் இருந்து மாங்கன்று கொள்வனவு செய்து விவசாயிகளுக்கு கட்டாயத்தின் பேரின் ஒரு கன்று 300 ரூபாவுக்கு விற்பனை செய்தமை காரணமாகவே விவசாயிகள் போராட்டம் செய்வதற்கு தயாரான நிலையில் ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

## தினகரன் செய்திக்கு பலன்



**(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)**

அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பாலமுனை கமநல சேவை மத்திய நிலையத்திற்கு முன்னால் ஒலுவில் பாலமுனை பிரதான வீதியில் அமைந்துள்ள பயணிகள் போக்குவரத்து தரிப்பிடம் ஒலுவில் பிரதேசத்தில் கடந்த 01.02.2021ஆம் திகதி வீசிய மினி சூறாவளியினால் முற்றாக சேதமடைந்தது.

இதனால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

இது தொடர்பாக கடந்த வருடம் 2021.10.06 ஆம் திகதி தினகரன் பத்திரிகையில் வெளியான செய்தியின் ஊடாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டப்பட்டது. இதன் பயனாக தற்பொழுது பஸ்தரிப்பு நிலையம் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உதவியினால் புனரமைக்கப்பட்டு தற்பொழுது மக்கள் பாவனைக்காக விடப்பட்டுள்ளது.

பொது மக்களின் நலன் கருதி பயணிகள் போக்குவரத்து தரிப்பிடத்தை புனரமைப்பதற்கு உதவி செய்த அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கும், பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உறுப்பினர், பிரதேச சபை நிருவாகத்திற்கும் தினகரன் பத்திரிகை மற்றும் அதன் ஆசிரியர் பீடத்துக்கும் பொது மக்கள் நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்கின்றனர்.

## நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறிய வர்த்தகர்களுக்கு அபராதம்

**(ஒலுவில் விசேட நிருபர்)**

அம்பாறை மாவட்டத்தில் கடந்த ஏப்ரல் மாதம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த 35 வழக்குகளுக்கு, நீதிமன்றங்களினால் 06 இலட்சத்தி 06 ஆயிரத்தி 500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட புலனாய்வு உத்தியோகத்தர் கே.எம்.ஏ. றிஸ்லி தெரிவித்தார்.

இக்கட்டான கால கட்டத்தில் கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதலான விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் செய்த முறைப்பாட்டையடுத்து அம்பாறை, தெஹியத்தக்கண்டி, பொத்துவில், அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை ஆகிய பிரதேசங்களில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்ளஸின் ஆலோசனைக்கமைய பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என். எம். சாலிய பண்டார தலைமையில் சுற்றி வளைப்புகளை பாவனையாளர் அலுவலகல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் மேற்கொண்டதாக தெரிவித்தார்.

அம்பாறை, தெஹியத்தக்கண்டி, அக்கரைப்பற்று, பொத்துவில், கல்முனை, சம்மாந்துறை ஆகிய நீதிமன்றங்களின் நியாயாதிக்க பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட 34 சுற்றிவளைப்புகளில், தாக்கல் செய்யப்பட்ட 35 வழக்குகளுக்கு நீதிமன்றங்களினால் 06 இலட்சத்தி 06 ஆயிரத்தி 500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள அத்தியவசியப் பொருட்களின் கட்டுப்பாட்டு விலையை விட கூடுதல் விலைக்கு விற்பனை செய்பவர்கள் எதிர்காலத்தில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்களால் வர்த்தக நிலையங்களில் திடீர் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அத்தியாவசிய பொருட்களின் விலை தொடர்பான கலந்துரையாடல்



**கிண்ணியா தினகரன் நிருபர்**

கிண்ணியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேசங்களில் அத்தியாவசிய பொருட்களின் விலை தொடர்பிலான கலந்துரையாடல் கிண்ணியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை (17) நடைபெற்றது.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம். கனி தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில், கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிண்ணியா நகர சபை தவிசாளர் எம்.எம். நிவாஸ், கிண்ணியா பிரதேச சபை தவிசாளர் ஏ.எஸ். நஸீர், கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச். எம். றிஸ்வி, குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி எம்.எம்.எம். அஜித், கிண்ணியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கிண்ணியா கடற்படை கட்டளையிடும் தளபதி, கிண்ணியா வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் ஆகியோரோடு, கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வர்த்தக, சதொச மற்றும் பலநோக்கு கூட்டுறவு விற்பனை நிலையங்களின் தலைவர்கள் உட்பட பல முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.




# கட்சிகளை உடைத்தல், உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் அரசியல் கலாசாரம் ஒழிக்கப்பட வேண்டும்

(நுவரெலியா தினகரன் நிருபர்)

பஷில்ராஜபக்ஷ அரசியலில் இருக்கும் வரை நாட்டில் மாற்றத்தை கொண்டுவரமுடியாதென, நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார். பிரதி சபாநாயகர் தெரிவு தொடர்பாக நேற்று (18) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது,

சபாநாயகர் தெரிவில் கட்சிகள் ஒற்றுமையாக செயற்பட தீர்மானித்திருந்தன. இதனை இல்லாமல் செய்தவர் இந்த பெஷில் ராஜபக்ஷவே. அரசியலில் இருந்து ஒதுங்கும் வரை அல்லது அவரை அப்புறப்படுத்தாத வரை நாட்டி அரசியலில் மாற்றத்தை கொண்டுவர முடியாது.

பிரதி சபாநாயரை தெரிவு செய்யும் விடயத்தில்,

பெண்ணொருவர் தெரிவாக வேண்டுமென்பதே பிரதமரின் கருத்தாக இருந்தது. இதன்படி, அனைத்து தரப்பினருடனும் ஐக்கிய மக்கள் சக்தி கலந்துரையாடி பெண் ஒருவரை பெயரிட்டிருந்தது.அதற்கு அனைவரும் சம்மதித்திருந்தனர். இந்நிலையிலேயே, பெஷில் ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் ஒருவர் நியமிக்கப்பட்டார்.



இதனால், பாராளுமன்றத்தில் இருவரது பெயர்கள் முன்மொழியப்பட்டன.இதனால், வாக்கெடுப்பின் மூலமாக ஒருவரை தெரிவு செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இரண்டு குழுக்களாக பிரிந்து செயற்படவும் இந்நிலைமை வழி கோலியது. பாராளுமன்ற உறுப்பினர்களிடையே இருந்த ஒற்றுமையை சீர் குலைத்தது இதுதான். கட்சிகளை உடைப்பது, உறுப்பினர்களை விலைக்கு வாங்குவது போன்ற நிலைமைகள் அரசிலில் இல்லாதுபோக வேண்டுமானால், குறித்த இந்நபர் அரசியலிலிருந்து ஒதுங்க வேண்டும்.

பாராளுமன்றத்தில், பிரதமர் ரணில் விக்ரசிங்க நினைப்பது போல நடக்க முடியாது என்பதை இந்த பிரதி சபாநாயகர் தெரிவு புலப்படுத்தியுள்ளது. இதை, பிரதமருக்கு உணர்த்தவே இவ்வாறு செய்யப்பட்டது.

இவ்வாறானவர்களுடன் தொடர்ந்து பிரதமர் எப்படி பயணிக்கப்போகின்றார்? அவர் எதிர் பார்க்கின்ற மாற்றத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துவார்.? தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது அல்லது அனைத்து கட்சிகளும் இணைந்து செயற்படுவது என்பதெல்லாம் வெறும் பேச்சில் மாத்திரமே இருக்க முடியும்.இவற்றை செயலில் காட்ட முடியாத நிலைமையே ஏற்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க இந்த விடயம் தொடர்பாக உடனடியாக சரியான ஒரு முடிவை எடுக்க வேண்டும். யாருடன் தொடர்ந்து பயணிப்பது. அப்படியானால் உடனடியாக செய்ய வேண்டிய மாற்றங்கள் என்ன? என்பதை சிந்தித்து செயற்பட வேண்டும்.

இல்லாவிட்டால் அவர் எதிர் பார்க்கின்ற இலக்கை நோக்கி ஒரு நாளும் பயணிக்க முடியாது. பெஷிசிலின் தலையீடு தொடருமாக இருந்தால் ஏனைய கட்சிகள் பிரதமருக்கு வழங்குவதற்கு தீர்மானித்திருக்கின்ற ஆதரவை தொடர முடியுமா? என்ற கேள்வியும் ஏற்படும்.எனவே இது தொடர்பாக பிரதமர் உடனடியாக சிந்தித்து செயற்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சட்ட விரோத மாணிக்க கல் அகழ்வு நான்கு பேர் கைது, பொருட்களும் மீட்பு

(மஸ்கெலியா தினகரன் விஷேட நிருபர்)

கடந்த 16 ம் திகதி மாலை வேளையில் நோர்வூட் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு இரகசிய இரகசிய தகவல்கள் கிடைத்ததை தொடர்ந்து, சட்ட விரோதமாக மாணிக்க கற்கள் அகன்ற 4 பேர் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

பொகவந்தலாவ நோர்வூட் பகுதியிலுள்ள காசல்ரி நீர் தேக்கத்திற்க்கு நீரை வழங்கும் பிரதான ஆறுகளில் ஒன்றான கெசல்கமு ஓயாவில்,இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து மாணிக்க கற்கள் அகழ்வதற்கான உபகரணங்கள்,மற்றும் அகழ்ந்தெடுக்கப்பட்ட மாணிக்கக்கல் படிமங்கள் என்பன கைப்பற்றப்பட்டதாக நோர்வூட் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரேமலால் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில், இரகசிய தகவல்களை தொடர்ந்து நோர்வூட் பொலிஸ் நிலைய அதிகாரி மற்றும் பொலிஸார் அங்கு சென்று சுற்றி வளைத்து நான்கு பேரை கைது செய்தனர். இவர்கள், ஹற்றன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர்.

# நீர்த்தேகக்கத்தின் மத்தியில் தோற்றமளிக்கும் கண்கவர் மலர்கள்



(ஹற்றன் சுழற்சி நிருபர்)

மஸ்கெலியா, மவுஸ்ஸாக்கலை நீர்த்தேக்கத்தில் நீர் வற்றிப்போகும் காலப்பகுதியில், நீர்த்தேக்கத்தின் மத்தியில் வண்ணமயமான பூக்கள் பூத்துக் குலுங்குவது அழகிய காட்சியாக மாறியுள்ளது. இந்த அழகான பூக்கள் ஊதா, வெள்ளை மற்றும் நீல நிறங்களை கொண்டுள்ளன. இந்த மலர்கள் கொத்துக் கொத்தாக பூத்துள்ளதுடன், முட்களும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு முறையும் நீர் வற்றும்போது இந்த அழகான பூக்கள் பூத்து குலுங்குவதாக இதனை பார்வையிடுவதற்கு வருவோர் கூறுகின்றனர்.

## குக்குலேகங்க நீர்த்தேக்கத்தின் இரு வான்கதவுகள் திறப்பு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்தின் கலவான மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் பெய்து வரும் மழை காரணமாக, கிளை ஆறுகளின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது.இதனால், குக்குலேகங்க ஆற்றில் வெள்ளம் ஏற்பட்டு, இதன் இருவான் கதவுகள் திறக்கப்பட்டதாக இந்நீர்த் தேக்கத்தின் பொறியியலாளர்கள் நேற்றுத் தெரிவித்தனர். இதனால், களுத்துறை மாவட்டத்தின் புளத்சிங்கள பிரதேசத்தில் பல வீதிகள் நீரில் மூழ்கி போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்த போதிலும், இந்நிலைமை தற்போது சீரடைந்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பிரதேச காரியாலய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# இரத்தினபுரி பகுதியில் வன்முறையில் ஈடுபட்ட 14 பேர் இதுவரை கைது

(பலாங்கொடை தினகரன் நிருபர்)

இரத்தினபுரி பொலிஸ் பிரிவில், வன்முறைகளில் ஈடுபட்டு சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை தொடர்பில் இதுவரை 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவங்கள் பற்றி செய்யப்பட்டிருந்த ஒன்பது முறைப்பாடுகளுக்கிணங்க இவர்கள் கைதாகியுள்ளனர்.

பலாங்கொடைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் அகில சாலிய எல்லாவள, பலாங்கொடை நகர சபைத் தலைவர் வஸந்த குணரத்ன, பலாங்கொடை பிரதேச சபைத் தலைவர் சுனில் பேமசிரி ஆகியோரின் வீடுகள் சேதப்படுத்தப்பட்டமை வாகனங்களுக்கு மற்றும் வீடுகளுக்கு தீவைக்கப்பட்டமை தொடர்பிலே இவர்கள் கைதாகியுள்ளனர்.

இச்சந்தேக நபர்களில் முச்சக்கர வண்டி சாரதிகள், வியாபாரிகளும் அடங்குவதாக குற்றத் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி வலய பொலிஸ் அதிகாரி சேனக வீரசிங்கவின் பணிப்புரையின் கீழ், குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரியும், பிரதான பொலிஸ் பரிசோதகருமான விஜேசேகரவின் மேற்பார்வையின் கீழ் மேலதிக விசாரணைகக்ள் முன்னெடுக்கப்படுகின்றன.

# நுவரெலியா மாவட்டத்தில் 106 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு, ரூபா 12 இலட்சம் அபராதம்

(நுவரெலியா தினகரன் நிருபர்)

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த நான்கு மாதத்தில் 106 வர்த்தகர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில்,12 இலட்ச ரூபா தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ளதாக நுவரெலியா பாதுகாப்பு நுகர்வோர் அதிகாரசபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். நுவரெலியா, வலப்பனை, ஹற்றன் மற்றும் நாவலப்பிட்டிய நீதிமன்றங்களில் இந்த வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது.

அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்தமை, பொருட்களின் விலைகளைக் காட்சிப்படுத்தாமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளுக்காகவே இவ்வர்த்தகர்கள் மீது வழங்கு தாக்கல் செய்யப்பட்டது.

இது தொடர்பாக அவரிடம் வினவியபொழுது.

தொடர்ச்சியாக சோதனைகளில் ஈடுபட்டுவருகின்றோம். எங்களுக்கு பொது மக்களிடமிருந்து தொடர்ந்தும் புகார்கள் கிடைத்தவண்ணமே உள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால், சில வர்த்தகர்கள் பொருட்களை அதிக விலைக்கு விற்பது தொடர்பாக அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எனவே, அதிகார சபை என்ற வகையில் பொது மக்களின் நலனை கருத்திற்கொண்டு செயற்படுகின்றோம்.

குறிப்பாக அத்தியாவசிய பொருட்களை விற்பனை செய்கின்ற சில்லறை வியாபாரிகள், மொத்த வியாபாரிகளுக்கு எதிராகவே அதிக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேலும், உரம் கிருமிநாசினிகளை விற்பனை செய்கின்ற வியாபாரிகள், மருந்தகங்கள் எரிவாயு விற்பனையாளர்கள் போன்ற வர்த்தகர்களுக்கு எதிராகவும் அதிகமான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அண்மையில், கினிகத்தேனை பகுதியில் எரிவாயு சிலின்டர்களை பதுக்கிவைத்திருந்த முகவரின் இல்லத்தை முற்றுகையிட்டபோது, அவரிடமிருந்து 230 ஏரிவாயு சிலின்டர்கள் கைப்பற்றப்பட்டன.அதில் 12.5 கிலோ எடையுடைய 177 சிலிண்டர்களும் 5 கிலோ எடை கொண்ட 28 சிலின்டர்களும் 2.3 கிலோ எடை கொண்ட 25 சிலின்டர்களும் பதுக்கிவைக்கப்பட்டிருந்த நிலையின் கண்டுபிடிக்கப்பட்டன.

இதையடுத்து,சகல எரிவாயு சிலின்டர்களும் கினிகத்தேனை பொலிஸ் நிலையத்தில் வைத்து பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டது.இதன் மூலம் கிடைத்த 532789 ரூபா அரசாங்கத்தின் நிதியில் வைப்பிலிடப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## ஓடும் ரயிலுக்கு முன்னால் பாயந்த இளைஞர், மரணம்

(ஆ.ரமேஸ்)

நானுஓயாபெரகும்பர ரயில் நிலையத்திற்கருகில், சரக்கு ரயிலுக்கு முன்னால் பாய்ந்து (16) இளைஞர் ஒருவர், சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். கந்தப்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பார்க் தோட்டத்தில் வசிக்கும் பெருமாள் ராமேஸ்வரன் (வயது 39) என்பவரே உயிரிழந்துள்ளார்.இவர், திருமணம் முக்காதவரெனவும் தெரியவந்துள்ளது. ரயிலுக்குமுன் பாய்ந்து, உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சித்தது ஏன்?என்பது என்பது தொடர்பில் நானுஓயா பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.இச்சம்பவம் குறித்து நானுஓயா பொலிஸார், சரக்கு ரயில் ஓட்டுநரிடம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## தெரு நாய்களால் பாதசாரிகள் அசௌகரியம்

(பலாங்கொடை தினகரன் நிருபர்)

பலாங்கொடை நகரம், ஏனைய கிராமபுறப் பாதைகள் மற்றும் பிரதான பாதைகளில் கூட்டமாக அலைந்து திரியும் தெரு நாய்களால், பெரும் கஷ்டங்களையும் ஆபத்துகளையும். எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக பொதுமக்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இதன் காரணமாக வாகனங்களை செலுத்தும் சாரதிகள் பல பிரச்சினைகளுக்கு ஆளாகியுள்ளனர். இந்த நாய்களால் பாதையில் விபத்து ஏற்படும் நிலைமைகளும் அதிகரித்துள்ளன.

பலாங்கொடை நகரிலும் மற்றும் இராசகலை பின்னவல வெலிகேபொல பம்பஹின்ன கலகமநகரங்களில் கட்டாக்காலி மாடுகளும் கூட்டமாக பாதையில் அலைந்து திரிவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். அதே சமயம் பின்னவல பாதையிலும் இரத்தினபுரி பாதையிலும் கல்தொட்ட, பெட்டிகல, ஓலுகன்தொட்ட பாதைகளிலும் நாய்கள் கூட்டமாக பாதையில் அலைந்து திரிவதால், பாடசாலைக்கு நடந்து வருகின்ற மாணவர்களும் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

# மீகஹகியுல பிரதேச குடும்பங்களுக்கு விவசாய உபகரணங்கள், விதைகள் அன்பளிப்பு

ஹாலிஎல விஷேட நிருபர்

தோட்ட வீடமைப்பு உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சின் வினைத்திறனான வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், விவசாய உபகரணங்கள் மற்றும் விதைப் பொதிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு, மீகஹகியுல பிரதேச செயலகத்தில் உதவிப் பணிப்பாளர் திருமதி பிரியந்தி ஐராங்கனி தலைமையில் இடம்பெற்றது.விவசாய குடும்பங்களின் வாழ்வாதாரத் தை மேம்படுத்தும் நோக்கில் இப்பொருட்கள் வழங்கப்பட்டன.

இதற்கிணங்க மீகஹகியுல "றோ" பெரிய பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட 35 குடும்பங்களுக்கு இவ்வுபகரணங்கள் வழங்கப்பட்டன.



மீகஹகியுல பிரதேச செயலாளர் திருமதி என்.பி.சமரவிக்ரமவின் பணிப்புரையின்பேரில், பெருந்தோட்ட சமூக தொடர்பாடல் உத்தியோகத்தரின் பங்குபற்றுதலுடன் மீகஹகியுல பிரதேச செயலகத்தில் இந்நகிழ்வு இடம்பெற்றது.

# ஹற்றன் பிரதேச மண்ணுக்கு கௌரவம் பெற்றுத்தந்தோருக்கு பாராட்டு



(தலவாக்கலை குறூப் நிருபர்)

ஹற்றன் பிரதேச ஆசிரியர்கள் ஐவர் கல்வி மற்றும் முகாமைத்துவ துறைகளில் கலாநிதி பட்டம் பெற்று ஹற்றன் மண்ணுக்கும், மலையகத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர். ஹற்றன் ஹைலன்ஸ் கல்லூரியின் ஆசிரியர் செல்லையா குமார், கொட்டகலை கேம்ரிஜ் கல்லூரியின் ஆசிரியர் வேலுப்பிள்ளை ரமேஸ்குமார், பத்தனை ஸ்ரீபாத தேசிய கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் முத்தையா கிருஸ்ணகுமார், நுவரெலியா கல்வி வலயத்தின் ஆசிரிய ஆலோசகர் வேலுசாமி ஸ்ரீகுமார், கொத்மலை கல்வி வலயத்தின் கோட்டக் கல்விப் பணிப்பாளர் மாரிமுத்து சுப்ரமணியம் இங்கர்சால் ஆகியோரே, வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றினூடாக கலாநிதி பட்டத்தினை பெற்றுள்ளனர். இவர்கள் கலாநிதி பட்டத்தை பெறுவதற்கும் இவர்களின் ஆய்வுக்கும் வழிகாட்டியாகவும் வளவாளர்களாகவும் செயற்பட்ட கலாநிதி பொன்னம்பலம் சிங்கரட்ணம், கலாநிதி சுப்ரமணியம் தனபாலன், கலாநிதி எஸ்.தெய்வேந்திரன், கலாநிதி சந்திரகுமார் ஆகியோர் இவர்களால் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வு ஹற்றன் அஜந்தா வரவேற்பு மண்டபத்தில் (16) இடம்பெற்றது. இதன்போது கலாநிதி பொன்னம்பலம் சிங்கரட்ணத்திற்கு கலாநிதி பட்டம் பெற்ற ஆசிரியர்களால் நினைவு பரிசு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மலையகம் தொடர்பான பிரச்சினைகளை ஆய்வுக்குட்படுத்தி பயன் உறுதி வாய்ந்த முன்மொழிவுகளை உரிய தரப்பினருக்கு வழங்குவதற்கு பூரண முடிவுகளும் எடுக்கப்பட்டன.

# வீட்டுக்குத் தீயிட்டு கொள்ளையிட்டதாக முறைப்பாடு

அக்குறணை குறூப் நிருபர்

கண்டி மாநகர சபை பொதுஜன பெரமுன உறுப்பினர் சங்கீத் சில்வாவின் வீட்டுக்கு தீயிடப்பட்டதில் சுமார் 34 பவுண் எடை கொண்ட தங்க நகைகள் காணாமல் போயுள்ளதாக,(18) அவரின் மனைவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கண்டியில் அமைக்கப்பட்டிருந்த கோட்டாகோகம கிளை கடந்த (09) தாக்கப்பட்டது.இதையடுத்து கண்டி போகம்பறைப் பிரதேசத்திலுள்ள கண்டி மாநகர சபை உறுப்பினர் சங்கீத் சில்வாவின் வீடும் தாக்கப்பட்டது.

இச்சம்பவத்தையடுத்து மேற்படி வீட்டிலிருந்த 34 பவுண் எடை கொண்ட தங்க நகைகள் மற்றும் 8 இலட்ச ரூபா ரொக்கப் பணம் உட்பட இன்னும் பெறுமதியான பல பொருட்கள் காணாமல் போயுள்ளதாக அவரது மனைவி கே.ஜீ ரேனுகா தர்மவங்ச,கண்டி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.காலி முகத்திடல் சம்பவத்தையடுத்து ஏற்பட்ட கலவரத்தில் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்யும் நடவடிகைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



# நீங்களும் GI வாங்கத் தயாரா?

## GI என்றால் என்ன?

GI என்பது Geographical Indication என்ற சொல்லின் சுருக்கமான எழுத்துகளாகும்.
இது தமிழ் மொழியில் "புவியியல் சார்ந்த குறியீடு" என்று அழைக்கப்படுகிறது.

## புவியியல் சார்ந்த குறியீடு (GI) என்பது என்ன?

- புவியியல் சார்ந்த குறியீடு என்பது விசேட நிலப்பகுதி/ பண்புகளினால் புகழ் மற்றும் பிரபலம் அடைந்த உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் அடையாளமாகும்.
  உதா: ருஹுணு தயிர், மள்வானை ரம்புட்டான், அம்பலங்கொடை முகமூடி.
- இந்த GI குறியீடு, குறித்த உற்பத்திக்காக வழங்கப்படுகின்ற புலமைசார் சொத்து உரிமை தொடர்பான சான்றிதழாகும்.
- இந்த சான்றிதழ் வழங்கப்படுவது ஒரு நபருக்கு அல்லது நிறுவனம் ஒன்றுக்கு அன்றி தெரிந்த ஒரு பகுதி/ நிலத்தில் செய்யப்படுகின்ற உற்பத்தி அல்லது ஒட்டுமொத்த பெறுமதி சேர் செயற்பாட்டுக்கு மாத்திரமாகும். இந்த சான்றிதழின் மூலம் அந்த உற்பத்தி அல்லது செயற்பாட்டின் தனித்துவம் உள்நாட்டிலும் அதேபோன்று சர்வதேச மட்டத்திலும் பாதுகாக்கப்படுவதோடு அது சந்தை விலை தொடர்பில் பெறுமதி சேர்க்கப்பட்ட மதிப்புக்கு உரித்தாகும்.

## புவியியல் சார்ந்த குறியீடு GI மூலமான நன்மைகள் என்ன?

1. புவியியல் சார்ந்த குறியீடு உரித்தாவதன் மூலம் குறித்த பயிருக்காக புலமைசார் சொத்து உரிமையை பாதுகாக்கும் சட்டரீதியான ஆதரவு கிடைக்கும்.
2. நேரடியான உற்பத்திகளுக்கு பல்தரப்பட்ட சந்தைவாய்ப்பின் மூலம் பெறுமதிசேர் சங்கிலியில் உள்ள பங்குதாரர்களுக்கு வருமானம் சிறப்பாகப் பகிரப்படுகிறது.
3. GI சான்றிதழ் ஊடாக புவியியல் அமைவு அடிப்படையில் பயிர்களின் பண்பு தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நாமம் ஒன்று கிடைப்பதுடன் உற்பத்திகளின் விலை 20%க்கும் 50%க்கும் இடையே உயரும்.
4. உற்பத்திகளின் பண்புகள் தொடர்பில் வாடிக்கையாளர் நம்பிக்கை அதிகரித்தல்.
5. விவசாய உற்பத்திகளுக்கு இடையே எப்போதும் ஏற்படுகின்ற விலை மாற்றத்தை மட்டுப்படுத்தும் வாய்ப்பு கிடைத்தல்.
6. பெரும்பாலும் புவியியல் சார்ந்த குறியீட்டுக்கு தொடர்புடைய உற்பத்திகள் பாரம்பரிய உற்பத்திகளாக இருப்பதால் மிக உயர்ந்த சுற்றுலாசார் சர்ப்பைப் பெறுகிறது.
7. பிராந்திய அபிவிருத்தி, கலாசார மற்றும் உள்நாட்டு புலமைக் காப்பு போன்ற சமூக, பொருளாதார மற்றும் கலாசார கூறுகள் மேம்படுதல்.
8. புவியியல் சார்ந்த குறியீட்டு (GI) சங்கம் மற்றும் இணைப்புகள் ஊடே புதிய முதலீடுகள் அந்தத் துறைகளைக் கவர்தல்.

## இலங்கையில் புவியியல் சார்ந்த குறியீடு தொடர்பில் தற்போதைய நிலை...

இலங்கை கறுவா பயிருக்காக "சிலோன் சினமன்" என்ற பெயரில் முதல் முறையாக புவியியல் சார்ந்த குறியீட்டு சான்று (GI) தற்போது பெறப்பட்டிருப்பதோடு ஏற்றுமதியை மையப்படுத்திய வேறு விவசாய பயிர்களுக்காக இந்த (GI) புவியியல் சார்ந்த குறியீட்டு கட்டமைப்புகளை உருவாக்குவதை இலக்காகக் கொண்டு புதிய திட்டம் ஒன்று சிறு ஏற்றுமதி, பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை இராஜாங்க அமைச்சு மற்றும் ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் விவசாய மேம்பாட்டு நிறுவனத்தின் பங்களிப்புடன் வெற்றிகரமாக தற்போது செயற்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி இந்தத் திட்டத்தின் கீழ் விவசாய திணைக்களம், ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் உட்பட பல்வேறு தரப்புகளின் பங்கேற்புடன் இடம்பெற்ற பயிற்சிப்பட்டறை ஒன்றில் முன்மொழியப்பட்ட பின் விரிவாக மேற்கொள்ளப்பட்ட மூலத்தை ஆய்வு செய்தல், துறைசார் அவதானிப்பு மூலமான விபரங்களை அடிப்படையாகக் கொண்டு தேர்வு செய்யப்பட்ட இரு பயிர்களுக்காக புவியியல் சார்ந்த குறியீட்டை பெற்றுக்கொள்வதை இலக்காகக் கொண்டு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.





## அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட பயிர்கள்:

- **"சிலோன் கோல்டன் அன்னாசி" - கொழும்பு, கம்பஹா, களுத்துறை, குருநாகல் மற்றும் கேகாலை பிரதேசங்களில் பயிரிடப்படும் அன்னாசி**
- **"கொலொன்ன மிளகு" - கொலொன்ன, வெலிகேபொல, எம்பிலிப்பிட்டிய, கொடக்கவெல மற்றும் கட்டுன ஆகிய பிரதேச செயலக அலுவலகங்களுக்கு சொந்தமான பகுதிகளில் பயிரிடப்படும் மிளகு.**
- அதன்படி தேர்வு செய்யப்பட்ட மேலுள்ள இரு பயிர்களையும் அடிப்படையாகக் கொண்டு இரு சங்கங்கள் அமைக்கப்பட்டிருப்பதோடு அந்த சங்கங்களுக்காக குறித்த பயிர்கள் சார்ந்த மதிப்பீடல்களில் சம்பந்தப்படும் தரப்புகள் அதாவது விவசாயிகள், சேகரிப்போர், தயார்படுத்துவோர், விற்பனையாளர், ஏற்றுமதியாளர் ஆகிய அனைத்து பயன்பெறும் தரப்புகளும் அந்த சங்கத்தில் அங்கத்துவத்தை பெற முடியும்.
- புவியியல் சார்ந்த குறியீடுகளை பதிவு செய்வதன் மூலம் பல்வேறு நன்மைகளை பெற முடியும் என்பதோடு அதன்மூலம் வெளி ஆட்களினால் அனுமதியின்றி புவியியல் சார்ந்த குறியீட்டை உற்பத்திகளுக்கு பயன்படுத்துவதை தவிர்த்துக்கொள்ள முடியும்.
- அத்துடன், உற்பத்திகளுக்கு சட்டரீதியாக பாதுகாப்பு வழங்குவதுடன், பதிவு செய்யப்பட்ட உரிமையாளர்கள் மற்றும் அங்கீகாரம் பெற்ற பாவனையாளர்கள் அவர்களுடைய உற்பத்திகளை முதலில் இலங்கையிலும் இரண்டாவதாக உலக வர்த்தக அமைப்பில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகளிலும் பதிவு செய்வதற்கு அனுமதிக்கப்படுவதுடன், புவியியல் குறியீட்டாளர்களுக்கு உயர் மட்ட சர்வதேச பாதுகாப்பு கிடைக்கிறது.







## நீங்களும் மேலுள்ள பகுதிகளைச் சேர்ந்த அன்னாசி மற்றும் மிளகு பயன்பெறுவோரில் உள்ள செயற்பாட்டு தரப்பை சேர்ந்தவரா?

அவ்வாறெனில், சிலோன் கோல்டன் அன்னாசி மதிப்பீட்டில் உங்களது செயற்பாட்டை உறுதி செய்து, சிலோன் கோல்டன் அன்னாசி சங்கத்தில் அங்கத்துவத்தை பெறுங்கள்.
விண்ணப்பங்களை கொழும்பு, கம்பஹா, களுத்துறை, குருநாகல் மற்றும் கேகாலை மாவட்டங்களில் விவசாய ஆலோசகர் அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளுங்கள்.
மேலதிக விபரங்களுக்கு: ஜானக்கி அல்விஸ் அவர்கள்
விவசாய கண்காணிப்பு அதிகாரி
விவசாய திணைக்களம் - கம்பஹா மாவட்டம்
தொ.இ.:- 0714491597

அவ்வாறெனில், கொலொன்ன மிளகு மதிப்பீட்டில் உங்களது செயற்பாட்டை உறுதி செய்து, கொலொன்ன மிளகு சங்கத்தின் அங்கத்துவத்தை பெற்றுக்கொள்ளுங்கள்.
விண்ணப்பப் படிவங்களை இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திலும் மற்றும் வெலிகெபொல, பல்லெபெத்த, பனாமுர மற்றும் கொலொன்ன கமநல சேவை அதிகாரி அலுவலகத்திலுள்ள விரிவாக்க அலுவலர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
மேலதிக விபரங்களுக்கு: ஏ.ஜீ.ஏ. சரத் குமார அவர்கள்,
மாவட்ட விரிவாக்க அதிகாரி
ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் - இரத்தினபுரி மாவட்டம்
தொ.இ.:- 0714396782





சிறு ஏற்றுமதி பெருந்தோட்ட பயிர்ச்செய்கை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

Food and Agriculture Organization of the United Nations

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**
**நீர்ப்பாசன அமைச்சு**
**நீர்ப்பாசனத் திணைக்களம்**

**ஒன்றிணைக்கப்பட்ட நீரேந்து மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம்**
**[Integrated Watershed and Water Resources Management Project (IWWRMP)]**

செயற்றிட்ட இலக்கம்: **P166865.** கடன் இல. **IDA-66210**

## தேசிய போட்டி ரீதியிலான விலைகோரல்
## Rehabilitation of Dewahuwa Scheme
### Contract No: LK-MOMDE-123606-CW-RFB

2022-04-22ஆம் திகதிய தினகரன் பத்திரிகையில் பிரசுரமான மேற்படி விலைக்கோரல் விளம்பரத்தில் பின்வரும் வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| **விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் (திருத்தப்பட்ட) இறுதித் திகதி மற்றும் நேரம்** | - | 2022-06-03ஆம் திகதி மு.ப. 10.00 மணி |
| **விலைமனுக்கள் செல்லுபடியாகும் காலம்** | - | 2022-09-10ஆம் திகதி வரை |
| **விலைக்கோரல் பிணை முறி செல்லுபடியாகும் காலம்** | - | 2022-10-28ஆம் திகதி வரை |

2022-06-02ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை விலைமனுக்களைக் கொள்வனவு செய்யலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**நீர்ப்பாசனத் திணைக்களம்,**
**இல. 230, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07.** **2022-05-19ஆம் திகதி.**

---

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
## விலைமனுக்களுக்கான அழைப்பு
### மாதாந்த வாடகைக்கு அமர்த்துதல் அடிப்படையில் 02 எண்ணிக்கையான மோட்டார் கார்களை வழங்கல்

வாகன வழங்குநர் முழுதாக பராமரிக்கப்பட்ட வாகனங்களை வழங்குபவர் என்ற நிபந்தனைக்கு உட்பட்டதாக நிலையான மாதாந்த வாடகைக்கு வழங்கல் அடிப்படையில் இரு வருட காலத்திற்கு (24 மாதங்கள்) இரு மோட்டார் கார்களை வழங்குவதற்காக தகுதியுள்ள வழங்குநர்களிடமிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

தகுதியுள்ள வழங்குநர்கள் இலங்கையிலுள்ள உலகப் புகழ் பெற்ற வாகன உரிமைப் பெயர்களையுடைய விற்பனையாளர்களான வாகன முகவர்களாகவும் இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு பெற்ற நிதியிடல் நிறுவனங்களாகவும் கார் வாடகைக்கு வழங்கும் சேவைகள் (அதாவது காரொன்றை வாடகைக்கு வழங்கும் கம்பனிகள்) ஆகியவற்றுடன் ஆகக் குறைந்தது 10 வாகனங்களையுடைய நிறுவனமாகவுமிருத்தல் வேண்டும்.

2022.05.19 ஆம் திகதியிலிருந்து 2022.06.02 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் ஒவ்வொரு விலைமனுவிற்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக 3,000 ரூபாவை (மூவாயிரம் ரூபா மாத்திரம்) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சிறாப்பருக்கு செலுத்திய பின்னர், கொழும்பு-07, வோட் பிரதேசம், 20 ஆம் இலக்கத்திலுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பொது நிருவாகத்தின் பிரதி செயலாளரிடமிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை பெற்றுக் கொள்ளலாம்.

வழங்குநர் ஒரு வாகனத்திற்கு அல்லது 2 வாகனங்களுக்கான விலைமனுக்களை சமர்ப்பிக்கலாம்.

ஒரு வாகனத்திற்கு 43,200 ரூபாவிற்கானதும் (நாற்பத்தி மூவாயிரத்து இருநூறு ரூபா மாத்திரம்) இரு வாகனங்களுக்காகவெனின் 86,400 ரூபாவிற்கானதும் (எண்பத்தாறாயிரத்து நானூறு ரூபா மாத்திரம்) பெறுமதியான மீளளிக்கப்படும் விலைமனுப்பிணையாக அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தொகைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சிறாப்பரிடம் ரொக்கப் பணத்தில் செலுத்தப்படல் வேண்டும் அல்லது இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு பெற்ற அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வங்கி உத்தரவாதமாகவும் 2022.09.14 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலில்லாமல் இணைக்கப்படும் எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தபாலுறையின் இடது பக்க பக்க மேல் மூலையில் **"Bid for the supply of Motor Cars under monthly hiring basis to the UGC"** என அடையாளமிடப்பட்டு இரு பிரதிகளில் 2022.06.02 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இல. 20, வோட் பிரதேசம், கொழும்பு-07 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது கொழும்பு-07, வோட் பிரதேசம், 20 ஆம் இலக்கத்திலுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதி செயலாளரின் பொது நிர்வாக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் 2022.06.02 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு புதிய சபை அறையில் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் வழங்குநர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு அனுமதிக்கப்படுவார்கள்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது விலைமனுக்களின் தயாரித்தல் அல்லது சமர்ப்பித்தல் தொடர்பாக வழங்குநர்களுக்கு ஏற்படும் எந்தவொரு ஆகுசெலவு அல்லது செலவினங்களுக்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது பொறுப்பேற்க மாட்டாது.

மேலதிக தகவலை 011-2585183/077 3 683 929 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பொது நிருவாகத்திற்கான பிரதி செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.**
**இல. 30, வோட் பிரதேசம்,**
**கொழும்பு-07.**
19.05.2022

---

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை
### பாவனையிலிருந்து அகற்றப்பட்ட சிதைவடைந்த பதார்த்தங்களை விற்பனை செய்வதற்காக
## விலைமனுக் கோரல்

1. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட பின்வரும் உபகரணங்கள் மற்றும் தொகுதிகளை விற்பனை செய்வதற்காக, ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்து, பெறுகைக்குழுவின் தலைவரினால் விலைமனுக் கோரப்படுகின்றது.

| | இலக்கம் | உருப்படி | அலகு எண்ணிக்கை | மீளளிக்கப் படாத வைப்புத் தொகை ரூபா | மீளளிக்கப் படும் வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|---|---|---|
| 01 | Q 224/22 | மருத்துவ உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | தொகை மொத்த மாக | 1000.00 | 5,000.00 |
| 02 | Q 225/22 | லொண்டரிப் பிரிவு இயந்திரங்கள் | 04 | 1000.00 | 5,000.00 |

மேற்படி தொகையை ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டின் பிரதியொன்றை வைத்தியசாலையின் வழங்கல் பிரிவில் சமர்ப்பித்து இதற்கான விபரங்களுடன் கூடிய விலைமனுப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். அவை, 20.05.2022 முதல் 08.06.2022 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை வழங்கப்படும்.


3. விலைமனுப்படிவங்களைப் பெற்றுக்கொள்ள முன்னர் பண்டங்களின் தொகுதிகளைப் பரிசீலனை செய்தல் மின்சாரப் பரிவின் திரு. ஜயனாத் அவர்களைச் சந்தித்து மேற்கொள்ளலாம்.

4. அனைத்து விலைமனுக்களும், முத்திரையிடப்பட்ட உறைகளில் சேர்த்து வைத்தியசாலையின் நூலகத்திற்கண்மையிலுள்ள பெறுகைப் பெட்டியில் 09.06.2022 அன்று மு.ப. 10.00 இற்கு முன்னர் சேர்க்கப்படலாமென்பதுடன், பின்வரும் முகவரிக்குப் பதிவுத்தபாலிலும் 09.06.2022 மு.ப. 10.00 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு முன்வைக்கலாம். விலைமனுத் திறத்தல் 09.06.2022 அன்று மு.ப. 10.00 இற்கு வைத்தியசாலையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும், குறித்த உறைகளின் இடது பக்க மேல் மூலையில் விலைமனுவின் பெயர் (ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட சிதைவடைந்த பதார்த்தங்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக் கோரல்) மற்றும் இலக்கம் குறிப்பிடப்படல் வேண்டும். அவ்வேளையில் விலைமனுதாரர்கள் சமுகமளித்திருக்கலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் மற்றும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5. குறித்த விலைமனுவை முழுமையாக அல்லது அதன் பகுதியொன்றை, ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக்குழுவிற்கு உரித்தாகும்.

6. மேலதிக விபரங்களை வைத்தியசாலையின் வழங்கல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 011-2778610 நீடிப்பு 3142 அல்லது 011-2778624

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை**
**தளபத்பிட்டிய, நுகேகொடை.**



---

## கண்டி மாநகர சபை
## கேள்வி கால எல்லையை நீடித்தல்

கண்டி மாநகர சபையினால் 2022.04.22ம் திகதி சிங்கள மொழியில் தினமின பத்திரிகையிலும், தமிழ் மொழியில் தினகரன் பத்திரிகையிலும் ஆங்கில மொழியில் டெயிலி நியூஸ் பத்திரிகையிலும் கேள்வி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் கேள்விகளின் கால எல்லை தவிர்க்க முடியாத காரணத்தினால் நீடிக்கப்படுகிறது.

கேள்விப் படிவங்கள் வாரத்தின் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் 2022.05.31ம் திகதி பி.ப. 2.45 வரை விநியோகிக்கப்படுவதுடன் 2022.06.01 மு.ப. 10.00 இற்கு திறக்கப்படும்.

மேலதிக விபரங்களை கண்டி மாநகர கணக்காளர் (வருமானம்) இடம் அலுவலக நேரங்களில் நேரில் அல்லது 081-2227395 தொ.பே. இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**அட்டவணை**

01) மெனிக்கும்புர விசேட பொருளாதார நிலையத்திற்கு உள்பிரவேசிக்கும் வாகனங்களில் கட்டணங்களை அறவிடும் உரிமையை தற்காலிகமாக குத்தகைக்கு விடல்.
02) போகம்பர வார சந்தையில் கட்டணங்களை அறவிடும் உரிமையை தற்காலிகமாக குத்தகைக்கு விடல்.
03) மத்திய சந்தை இல. 167 (மாட்டிறைச்சி) கடை அறை கேள்வி கோரல்
04) கண்டி மாநகர சபைக்கு சொந்தமான மலசலகூட அமைப்பை தற்காலிகமாக குத்தகைக்கு விடல்.

**2022.05.13ம் திகதி**
**கண்டி மாநகர சபையில்**

**கே.கே.ஜி.டி.ஐ.பீ. விஜேதிலக்க**
**மாநகர ஆணையாளர்**

---

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி, 2020 டிசம்பர் 05ஆம் திகதி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**ரோச கட்டு உனகூருவ (பிரைவட்) லிமிட்டட்**
பதிவு இலக்கம் :
**PV 00247496**
பதிவு முகவரி :
**இல. 53/3B, கிரிகரீஸ் வீதி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு-07.**

**சபையின் சார்பாக,**
**கிரிகரிஸ் பார்ட்னர்ஸ்,**
**கம்பனி செயலாளர்,**
**53/3, கிரிகரிஸ் வீதி,**
**கொழும்பு-07.**

---

Replies to Classifieds & Casual Advertisements published C/o the **Daily News** should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

---

## சுகாதார அமைச்சு
### தேசிய போட்டிரீதியிலான விலைமனுக் கோரல் முறைமையின் கீழ், வைத்தியசாலைக்கு பச்சை உணவுப் பதார்த்தங்களை வழங்கல் 2022/ 2023
### அனைத்து விலைமனுதாரர்களிற்குமான அறிவித்தல்

மேற்படி பெறுகை தொடர்பாக, 2022.04.28 அன்று இப்பத்திரிகையில் பிரசுரமான பெறுகை அறிவித்தல் தொடர்பானது.

அதன் பிரகாரம் 2022.05.19ஆம் திகதிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் இறுதித் தினம் மற்றும் விலைமனுத் திறக்கும் திகதி 2022.06.01ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதென தயவு செய்து கவனிக்கவும். மேலும் விலைமனுப் பிணையம் செல்லுபடிக்காலம் 2022.09.28 அன்று வரை நீடிக்கப்படல் வேண்டும். அவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மாற்றமின்றி அவ்வாறே இருக்குமென மேலும் அறிவித்துக் கொள்கின்றேன்.

**தலைவர்,**
**அமைச்சின் பெறுகை 'B' குழு,**
**சுகாதார அமைச்சு**

---

**2015ஆம் ஆண்டு 15ஆம் இலக்க தேசிய ஔஷத ஒழுங்குபடுத்தல் சபை இலக்கம் 131(1)(இ) உள்ள சட்டத்தின் பிரகாரம் மற்றும் கௌரவ நீதிமன்ற கட்டளையின் படி இலங்கை வாழ் மக்களிடம் மன்னிப்பு கோருகின்றோம்.**

இலக்கம் 95/4/A கமத்கொடல்ல ஜா-எல முகவரியினை வதிவிடமாகக் கொண்ட எ.டபிள்யூ.எ. ஹஷினி லக்ஷிகா என்பவரும், இலக்கம் 13, கொழும்பு வீதி கட்டுநாயக்காவை வதிவிடமாகக் கொண்ட ஜெயவீரகே ரவீன் மல்பிறிய பெனாண்டு என்வரும் 2015 இலக்கம் 15 தேசிய ஔஷத ஒழுங்குபடுத்தல் சபை இலக்கம் 106 (2) (அ), 120 (2) பிரிவை மீறிய தன் பிரகாரம் கௌரவ மஹர நீதவான் நீதிமன்றத்தின் முன்னிலையில் குற்றவாளியாவதுடன் இலக்கம் 131(1) (இ) சட்டத்தின் படி இத்தவறை திரும்பவும் செய்யாத படி இலங்கை வாழ் மக்களிடம் மன்னிப்பு வேண்டி நிற்கின்றோம்.

---

## இலங்கை தேசிய நூலகத்திற்கு ஓலைச்சுவடிகளை கையகப்படுத்தல்

இலங்கை தேசிய நூலகம் இலங்கையிலுள்ள நூலகங்களின் முதல் தர நூலகம் ஆவதுடன் அது இலங்கைக்கே உரித்தான விசேட புத்தக சேகரிப்பொன்றைக் கொண்ட நூலகமாகும் உலகின் ஏனைய நாடுகளிலுள்ள தேசிய நூலகங்கள் போலவே, இலங்கை தேசிய நூலகத்தின் முன்னிய நோக்கமானது இந்நாட்டின் வெளியீடுகளான சகல ஆவண மரபுரிமைகளை ஒன்று சேர்த்தல், பாதுகாத்தல் மற்றும் தற்கால சந்ததியினர் போலவே எதிர்கால சந்ததியினதும் பயன்பாட்டை நோக்காகக் கொண்டு பாதுகாத்து நடத்திச் செல்லலாகும். இந்நோக்கைப் பூர்த்தி செய்வதற்காக காலத்திற்கு காலம் வெளியிடப்படும் புத்தகங்கள் உள்ள ஏனைய தகவல்களை சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் பல்வேறு முறைகளின் ஊடாக இந்நாட்டில் வெளியிடப்பட்ட பழைய புத்தகங்களை ஒன்று சேர்ப்பதற்காக பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத் திட்டத்தின் கீழ் இந்நாட்டின் பல்வேறு இடங்களில் போலவே தனி நபர்களிடம் இருக்கும் ஓலைச் சுவடிகளை ஒன்று சேர்க்கும் வேலைத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒன்று சேர்க்கப்படும் ஓலைச் சுவடிகள் முறையாக பாதுகாக்கப்பட்டு, பொது வாசகர்களின் பிரயோசனத்திற்காக இலங்கை நூலகத்தில் வைக்கப்படுவதற்கு நடவடிக்கையெடுக்கப்படும். அதனடிப்படையில் உங்களிடம் உள்ள ஓலைச் சுவடிகளை இலங்கை நூலகத்திற்கு வழங்குவதற்கு ஆர்வம் காட்டுவதாயின் தலைவர், தேசிய நூலகம் மற்றும் ஆவணவாக்கல் சேவை சபை, இல. 14, நிதஹஸ் மாவத்தை, கொழும்பு-07 என்ற முகவரிக்கு அறிவிக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்வதுடன் தொலைபேசி இல. 011-3428363 மூலம் மேலும் விசாரித்தறியலாம்.

**இலங்கை தேசிய நூலக,**
**ஆவணவாக்கல் சேவை சபை**
**கல்வி அமைச்சு**
**இல. 14, நிதஹஸ் மாவத்தை,**
**கொழும்பு-07.**

NATIONAL LIBRARY OF SRI LANKA

---

## கேள்விப் பத்திர அறிவித்தல்
### பதிவாளர் நாயகம் திணைக்களம்
### போட்டோ பிரதி சேவையினை வழங்குதல்

இந்த திணைக்களத்தின் தீவு முழுவதும் அமைந்துள்ள கிளை அலுவலகங்கள் 53 இற்காக 2022/23 வருடத்திற்காக அலுவலகங்களில் உள்ள அரசாங்கத்தின் கடித ஆவணங்களின் போட்டோ பிரதிகளினைப் பெற்றுக் கொள்வதற்காக திணைக்கள கேள்வி சபையின் தலைவரினால் 2022.06.09ந் திகதி பி.ப. 02.00 மணி வரை கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

02. கேள்வி ஆவணங்களில் காட்டப்பட்டுள்ள இணைப்பின் பிரகாரம் வெவ்வேறாக அல்லது அனைத்து அலுவலகங்களுக்கும் பட்டியற்படுத்தப்பட்ட அலுவலக குறிப்பின் வலயத்தின் கீழ் உள்ள அனைத்து அலுவலகங்களுக்கும் கேள்வியினை சமர்ப்பிக்கும் இயலுமை உள்ளது. கேள்வி ஆவணங்கள் 2022.06.09 ந் திகதி மு.ப.11.00 மணி வரை மீள செலுத்தப்படாத ரூ.12,500.00 கட்டணத்தினை இந்த திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை கணக்காளர் (வழங்கல்) இடம் வழங்கி பெற்றுக் கொள்ள இயலும் என்பதுடன் தொலைபேசி இலக்கம் 011- 3070870 ஆகும். தேவையாயின் கட்டணமின்றி கேள்வி ஆவணங்களினை இந்த அலுவலகத்தில் பரிசீலனை செய்து பார்க்க இயலும்.

03. முன் கேள்வி கலந்துரையாடல் கேள்வியாளர்களுடன் 2022.06.03 ந் திகதி மு.ப.10.00 மணிக்கு பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் நடாத்தப்படும்.

04. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம் 645,000.00 ரூபாய்கள் கேள்வி பாதுகாப்பு பிணையுடன் 02 பிரதிகளுடன் கூடியதாக முத்திரையிட்டு 2022.06.09 ந் திகதி மு.ப.02.00 மணிக்கு முன்பதாக இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடல் அல்லது பதிவுத் தபாலில் பதிவாளர் நாயகம், பதிவாளர் நாயகம் திணைக்களம், இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை, பத்தரமுல்லை என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் வைக்கப்பட்டுள்ள உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டோப் பிரதி சேவையினை வழங்குவதற்காக விலை மனுக் கோரல் 2022/23" என குறிப்பிடப்டுல் வேண்டும்.

05. 2022.06.09 ந் திகதி பி.ப.02.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படுவதுடன் அந்நேரத்திற்கு பின்னர் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர் நாயகம்,**
**கேள்விச் சபையின் தலைவர்**

**பதிவாளர் நாயகம் திணைக்களம்,**
**இல. 234/A3,**
**டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,**
**பத்தரமுல்லை**

---

**திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க அமைச்சு**

**தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை**

## பெறுகை அறிவித்தல்

**தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் 25 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் அந்த அலுவலகங்களோடு இணைந்த பயிற்சி நிலையங்களில் ஒரு வருட காலத்திற்கு சுத்திகரிப்பு சேவையை வழங்குவதற்கு தகைமை வாய்ந்த மற்றும் அதிகாரபூர்வ விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரல்**

மேற்படி விடயம் தொடர்பில் 2022 ஏப்ரல் மாதம் 20ஆம் திகதிய தினகரன், தினமின மற்றும் டெய்லி நியூஸ் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம் 2022 மே மாதம் 13ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முடிவுறுத்தப்படவிருந்த விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் திகதி மற்றும் நேரம் 2022 மே மாதம் 25ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும், விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2022 மே மாதம் 20ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு இராஜகிரிய தலைமை அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும் என்பதாக சகல விலைமனுதாரர்களுக்கும் இத்தால் அறியத்தரப்படுகின்றது.

நாட்டில் நிலவும் ஊரடங்குச் சட்ட நிலைமை காரணமாக 2022-05-12ஆம் திகதிக்கு முன் விலைமனுப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாமல் போனதால் விலைமனுதாரர்கள் 2022-05-24ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளலாம் என மேலும் அறியத்தரப்படுகின்றது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை,**
**971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,**
**வெலிகட,**
**இராஜகிரிய.**



# பெறுகை அறிவித்தலின் திருத்தம்

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
## நீர்ப்பாசன அமைச்சு
## நீர்ப்பாசனத் திணைக்களம்
## தேசிய போட்டி ரீதியிலான விலைகோரல்

2022 ஏப்ரல் 27ஆம் திகதி தினகரன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விலைக்கோரல் அறிவித்தலில் பின்வருமாறு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதாக தயவுடன் அறிவித்துக்கொள்ளப்படுகின்றது.

| விலைக் கோரல் இல. | வழங்கல் விபரங்கள் | எண் ணிக்கை | மீளளிக்கப் படாத வைப்பு (ரூபா) | விலைக் கோரல் செல்லுபடி யாக வேண்டிய காலம் | விலைக் கோரல் பிணை முறித் தொகை (ரூபா) | பிணை முறி செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|
| | அளவை உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் | | | | | |
| IFB/ID/GOSL/ NCB/2022/005 | **Lot 01 -** Procurement of Total Stations | 05 | 6,000.00 | 2022 ஆகஸ்ட் 17ஆம் திகதி வரை | 100,000.00 | 2022 செப்டெம்பர் 14ஆம் திகதி வரை |
| | **Lot 02 -** Procurement of Auto Levels | 25 | | | 50,000.00 | |
| IFB/ID/GOSL/ NCB/2022/009 | உமா ஓய கீழ் நீரோட்ட அபிவிருத்தித் திட்டத்திற்கு 50kg சீமெந்து மூடைகளை வழங்குதல் | 30,000 மூடைகள் | 18,000.00 | 2022 ஆகஸ்ட் 31ஆம் திகதி வரை | 1,000,000.00 | 2022 செப்டெம்பர் 28ஆம் திகதி வரை |

விலைமனுக் கோரல் ஆவணங்கள் 2022 ஜூன் 01ஆம் திகதி பி.ப. 03.00 மணி வரை விலைமனுக்கள் வழங்கப்படும். 2022 ஜூன் 02ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் அதன்பின் உடன் திறக்கப்படும் என்பதுடன் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

2022 ஏப்ரல் 27ஆம் திகதி இந்தப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பெறுகை அறிவித்தலில் உள்ள விடயங்கள் மாற்றாமல் அவ்வாறேயிருக்கும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**நீர்ப்பாசனத் திணைக்களம்,**
**இல. 230, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07**

**திகதி: 2022-05-19**

---

## இலங்கை துறைமுக அதிகார சபை

# திருத்தம் பற்றிய அறிவித்தல்

1. 2022 ஏப்ரல் 21 மற்றும் 22 மற்றும் 2022 ஏப்ரல் 28 மற்றும் 29ஆம் திகதிகளில் தினகரன், தினமின மற்றும் டெய்லி நியூஸ் பத்திரிகைகளில் இலங்கைத் துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்ட கேள்வியின் திகதிகள் பின்வரும் வகையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்பதுடன் அவை பின்வருமாறு திறக்கப்படும்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | முன்பு பிரசுரிக்கப்பட்ட முடிவுறுத்தப்படும் திகதி | புதிய முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| CMS/LP/21/PT/02/52 | Caltex Delo 1000 Marine SAE 40 16,380 Liters | 11/05/2022 பி.ப. 1.30 | 25/05/2022 பி.ப. 1.30 |
| CMS/LP/22/PT/13/053 | Motor Tyres 1000 X 20 16 Ply ( Cross Ply ) -100 Nos | 12/05/2022 பி.ப. 1.30 | 26/05/2022 பி.ப. 1.30 |
| CMS/LP/22/PT/04/003 | 20 Pair, 0.5MM, Non Armored, Jelly Filled, Under Ground Telephone Cable – 2000 Meters | 12/05/2022 பி.ப. 1.30 | 26/05/2022 பி.ப. 1.30 |
| CMS/LP/22/PT/01/001 | PVC Double Insulated Wires | 12/05/2022 பி.ப. 1.30 | 26/05/2022 பி.ப. 1.30 |
| CMS/LP/22/PT/09/018 | Supply of Design, Supply, Implementation, Migrate Integration, Training, Commissioning and Maintenance of Human Resources Information System (HIRS) for Sri Lanka Ports Authority | 13/05/2022 பி.ப. 1.30 | 27/05/2022 பி.ப. 1.30 |
| CMS/LP/22/PT/20/001 | 01 No. Forklift Truck | 13/05/2022 பி.ப. 1.30 | 27/05/2022 பி.ப. 1.30 |

**ஏனைய நிபந்தனைகள் மாற்றமின்றி அவ்வாறேயிருக்கும்.**
**வழங்கல் பிரிவு,**
**இலங்கைத் துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, கொழும்பு 01.**

**தொலைபேசி எண்கள் : 2482231, 2483338, 2482409, 2483766, 2482832**
**தொலைநகல் இல. : 2381652, 2470443**

---

NLDB

# தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் புதிய பசும் பாலை விற்பனை செய்வதற்கு விலைமனுக்களை கோருவதற்கான அறிவித்தல்

2022 ஜூலை 01ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பின்வரும் NLDB பண்ணைகளிலிருந்து புதிய பசும் பாலை விற்பனை செய்வற்காக உள்நாட்டு கொள்வனவாளர்கள் / நிறுவனங்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கொழும்பு-05, இல. 40, நாவல வீதி, நாராஹென்பிட்டி, தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் தலைவர் அழைக்கிறார்.

| பண்ணை | முகவரி | ஒரு நாளைக்கு கிடைக்கத்தக்க பசும் பாலின் அதிகபட்ச சராசரி அளவு (லீற்றர்) |
|---|---|---|
| போபத்தலாவ | போபத்தலாவ பண்ணை, போபத்தலாவ | 2,500 |
| மெனிக்பாலம் | மெனிக்பாலம் பண்ணை, போத்தலாவ | 3,000 |
| டயகம | டயகம பண்ணை, டயகம | 3,000 |
| ரிதியகம | ரிதியகம பண்ணை, அம்பலாந்தொட்ட | 6,000 |
| ரொசிட்டா | ரொசிட்டா பண்ணை, கொட்டகல | 200 |
| மரந்தாவில | மரந்தாவில பண்ணை, பிங்கிரிய | 200 |
| ஆண்டிகம | ஆண்டிகம பண்ணை, தம்பதெனிய | 550 |
| கல்பொக்குண | கல்பொக்குண பண்ணை, உடபத்தாவ | 200 |
| கொவுல்வெவ | கொவுல்வெவ பண்ணை, நாரம்மல | 500 |
| ருக்கத்தென்ன | ருக்கத்தென்ன பண்ணை, பிங்கிரிய | 250 |
| நாரங்கல்ல | நாரங்கல்ல பண்ணை, கித்தலாவ | 200 |
| சிறிங்கபத | சிறிங்கபத பண்ணை, படல்கம | 200 |
| மெல்சிரிபுர | மெல்சிரிபுர பண்ணை, மெல்சிரிபுர | 250 |
| நிக்கவெரட்டிய | நிக்கவெரட்டிய பண்ணை, நிக்கவெரட்டிய | 150 |
| ஓயம்மடுவ | ஓயம்மடுவ பண்ணை, ஆலயபத்துவ | 100 |

கொள்வனவாளர்கள் பின்வரும் மாதிரி வடிவத்தின் பிரகாரம் விலைமனு ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட கொள்வனவுதாரர்/கள் மேற்படி ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கு 07 நாட்களுக்கு முன் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையுடன் சட்டபூர்வமான உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட இணங்குதல் வேண்டும் என்பதுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 02 வாரங்களுக்குள் கொள்வனவு செய்யும் பாலின் அளவுக்குப் பெறுமதியான வங்கி வைப்பு / வங்கி உத்தரவாதத்தை வைத்தல் வேண்டும். இயைபுடைய பண்ணைகளிலிருந்து பாலை போக்குவரத்துச் செய்தல் இயைபுடைய கொள்வனவாளர்களாலேயே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**திகதி:**

தலைவர்,
தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை,
இல. 40, நாவல வீதி,
நாராஹென்பிட்டி, கொழும்பு-05.

### தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையிடமிருந்து புதிய பசும் பாலைக் கொள்வனவு செய்வதற்கான விலைக்கோரல்

கொள்வனவாளர் / நிறுவனத்தின் பெயர் : ..........................................

கொள்வனவாளரின் உத்தியோகபூர்வ முகவரி : ..........................................

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள விலைகளில் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையிடமிருந்து பின்வரும் அளவான புதிய பசும் பாலைக் கொள்வனவு செய்வதற்கு நான்/நாம் இணங்குகிறேன்/இணங்குகிறோம்.

| | பண்ணை | ஒரு லீற்றர் புதிய பசும் பாலிற்கான விலை (ரூபா) | ஒரு நாளைக்கு கொள்வனவு செய்ய இணங்கும் புதிய பசும் பாலின் அளவு (லீற்றர்) | Fat % | SNF % |
|---|---|---|---|---|---|
| 01 | ................................ | | | | |

ஏனைய விலைகள்:

........................ ..........................................................

திகதி கொள்வனவாளர்/நிறுவனத்தின் உத்தியோகபூர்வ முத்திரை மற்றும் கையொப்பம்

முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைக் கோரல்களை 2022-06-02ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்குப் பிந்தாமல் இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கோரல் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது தலைவர், தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை, த.பெ. இல. 1748, இல. 40, நாவல வீதி, நாராஹென்பிட்டி, கொழும்பு-05 எனும் முகவரிக்குப் பதிவு தபாலில் அனுப்புதல் வேண்டும். தயவு செய்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விலைக்கோரலின் பெயரைக் குறிப்பிடவும். தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

அன்றைய தினமே பி.ப. 2.30 மணிக்கு விலைக்கோரல்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதன் பேரில் விலைக்கோரல் திறக்கும் நிகழ்வில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.

**தலைவர்,**
**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை,**
**இல. 40, நாவல வீதி,**
**நாராஹென்பிட்டி,**
**கொழும்பு-05.**
**தொலைபேசி: 011-2501701/2, 077-3782127**

---

## இலங்கை துறைமுக அதிகார சபை

## பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

# அழுகும் பண்டங்களின் விற்பனை

**ஏல விற்பனைத் தினம் :** 2022.05.19

**எனது இலக்கம் : LD/S/SLPA/2022/04/PC-07,LD/S/CICT/2022/04/PC-13**

கொழும்பு துறைமுகத்தின் JCT மற்றும் CICT முற்றவெளிகளில் வைக்கப்பட்டுள்ள அழுகும் தன்மையிலுள்ள பண்டங்களுடன் கூடிய மூன்று கொள்கலன்களைக், (மாதுளை மற்றும் தோடை) கொள்வனவு செய்து அகற்றிக் கொள்வதற்காக, 2022.05.19 அன்று 14.00 மணிக்கு பண்டாரநாயக்க தடாகத்தின் நலன்புரிக் கட்டிடத்தில் இவ் ஏல விற்பனை நடைபெறும்.

வெற்றிகரமான விலைமனுதாரர்கள், இதற்காக தாவர தனிமைப்படுத்தல் நிறுவனத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டுமென்பதுடன், அச்சான்றிதழைப் பெற்றுக்கொள்ளக்கூடிய விலைமனுதாரர்கள் மாத்திரம் இதற்காக விண்ணப்பிக்கும் படி கேட்டுக்கொள்கின்றேன். குறித்த சான்றிதழை (05) ஐந்து நாட்களிற்குள் பெற்றுக்கொண்டு சமர்ப்பிக்கத்தவறும் விலைமனுதாரர்களின் பிணைத் தொகையானது, துறைமுக அதிகார சபைக்கு உரித்தாகும்.

ஏல விற்பனை களத்திற்கு உட்பிரவேசிப்பதற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு மற்றும் விலைமனுப்படிவங்கள், மீளளிக்கப்படாத ரூபா 1,000/- இற்கான தொகை பெசேவ மற்றும் மீளளிக்கப்படும் ரூபா 200,000/- இற்கான பிணைத் தொகையைச் செலுத்தி, கெனல் முற்றவெளி, இல. 15, லோட்டஸ் வீதி, கொழும்பு-01 இலுள்ள, இலங்கை துறைமுக அதிகார சபையின் சேவை வழங்கல் பிரிவின் விற்பனைப் பிரிவின் அலுவலகத்தில், 2022.05.19 அன்று 08.30 மணி முதல் 11.00 மணி வரையான காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம். அன்றைய தினம் 12.00 மணி முதல் 14.00 மணி வரை பண்டங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம். மேலதிக விபரங்களிற்காக (www.slpa.lk) என்ற இணையத்திற்குப் பிரவேசிக்கவும்.

**பிரதான முகாமையாளர் (சேவை வழங்கல்)**
**2022.05.19**
**சேவை வழங்கல் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை.**

---

THE WORLD BANK
IBRD - IDA | WORLD BANK GROUP

Agriculture Modernization Project

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
**கமத்தொழில் அமைச்சு**
**Ministry of Agriculture**

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு**

**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம் - கமத்தொழில் அமைச்சு**

**IDA Credit No.: 5873 LK**

# பெறுகை அறிவித்தல்

**Supply and Delivery of Tissue Culture Banana Plants (Cavandish), Chili Seeds (MICH-HY-1 HYBRID) and Fruit covering Bags (Guava, Mango and Banana) for Northern, Eastern, Central & Uva Provinces.**

2022.04.24 ஆம் திகதியன்று சிலுமின மற்றும் சண்டே ஒப்சேவர் பத்திரிகைகளில் கீழே குறிப்பிட்டுள்ள அதிகாரியினால் பிரசுரிக்கப்பட்ட மேலேயுள்ள பெறுகை அறிவித்தல் தொடர்பானது. நாட்டில் நிலவும் தற்போதய சூழ்நிலையை கருத்திற் கொண்டு பெறுகை அறிவித்தலானது பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது.

1. கேள்வி ஆவணங்களை வழங்கும் காலப்பகுதியானது 2022 மே 30 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளதுடன் விலைமனுக்களை திறத்தலானது அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே 2022 மே 30 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு நடைபெறும்.
2. விலைமனுப்பிணையின் செல்லுபடியாகும் காலமானது 2022 ஓகஸ்ட் 22 ஆம் திகதியென திருத்தப்பட்டுள்ளது.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 0777419521 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக கமத்தொழில் அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட பெறுகைத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
4. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிப்பிட்டிய பாதை,**
**பத்தரமுல்ல.**
**தொலைபேசி: 0112696086 அல்லது 0777419521**

திகதி: 17.05.2022

---


Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer adz it's what you want Classified




For 15 Words Rs. 500/-

* Cost of each additional word Rs. 20/-

Ramani - 077 7 278 948 / Gayani - 011 2 429 342/ 343 / Piyumi - 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

# விலைமனுக்கோரல்

## வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி

**விலைக்குறிப்பீட்டு இலக்கம் : 022/T/2022**

**ஒரு வருட காலத்துக்காக 336,000 கழிவறை பேப்பர் ரோல்களை (Toilet Paper Roll) வழங்குதல்**

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் தவிசாளரால், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்- கட்டுநாயக்க, கொழும்பு விமானநிலையம் - இரத்மலானை மற்றும் மத்தளை -இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையம்- மத்தளை என்ற விமானநிலையங்களில் பாவனை செய்வதற்காக மாதாந்தம் 28,000 கழிவறை பேப்பர் ரோல்களை வழங்கப்படும் வகையில் ஒரு வருட காலத்துக்காக 336,000 கழிவறை பேப்பர் ரோல்கள் வழங்குவதற்காக விலைக்குறிப்பீடுகள் அழைக்கப்படுகின்றன.

விலைக்குறிப்பீட்டு ஆவணத்தொகுதி திருப்பித் தரப்படாத **ரூபா நான்காயிரம் (ரூபா 4,000.00)** காசு வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்காவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவிற்குச் செலுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியுமாக இருப்பதுடன் அதற்காக விலைக்கூறுநரால் எழுத்துருவிலான கோரிக்கை முன்வைத்தல் வேண்டும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்காவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவினால் **2022.05.20** ஆந் திகதி முதல் **2022.06.20** ஆந் திகதி வரை ஏதேனும் வேலைசெய்யும் நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணிவரையிலான காலப்பகுதிவரை விலைக்குறிப்பீட்டு ஆவணத்தொகுதிகளை பெற்றுக் கொள்ள முடியும். தேவைப்படுமாயின் மேலே கூறப்பட்ட விலைக்குறிப்பீட்டு ஆவணங்கள் வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு அலுவலகத்திலிருந்து இலவசமாக பார்வையிட முடியும்.

விலைக்கூறுநர்கள் அவர்களின் விலைக்குறிப்பீடுகள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேள்விகளை செறுகும் பெட்டியில் வைப்பீடு செய்தல் வேண்டும். மேலும், விலைக்கூறுநர்களின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களினால் முத்திரைக் குறியிடப்பட்ட விலைக்குறிப்பீடுகள் மேலே கூறப்பட்ட விலாசத்துக்கு ஒப்படைக்க முடியும்.

விலைக்குறிப்பீடுகளைப் பொறுப்பேற்றல் **2022.06.21 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00** மணிக்கு முடிவடைவதுடன் உரிய விலைக்குறிப்பீடுகளைத் திறத்தல் அத்துடன் வரையறுக்கப்பட்ட விமானநிலையம் மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் இடம்பெறும். விலைக்குறிப்பீடுகளை விலைக்கூறுநர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு விலைக்குறிப்பீடுகளைத் திறக்கும்போது அதில் பங்கேற்க முடியும்.

விலைக்குறிப்பீட்டு உத்தரவாதத்திற்காக இலங்கையில் செயற்படுகின்ற அரசின் மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற வங்கியொன்றினால் வெளியிடப்பட்ட தவிசாளர், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் கம்பனி வேண்டப்படும் அடிப்படையில் செலுத்தும் வகையில் வெளியிடப்பட்ட ரூபா இரண்டு இலட்சத்து முப்பத்தெட்டாயிரம் (ரூபா 238,000.00) பெறுமதியான வங்கிப்பிணை முறி இவ்விலைக்குறிப்பீட்டுடன் முன்வைக்கப்படுதல் வேண்டும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெறவேண்டுமாயின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின், தொலைபேசி இலக்கம். 011-2264103/011-2264104 ஊடாக அழைப்பதன் மூலம் அல்லது head.scm@airport.lk என்ற மின்னஞ்சல் மூலம் அல்லது www.airport.lk இணையத்தளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (தனியார்) (இலங்கை) கம்பனி,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க.**

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK
IBRD • IDA | WORLD BANK GROUP

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
**கமத்தொழில் அமைச்சு**
**Ministry of Agriculture**

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம் - கமத்தொழில் அமைச்சு**

**IDA Credit No.: 5873 LK**

# பெறுகை அறிவித்தல்

**Supply and Delivery of Plastic Nursery Trays, Polythene Mulch, Insect Proof Nets, Insect Proof Net Fixing Profiles, Galvanized Iron Pipes and Yellow Sticky Traps (cards) for Dry Chili Production Program in Northern, Eastern Central and Uva Provinces.**


2022.04.22 ஆம் திகதியன்று சிலுமின மற்றும் டெயிலி நியூஸ் பத்திரிகைகளில் கீழே குறிப்பிட்டுள்ள அதிகாரியினால் பிரசுரிக்கப்பட்ட மேலேயுள்ள பெறுகை அறிவித்தல் தொடர்பானது.

நாட்டில் நிலவும் தற்போதய சூழ்நிலையை கருத்திற் கொண்டு பெறுகை அறிவித்தலானது பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது.

1. கேள்வி ஆவணங்களை வழங்கும் காலப்பகுதியானது 2022 மே 27 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளதுடன் விலைமனுக்களை திறத்தலானது அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே 2022 மே 27 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு நடைபெறும்.
2. விலைமனுப்பிணையின் செல்லுபடியாகும் காலமானது 2022 ஓகஸ்ட் 17 ஆம் திகதியென திருத்தப்பட்டுள்ளது.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 0777419521 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக கமத்தொழில் அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட பெறுகைத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
4. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிப்பிட்டிய பாதை, பத்தரமுல்ல.**
**தொலைபேசி: 0112696086 அல்லது 0777419521**

**திகதி: 17.05.2022**




# விலைமனுக்களுக்கான அழைப்பு

**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு**

**உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் - PROJECT ID: P 163305**

**கிழக்கு மாகாணம், அம்பாறை**

01. உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் செலவை நோக்கி உலக வங்கியிடம் இருந்து இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கு கடன் நிதி ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள பணிகளுக்கான கொடுப்பனவுகளுக்கு இந்தக் கடனில் பகுதியை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு பணிகளுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்கள் சார்பில் உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு மற்றும் மாகாண திட்ட பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

03. தேசிய போட்டி ரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைகேட்பு நடத்தப்படும்.

04. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதியை பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம் பெறாதவராகவும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA) கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட தரம் மற்றும் சிறப்புத்தன்மையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

05. விலைமனு ஆவணத்தின் 4 ஆம் பிரிவில் தகைமை தேவைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. விலைமனு ஆவணத்தின் (பிரிவு 5) அட்டவணையில் மேலதிக விபரங்கள் தரப்பட்டுள்ளன.

06. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் அட்டவணையில் உள்ள பட்டியலிடப்பட்ட அந்தந்த உள்ளூராட்சி நிறுவனத்தின் தலைவர்/செயலாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப 16.00 மணி வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் அதே இடத்தில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

07. 19. 05. 2022 ஆம் திகதி தொடக்கம் 09.06.2022 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 15.00 மணி வரையில் அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.

08. விலைமனுக்களை 09.06.2022 ஆம் திகதி பி. ப. 15.00 மணி அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகளின் முன் விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.

09. விலைமனுக்கள் கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவலின்படி விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

10. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்களினால் 30.05.2022 ஆம் திகதி பி. ப. 14. 30 மணிக்கு இடம்பெறும். ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் தமது சொந்த செலவில் விலைமனுவுக்கு முந்திய சந்திப்பில் பங்கேற்கலாம்.

11. ஒப்பந்தம் வழங்கப்படுவதில் பெறுகைக் குழுவின் முடிவு இறுதியானது.

12. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கு முன் எந்த நேரத்திலும் இந்த பெறுகையை இரத்துச் செய்ய அல்லது மீளப்பெற தொழில் வழங்குநருக்கு உரிமை உள்ளது.

| Name of Local Authorities | Description of Works & Bid No. | Tenderable Bid Amount (Excluding VAT) (Mn) | Contract Period (Cal-ender Days) | Required Grade & Speciality | Name of Procure-ment Entity | Place of Purchase of Bidding Document and T.P. No. | Price of the Bid Document (Rs.) | Required Bid Security | | The Place, where Bids should be deposited & Bid will be opened | Bid Validity Period up to |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | Bid Security Amount (Rs.) | Validity Period | | |
| Uhana Pradeshiya Sabha | Construction of Weekly Fair Business Outlets at Uhana Town Stage - 1 LDSP/ EP/AMP/ UPS/2022/04 | 29.575 Mn | 180 Calender Days | C5 and C4, Building Construc-tion | Department of Local Government, Eastern Province, Trincomalee | Uhana Pradeshi-ya Sabha 0632250355 | 7,500.00 | 355,000.00 | 03.11.2022 | ACLG Office, Ampara | 06.10.2022 |

**Assistant Project Director (ACLG)**
**Local Development Support Project (LDSP)**
**Ampara District**

**Classified Advertisement** in Several Newspapers at **affordable Rate**

* For 15 Words

SUNDAY OBSERVER aDZ & Silumina - Rs. 700/-
- Cost of each additional word - Rs. 20/-

SUNDAY OBSERVER aDZ & Daily News - Rs. 550/-
- Cost of each additional word - Rs. 20/-

Silumina & Dinamina - Rs. 550/-
- Cost of each additional word - Rs. 20/-

SUNDAY OBSERVER aDZ & வாரமஞ்சரி - Rs. 600/-
- Cost of each additional word - Rs. 20/-

Silumina & வாரமஞ்சரி - Rs. 600/-
- Cost of each additional word - Rs. 20/-

Daily News & தினகரன் - Rs. 250/-
- Cost of each additional word - Rs. 10/-

Dinamina & தினகரன் - Rs. 250/-
- Cost of each additional word - Rs. 10/-

SUNDAY OBSERVER Silumina තරුණී

**Marriage proposal**
in Several Newspapers at affordable Rate

SUNDAY OBSERVER * For 15 Words Rs. 800/- - Cost of each additional word - Rs. 25/-
Silumina * For 15 Words Rs. 600/- - Cost of each additional word - Rs. 25/-

Sunday Observer Marriage proposal can be Published in Silumina by paying additional payment of Rs. 200/-

Silumina Marriage proposal can be Published in Tharunee by paying additional payment of Rs. 300/-

**Please E-Mail your Classified Advertisement / Marriage Proposal to**
**classified@lakehouse.lk**

Easiest way to pay your Advertisement payments
Acc.No. 000000377
BOC LAKE HOUSE BRANCH
Green light for Online Transfer

Call for more Information -
Ramani- 077 7 278 948
Piyumi - 011 2 429 383
Gayani - 011 2 429 347
Lakmali - 011 2 429 342

Hand over your Classified Advertisements to Our nearest **Branch Office**

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411
Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728
Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860
Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

# விலைமனு அறிவித்தல்

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

## எல்கடுவ பெருந்தோட்ட கம்பனி

**விலைமனு இலக்கம்: EPL/PL/TB/T-04/2022-Red Quartz**

**எல்கடுவ பெருந்தோட்ட கம்பனிக்கு உரித்தான ரத்வத்த பெருந்தோட்டத்திலுள்ள ரோச திரிவானா படிவுகளைக் குத்தகைக்கு விடுவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனு கோரப்படுகின்றது**

2022.05.19 முதல் 2022.05.31 அன்று பி.ப.12.30 வரை குறித்த ரத்வத்த பெருந்தோட்ட அலுவலகத்தில் அல்லது இல.320, ஜனவத்து பியச, டீ.பீ.ஜாயா மாவத்தை, கொழும்பு - 10 இல் அமைந்துள்ள எல்கடுவ பெருந்தோட்ட கம்பனியின் உப அலுவலகத்தில் மற்றும் 2022.05.19 முதல் 2022.06.01 அன்று பி.ப.12.30 வரை ரத்வத்தை உக்குவளையிலுள்ள எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியின் பிரதான அலுவலகத்தில் ரூபா 2,000/- இதற்கான மீளளிக்கப்படாத தொகையைச் செலுத்தி இஇதற்கான நிபந்தனைகளுடன் கூடிய விலைமனுப் படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

உரியவாறு பூரணப்படுத்தப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள், 2022.06.01 அன்று பி.ப.1.00 வரை எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியின் ரத்வத்தை, உக்குவளையிலுள்ள பிரதான அலுவலகத்தில் பெறுகைக்குழுவின் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், விலைமனுதாரர்களின் முன்னிலையில் 2022.06.01 அன்று பி.ப.1.00 இற்கு அவை திறக்கப்படும். பெறுகைக்குழுவின் தலைவரின் தீர்மானம் இறுதி தீர்மானமாக அமையும்.

**தொலைபேசி இலக்கம் : 066-2242522 - பிரதான அலுவலகம்**
**066-3682734 - ரத்வத்தை பெருந்தோட்டம்**
**011-2698059 - செயற்பாட்டு அலுவலகம்**

**தலைவர்**
**பெறுகைக்குழு,**
**எல்கடுவ பெருந்தோட்ட கம்பனி,**
**பிரதான அலுவலகம்,**
**ரத்வத்தை, உக்குவளை**

# விலைமனுக் கோரலை நீடித்தல்

## வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்

வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்

Leco பின்வரும் வகையில் விலைமனுக்கள் வழங்குதல் மற்றும் முடிவுறுத்தல் திகதிய நீடித்துள்ளது.

| | |
|---|---|
| விலைக்கோரல் குறிப்பீட்டிலக்கம் | KEL/ADM/PROC/2022(47) |
| விலைக்கோரல் விபரம் | களனி கிளை அலுவலகம், பாவனையாளர் சேவை நிலையம் மற்றும் பேலியகொட காணி |
| விலைக்கோரல் கட்டணம் (மீளளிக்கப்படாதது) | ரூபா 1,000.00 |
| திட்டமிடப்பட்ட விலைக்கோரல் முடிவுறுத்தல் திகதி | 2022 மே 12ஆம் திகதி |
| திருத்தப்பட்ட விலைக்கோரல் முடிவுறுத்தல் திகதி | 2022 மே 25ஆம் திகதி பி.ப. 02.00 மணி (விலைமனுக்கள் 2022 மே 24ஆம் திகதி வரை வழங்கப்படும்) |
| திருத்தப்பட்ட விலைக்கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் | விலைக்கோரல் முடிவுறுத்தல் இறுதி நாள் உட்பட மற்றும் முடிவுறுத்தல் திகதி முதல் 150 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும். |

குறிப்புத் தேவைக்காக விலைக்கோரல் ஆவணத்தின் வரைவை (விலைக்கோரலுக்கு அல்ல) **www.promise.lk** அல்லது **www.leco.lk** எனும் இணைய தளங்களில் பார்வையிடலாம்.

**பிரதான பொறியியலாளர் (கிளை),**
**வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம், அலுவலகம்,**
**62, கண்டி வீதி, தலுகம, களனி.**
**தொலைபேசி : Tel: 011-2917746, 011-2910129**

# விலைமனுக்கோரும் அழைப்பு

**பொலன்னறுவை மாவட்ட செயலகக் கட்டிடத் தொகுதி பிரதேச செயலகம் ஏழு (07), சந்திர மண்டபத்தின் நாடக மண்டபம், வெள்ளை மாளிகை மற்றும் மாவட்ட செயலகம்/ அரசாங்க அதிபரின் உத்தியோக இல்லத்திற்கான பூங்கா மற்றும் சுகாதாரப் பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்கான பெறுகை - 2022 ஆம் ஆண்டு**

ஒப்பந்த இலக்கம் : POL/FRM/F7/02/008
மாவட்ட செயலகம் : பொலன்னறுவை

01. பொலன்னறுவை மாவட்ட செயலகக் கட்டிடத் தொகுதி, பிரதேச செயலகம் ஏழு (07), சந்திர மண்டப நாடக மண்டபம், வெள்ளை மாளிகை மற்றும் மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபரின் உத்தியோக இல்லங்களிற்குப் பின்வருமாறு பூங்கா மற்றும் சுகாதாரப் பாதுகாப்புச் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக தகுதியும் தகைமையும் பெற்றுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களைத் திணைக்களப் பெறுகைக்குழுவின் தலைவர் கோருகின்றார்.

| ஒப்பந்த இலக்கம் | பெறுகையின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை ரூபா | சேவை வழங்கப்பட வேண்டிய நிறுவனங்கள் | சேவை வழங்கல் காலம் | விலைமனு ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினம் மற்றும் விலைமனுத் திறத்தல் |
|---|---|---|---|---|---|
| POL/FRM/F7/02/008 | பொலன்னறுவை மாவட்ட செயலகக் கட்டிடத் தொகுதி பிரதேச செயலகம் ஏழு (07), சந்திர மண்டப நடன மண்டபம், வெள்ளை மாளிகை மற்றும் மாவட்ட செயலகம்/ அரசாங்க அதிபரின் உத்தியோக இல்லத்திற்கான பூங்கா மற்றும் சுகாதாரப் பாதுகாப்புச் சேவையை பெற்றுக் கொள்வதற்கான பெறுகை | 25,000.00 | 1. மாவட்ட செயலகக் கட்டிடத் தொகுதி | புதிய கட்டிடம் திறக்கப்படும் வரை | 2022 ஜுன் 10 அன்று பி.ப.2.00 |
| | | | 2. பிரதேச செயலகங்கள் தமன்கடுவை திம்புலாகல வெலிகந்த லங்காபுர மெதிரிகிரிய ஹிங்குரக்கொட எளஹர | வருடம் ஒன்றிற்காக | |
| | | | 3. சந்திர மண்டப நடன மண்டபம் | வருடம் ஒன்றிற்காக | |
| | | | 4. வெள்ளை மாளிகை | வருடம் ஒன்றிற்காக | |
| | | | 5. மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர் உத்தியோக இல்லம் | வருடம் ஒன்றிற்காக | |

02. இதற்காக ஆர்வமுள்ள தகைமைகளுடைய விலைமனுதாரர்கள், பொலன்னறுவை மாவட்ட செயலகப் பிரதான கணக்காளர்/கணக்காளரிடம் (027-2222061) மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாமென்பதுடன், கீழ்க்காணப்படும் முகவரியில் 2022 மே மாதம் 19 முதல் 2022 ஜுன் மாதம் 09 வரை வார வேலை நாட்களில் மு.ப.09.00 முதல் பி.ப.03.00 வரையான காலப்பிரிவில், தேவையான தகைமைகள் மற்றும் விலைமனு ஆவணங்களை பரிசீலனை செய்து கொள்ளலாம். இதற்காக இலங்கை மத்திய வங்கியில் பதிவுசெய்யப்பெற்றுள்ள வணிக வங்கியொன்றிலிருந்து பொலன்னறுவை மாவட்ட செயலாளரின் பெயரில் பெற்றுக்கொள்ளப்படும், எவ்வேளையிலும் காசாக மாற்றிக் கொள்ளக்கூடிய பிணையமொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03. எழுத்துருவ விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து மற்றும் மீளளிக்கப்படாத ரூபா.1,500.00 இற்கான தொகையை, பொலன்னறுவை மாவட்ட செயலக சிறாப்பரிடம் காசாக மாத்திரம் செலுத்தி, இதற்கான விலைமனுப்படிவத் தொகுதியொன்றை பெற்றுக்கொள்ளலாம்.

04. உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள், பின்வரும் முகவரிக்கு 2022 ஜுன் 10 அன்று பி.ப.2.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது நேரடியாக ஒப்படைத்தல் மேற்கொள்ளல் வேண்டும். விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக விலைமனுதாரர்களின் முன்னிலையில் அவை திறக்கப்படுவதுடன் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்**
**திணைக்களப் பெறுகைக்குழு,**
**மாவட்ட செயலகம்,**
**பொலன்னறுவை.**
**தொ.பே.இல:027-2222061**
**2022.05.19**

# ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

## தோட்ட பராமரிப்பு சேவைக்கான விலைமனுக்களை அழைத்தல்

***(2022.04.01ம் திகதி பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்திற்கு மேலதிகமானது திகதிகளை நீடித்தல்***

1. கீழ்க்காணும் சேவைகளுக்காக தகைமையும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக்குழு (DPC) தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இல | மதிப்பிடப்பட்ட செலவு (மில்லியன்) | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூபா) | விலைமனுப் பிணை (ரூபா) | விலைமனு செல்லுபடி யாதல் |
|---|---|---|---|---|---|
| 01 | தொழில்நுட்ப பீடத்தில் தோட்ட பராமரிப்பு சேவையை வழங்குதல் | 9.0 | 3500.00 | 91000.00 | 11.08.2022 |
| 02 | பொறியியல் பீடத்தில் தோட்ட பராமரிப்பு சேவையை வழங்குதல் | 3.0 | 2000.00 | 30500.00 | 11.08.2022 |

2. எதிர்பார்க்கும் சேவைக் காலம் 2 வருடங்களாகும் (365x2) ஒப்பந்தம் ஆரம்பத்தில் வழங்கப்படுவது, இரண்டாம் வருடத்திற்காக புதுப்பிப்பதற்கு உட்பட்டு ஒரு வருட காலத்திற்காகும். சேவை வழங்குநரின் செயற்பாட்டை கவனத்தில் கொண்டு இப்புதுப்பித்தல் தீர்மானிக்கப்படும். சேவை வழங்குநரின் வேண்டுதலின் பிரகாரம் இரண்டாம் வருடத்திற்காக ஒப்பந்தப் பெறுமதி 5% - 10% வரை அதிகரிக்கப்படும். பொருட்கள், இரசாயனங்களில் செலவுகள் மற்றும் தொழிலாளர் கட்டணங்களின் அடிப்படையில் திணைக்கள பெறுகைக் குழுவினால் வழங்கப்படும் மேம்பாட்டு விகிதாசாரம் தீர்மானிக்கப்படும்.

3. தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் இக்கேள்விச் செயற்பாடுகள் இடம்பெறும்.

4. இது பற்றிய ஆர்வம் காட்டுகின்ற தகைமையான சேவை வழங்குநர்களுக்கு தொ.பே. இல. 011-2802856 ஊடாக உதவிப் பதிவாளர்/ நிறுவனங்கள் (தகவல் மற்றும் சேவைகள்) அழைத்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன். 2022 மே 25ம் திகதி மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை எந்த வேலை நாட்களிலும் கீழேயுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரிசீலிக்கலாம்.

5. இது பற்றி ஆர்வம் காட்டுகின்ற தகைமையான சேவை வழங்குநர்களுக்கு 2022 மே 25ம் திகதி வரையான எந்த வேலை நாட்களிலும் மு.ப. 9.00 இற்கும் பி.ப. 2.30 இற்கும் இடையில் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் சம்பந்தப்பட்ட ஓர் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துவதன் பேரில், கீழேயுள்ள முகவரிக்கு ஓர் எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்யலாம். கட்டணம் செலுத்தும் முறை காசாக பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்திற்கு ஆகும்.

6. 2022 மே 26ம் திகதி மு.ப. 10.30 மணிக்கு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், நிர்வாகக் கட்டிடத்தின் நிர்வாக சபை அறையில் விலைமனுக்கள் மூடப்படும்.

7. கேள்வி உள்ளிடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் மற்றும் கேள்வி திறக்கப்படும் தினத்தை குறிப்பிடுதல் வேண்டும். பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 2022 மே 26 மு.ப 10.30 (கேள்வி மூடப்படும் நேரம்) இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு நுகேகொட, கங்கொடவிலவில் அமைந்துள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உதவிப் பதிவாளர்/ நிறுவனங்கள் (தகவல் மற்றும் சேவைகள்) இற்கு பதிவுத் தபாலில் சமர்ப்பிக்கலாம் அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்புச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்பட்டு அவை திறக்கப்படாமலேயே கேள்விதாரர்களுக்கு திருப்பியனுப்பப்படும். தாமதம் பற்றிய தபாலிடுதலை உறுதி செய்யும் சான்றுகள் ஏற்கப்படமாட்டாது பொறியிடப்பட்ட விலைமனுக்களை ஏற்றுக்கொள்வதற்காக குறித்த நேரம் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர்களுக்கு அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு (ஒரு கேள்விதாரரிற்கு ஒரு பிரதிநிதிகள் வீதம் பொறியிடப்பட்ட விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

8. இறுதித் தீர்மானம் திணைக்கள பெறுகைக் குழுவினால் மேற்கொள்ளப்படும்.

9. மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட விலைமனு செல்லுபடியாகும் திகதி வரை விலைமனுக்கள் செல்லுபடியாகும்

10. சகல கேள்விப் பத்திரத்துடனும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உப பீடாதிபதியின் பெயருக்கு மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படுமாறு, இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ள வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட கேள்விப் பிணையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

**மேற்படி விடயங்கள் சம்பந்தமாக குறித்த முகவரிகள் கீழ்க்காணுமாறு.**

**கேள்விப் பத்திரங்கள் பரீட்சித்தல், விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல், பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஒப்படைத்தல் உதவிப் பதிவாளர் நிறுவனங்கள் (தகவல்கள் மற்றும் சேவைகள்)**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், கங்கொடவில, நுகேகொடை.**

**கேள்விப் பத்திரங்கள் திறத்தல்**
**நிர்வாகக் கட்டிட சபை அறை**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்**
**கங்கொடவில, நுகேகொட**

**தலைவர்/ திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்**
**01.04.2022**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Green Light for Online Transfer
Lake House Branch
Acc. No. 000000377
Inquiries :- Ramani - 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk

இலங்கையுடனான முதல் டெஸ்ட் போட்டி

# பங்களாதேஷ் அணி 465 ஓட்டங்கள் குவிப்பு

இலங்கை அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 465 ஓட்டங்களை பெற்றது.

இலங்கை அணியை விட 68 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. சட்டோக்ராம் நகரில் நடைபெற்று வருகின்ற இந்த டெஸ்ட் போட்டியில் இரு அணிகளும் தங்களது துடுப்பாட்ட பலத்தை வெளிக்காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்றிருந்த இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.



பங்களாதேஷ் அணி சார்பாக தமீம் இக்பால் 133 ஓட்டங்கள் மற்றும் முஸ்பிகுர் ரஹீம் 105 ஓட்டங்கள் ஆகியோர் சதம் பெற்றனர். அத்துடன் அவர்கள் இருவரும் டெஸ்ட் போட்டிகளில் 5 ஆயிரம் ஓட்டங்களையும் கடந்தமை விசேட அம்சமாகும். பங்களாதேஷ் அணி சார்பாக லிட்டன் தாஸ் மற்றும் மஹ்முதுல் ஹசன் ஆகியோர் அரைச்சதம் பெற்றனர். இலங்கை அணி சார்பாக கசுன் ராஜித்த 4 விக்கெட்டுக்களுக்கு 60 ஓட்டங்களையும் அசித்த பெர்னாண்டோ 3 விக்கெட்டுக்களுக்கு 72 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். மஹ்முதுல் ஹஸனின் விக்கெட்டின் பின்னர், விஷ்வ பெர்னாண்டோவின் பிரதியீட்டு வீரராக உள்வாங்கப்பட்ட கசுன் ராஜித இரண்டு விக்கெட்டுக்களை துரித கதியில் கைப்பற்றிய போதும், தமிம் இக்பால் தன்னுடைய 10 ஆவது டெஸ்ட் சதத்துடன் தனது தரப்பிற்கு பெறுமதி சேர்த்தார்.

உபாதை காரணமாக தமிம் இக்பால் மைதானத்தினை விட்டு வெளியேறியிருந்ததோடு, அவர் வெளியேறும் போது 15 பௌண்டரிகள் அடங்கலாக 133 ஓட்டங்களை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணியின் முதல் இன்னிங்ஸை (397) ஓட்டங்களை பெற்றது. பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், நயீம் 6 விக்கெட்டுகளையும் சகிப் அல் ஹசன் 3 விக்கெட்டுகளையும் தைஜூல் இஸ்லாம் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இலங்கை அணி சார்பாக துரதிஷ்டவசமாக அஞ்செலோ மெதிவ்ஸ் 199 ஓட்டங்களை பெற்றிருந்த போது, நயீம் ஹஸனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து இரட்டைச்சதத்தை தவறவிட்டார். இலங்கை டெஸ்ட் அணியை பொறுத்தவரை, சனத் ஜயசூரியவுக்கு அடுத்தப்படியாக 199 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்த இரண்டாவது இலங்கை வீரராக மெதிவ்ஸ் மாறியிருந்தார். துடுப்பாட்டத்தில் மெதிவ்ஸ் மற்றும் சந்திமாலை அடுத்து, குசல் மெண்டிஸ் முதல் நாள் ஆட்டத்தில் 54 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்திருந்தார். 7 விக்கெட்டுகளை போட்டியின் நான்காம் நாள் ஆட்டத்தில் பறி கொடுத்தது பங்களாதேஷ் அணி.



**இலங்கை அணியின் வேகப்பந்துவீச்சாளர் விஷ்வ பெர்னாண்டோ விலகினார்.**

போட்டியின் இரண்டாவது நாள் ஆட்டத்தின்போது, துடுப்பெடுத்தாடிக்கொண்டிருந்த விஷ்வ பெர்னாண்டோவின் தலையில் பந்து தாக்கியிருந்தது. சொரிபுல் இஸ்லாம் வீசிய ஓவரில், விஷ்வ பெர்னாண்டோவின் ஹெல்மட்டில் பந்து தாக்கியது.

இதன் காரணமாக நீண்ட நேரம் சிகிச்சைகளை பெற்றுக்கொண்ட விஷ்வ பெர்னாண்டோ, 3ம் நாள் தேநீர் இடைவேளை வரை துடுப்பெடுத்தாடியிருந்தார். எனினும், தேநீர் இடைவேளையின் பின்னர் அசித பெர்னாண்டோ களமிறங்க, இவர் ஆட்டமிழந்த பின்னர் மீண்டும் விஷ்வ பெர்னாண்டோ துடுப்பெடுத்தாட களமிறங்கினார். அதேநேரம், 2ம் நாளில் இலங்கை அணிக்காக ஓவர்களையும் வீசியிருந்த இவர், 3ம் நாளில் மதியபோசன இடைவேளை வரை பந்து வீசியிருந்தார். இவர் மொத்தமாக 8 ஓவர்கள் பந்துவீசி 42 ஓட்டங்களை வழங்கியிருந்தார்.

பந்து தலையில் தாக்கியமை காரணமாக இவரால் தொடர்ந்தும் இந்த போட்டியில் விளையாட முடியாது என்ற காரணத்தால் முதல் டெஸ்ட் போட்டியிலிருந்து விஷ்வ பெர்னாண்டோ விடுவிக்கப்பட்டார்.

ஐசிசியின் விதிமுறைப்படி பந்து தலையில் தாக்கினால், அவருக்கு பதிலாக மாற்று வீரர் ஒருவரை அணியில் இணைக்கமுடியும். அதன்படி, வேகப்பந்துவீச்சாளர் கசுன் ராஜித அணியில் இணைக்கப்பட்டார் என இலங்கை கிரிக்கெட் அறிவித்துள்ளது.

இன்று போட்டியின் இறுதி நாளாகும்.

OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognizing talent, inspiring greatness
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..........
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..........
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ..........
வாக்களித்தவர் பெயர் : ..........
முகவரி : ..........
மொபைல் இல. : ..........

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:

1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.


நிபந்தனைகள்:

**SLT- MOBITEL** நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 21-05-2022 இல. 08




ஹம்பாந்தோட்டை மாவட்ட அசம்பாவித சம்பவம்;

# அரச மற்றும் தனியார் சொத்துக்களை அழிப்பதால் தீர்வு கிடைப்பதில்லை

## மாவட்ட பிரதானிகள் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் தெரிவிப்பு

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் கடந்த 09 மற்றும் 10 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுமார் 35 தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அரச மற்றும் தனியார் சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதினூடாக தற்பொழுதுள்ள நெருக்கடி நிலைக்கு தீர்வு கிடைப்பதில்லை. பொதுமக்களுக்கு இந்த நிலைமை தொடர்பாக தெளிவினை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலாளர் எச். பீ. சுமனசேகர தெரிவித்தார்.

இந்த தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு சந்தேக நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கபட்டு வருவதாகவும் மாவட்ட செயலாளர் மேலும் தெரிவித்தார்.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் அத்தியாவசிய சேவைகளை முன்னெடுத்து நடாத்துவது தொடர்பான கலந்துரையாடல் சூம் தொழிநுட்பத்தினூடாக (17) நடைபெற்றபோதே மாவட்ட செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் ஹம்பாந்தோட்டை மாவட்ட பாதுகாப்பு, சுகாதாரத் துறைகளின் பிரதானிகள், பிரதேச செயலாளர்கள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

மாவட்ட செயலாளர் இங்கு கருத்து தெரிவிக்கையில், அரச மற்றும் தனியார் சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதினூடாக தற்பொழுதுள்ள நெருக்கடி நிலைக்கு தீர்வு கிடைப்பதில்லை. பொதுமக்களுக்கு இந்த நிலைமை தொடர்பாக தெளிவினை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்தோடு எண்ணெய் நிரப்பு நிலையங்களுக்கு பொலிஸ் பாதுகாப்பினை வழங்குமாறும் அவர் உத்தரவிட்டார்.

இங்கு உரையாற்றிய தங்காலை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்தாவது, கடந்த 09 ஆம் மற்றும் 10 ஆம் திகதிகளில் எமது பொலிஸ் பிரிவிலும் பல்வேறு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதோடு இவற்றில் அதிகமானவை திருட்டுச் சம்பவங்களாகும். ஏனையவை தனிப்பட்ட குரோதத்தினால் மேற் கொள்ளப்பட்டவையாகும் எனவும் அவர் இங்கு தெரிவித்தார்.

# புத்தளம் காஸிமிய்யாவில் புதுமாணவர்கள் சேர்ப்பு

புத்தளம் தினகரன் நிருபர்

புத்தளம் காஸிமிய்யா அரபுக்கல்லூரிக்கு 2022 ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர்.

தமிழ் மொழி மூலம் கிதாபு பிரிவுக்கு ஆண்கள் மாத்திரம் அனுமதிக்கப்படவுள்ளனர்.

2022 ஆம் ஆண்டு பாடசாலைகளில் தரம் 8 அல்லது தரம் 9 இல் கற்றுக்கொண்டிருக்கும் அல்குர்ஆனை சரளமாக பார்த்து ஓதக்கூடிய,

பாடசாலைக் கல்வியிலும் மார்க்கக்கல்வியிலும் ஆர்வம் உள்ளவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், தற்பொழுது கற்றுக்கொண்டிருக்கும் வகுப்பை உறுதிப்படுத்தி அதிபரின் கடிதம், மாணவரின் கல்வி முன்னேற்ற அறிக்கை மற்றும் வேறு தகைமைகளை குறிக்கும் சான்றிதழ்கள் போன்றவற்றின் மூலப் பிரதிகள் மற்றும் புகைப்பட பிரதிகளோடு நேர்முகப்பரீட்சையில் பங்கேற்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இக் கல்லூரியின் கற்கை நெறி காலம் 7 வருடங்களாகும்.

இக்காலப்பகுதியில் க.பொ. த சாதாரண தரம் மற்றும் உயர்தரம்,

அல் ஆலிம் மௌலவி முதவஸ்ஸிதா மற்றும் ஸானவிய்யா, அஹதிய்யா, Diploma in ICT, சிங்களம் மற்றும் ஆங்கில மொழியறிவு என்பன கற்பிக்கப்படுகின்றன.

இதற்கான நேர்முகப்பரீட்சை இம்மாதம் 22 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 க்கு புத்தளம் காஸிமிய்யா அரபுக்கல்லூரியில் இடம்பெறவுள்ளதாக அதிபர் அஷ்ஷெய்க் அப்துல்லா மஹ்மூத் ஆலிம் தெரிவித்துள்ளார்.

ஏலவே விண்ணப்பிக்க தவறியவர்களும் நேரடியாக சமுகம் தர முடியும் என்றும் அதிபர் மேலும் தெரிவித்தார்.

# கனேவல்பொல எரிபொருள் நிலையத்தில் அமைதியின்மை



கெகிராவ குறூப் நிருபர்

கெக்கிராவ கனேவல்பொல எரிபொருள் நிலையத்தில் நேற்று (18) காலை எரிபொருள் நிலைய முகாமையாளர் எரிபொருள் தர முடியாது எனக்கூறியதால் அவ்விடத்தில் அமைதியின்மை ஏற்பட்டது.

அதிகாலை முதல் எரிபொருள் முறையாக விநியோகிக்கப்பட்டு வந்துள்ளது. சுமார் 300 இற்கும் அதிகமான வாகனங்கள் வரிசையில் நின்றுகொண்டிருந்த சந்தர்ப்பத்தில் எரிபொருள் நிலைய முகாமையாளர் திடீரென்று எரிபொருள் தீர்ந்துவிட்டதாக கூறியதால் அவ்விடத்தில் குழுமியிருந்த சாரதிகள் தமது வாகனங்களாலும் அருகேயிருந்த மரக்குற்றிகளாலும் வீதியினை மறித்து கூச்சலிட ஆரம்பித்தனர்.

இதனால் சுமார் 20 நிமிடங்களுக்கு போக்குவரத்தும் தடைப்பட்டிருந்தது. பின்னர் கிராம வாசிகள், சாரதிகள் எரிபொருள் நிலைய முகாமையாளரோடு சுமுகமான முறையில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதையடுத்து பஸ் ரக வாகனங்களுக்கு 10,000/ ரூபாவிற்கும், வான் ரக வாகனங்களிற்கு 5,000/ ரூபாவிற்கும், சிறிய வாகனங்களுக்கும் கொள்கலன்களுக்கும் 3,000/ ரூபாவிற்கும் எரிபொருள் வழங்குவதற்கு எரிபொருள் நிலைய முகாமையாளர் பொருந்திக்கொண்டதோடு மீண்டும் எரிபொருள் வழங்க ஆரம்பிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து சாரதிகள் தமது வாகனங்களை வீதியிலிருந்து அப்புறப்படுத்தியதோடு போக்குவரத்தும் வழமைக்கு திரும்பியமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மே மாதம் 19ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.